# தமிழ்மொழியும் இலக்கியமும்
# தரம் 11

புதிய பாடத்திட்டம் - 2008 தொடக்கம்

## பரீட்சை வினாவிடை முன்னோடி



தொகுப்பு

இ. க. சிவஞானசுந்தரம், M.A,B.A,Dip.in.Edu.

ஆசிரியர் கல்வி வள ஆலோசகர், மேல்மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## புதிய பாடத்திட்டம் - 2008 தொடக்கம்
## பரீட்சை வினாவிடை முன்னோடி

# தரம் - 11

- இந்நூல் க. பொ. த (சாதாரண)தரப் பரீட்சை தமிழ் மொழியும் இலக்கியமும் - 11, கட்டாய பாடம் ஆகும்.
- க. பொ. த (சாதாரண) தரப் பரீட்சையில் உயர்சித்தி பெறப் புதிய பரிமாணம்.


தொகுப்பாசிரியர்

**இ. க. சிவஞானசுந்தரம், M.A**

**B. A. (Cey), P. G. Dip in Edu, M.A (Cey)**

ஆசிரியர் கல்விவள ஆலோசகர்,

மேல்மாகாணம்.



வெளியீடு

**இனிய தென்றல் பப்ளிக்கேஷன்,**

135, கனல்பாங் வீதி, கொழும்பு - 06.

T.P - 011 - 2360239, 5765331.

Rs. 150/-

விலை :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்

நூல் : தமிழ்மொழியும் இலக்கியமும்
தரம் -11

ஆசிரியர் : இ. க. சிவஞானசுந்தரம், M. A

பதிப்புரிமை : ஆசிரியருக்கே,
(இந்நூல் பதிவு செய்யப்பட்டது)

பதிப்பு : 1 தை 2008

வெளியீடு : இனிய தென்றல் பப்ளிக்கேஷன்,
135, கனல் பாங் வீதி,
கொழும்பு -06
Tel : 011 - 2360239, 5765331

கணனிப் பதிவு : ஆ. மதிவதனி,
கொழும்பு - 06.

நூல் அச்சுப்பதிவு : மாணவர் நகலகம்,
சென்னை - 600 001
Tel :- 25382513

Rs. 150/-

ISBN : 955 - 8621 - 14 - 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**தமிழ்மொழியும் இலக்கியமும், தரம் - 11** என்ற 2008 ஆம் ஆண்டு புதிய பாடத்திற்கான இப்பரீட்சை முன்னோடி வினாவிடைகள் மாணவர்கள் தேர்ச்சிசார் மதிப்பீட்டு அலகுப் பரீட்சைகளில், பொதுப் பரீட்சைகளில் அதிவிசேட சித்திபெற வழிவகுக்கும். இப்பாட உள்ளடக்கத்தில் **தரம் - 11** ற்கான பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே இம் முன்னோடி வினாவிடை நூலாக, தமிழ்மொழியும் இலக்கியமும் **(தரம் - 11)** வெளிவந்துள்ளது. இந்நூல் **G. C. E. (O/L)** தர மாணவர்களுக்குப் பொதுப் பரீட்சைகளில் சுட்டிப்பாக வினாக்களுக்கு விடைகள் எழுத, வெற்றிதர நிச்சயமாக வழிசமைக்கும்.

பரீட்சையில் கேட்கப்படும் கேள்விகளுக்கு மாணவர்கள் சுட்டிப்பாக விடை எழுதும் நோக்கமாகக் கிரகித்தல், மனனம் செய்தல் என்பவற்றை இலகுபடுத்தும் நோக்கமாக இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் பலதரப்பட்ட வினாக்களுக்கான விடைகளைக் கொண்டுள்ளது. மாணவர் தேர்ச்சி மட்டத்தை அடைந்து, விசேட சித்தி பெற இந்நூல் நிச்சயம் துணையாக அமையும். **ஆசிரியப் பெருந்தகைகளும், மாணவர்களும் இந்நூலை இனிதே வரவேற்பார்கள் என மனப்பூர்வமாக நம்புகிறேன்.**

இந்நூலைச் சிறந்த முறையில் கணனி ஆக்கம் செய்து உதவிய **செல்வி ஆ. மதிவதனி** அவர்களுக்கும் நூலுருவாக்கம் செய்த **மாணவர் நகலகம் சென்னை** உறுப்பினர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

**"வாழ்க தமிழ்மொழி வளர்க தமிழ்மொழி"**

ஆசிரியர்

**இ. க. சிவஞானசுந்தரம், எம்.ஏ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தெய்வ வணக்கம்

பல் உயிரும் பல உலகும்
படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம் பொருள் முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும்
கவின் மலையாளமும் துளுவும்
உன் னுதரத்(து) உதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலகவழக்(கு)
அழிந்தொழிந்து சிதையா உன்
சீர்இளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துமே

-மனோன்மணீயம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


பக்கம்

1. நல்லமரமும் நச்சுமரமும் ........................................ 1 - 14
2. தனிப்பாடல்கள் ........................................ 15 - 16
   I. காளமேகப்புலவர்
   II. இராமச்சந்திர கவிராயர்
   III. நமச்சிவாயப் புலவர்
3. மங்கையர்க்கரசியின் காதல் ........................................ 17 - 34
   (வ. வே. சு. ஐயர்)
4. கவிதைகள் ........................................ 35 - 52
   I. முன்னோக்கு - முருகையன்
   II. நிழலின் நினைவு - சிவசேகரம்
   III. கடற்புறம் - ஜெயபாலன்
5. பார்வைகள் (டாக்டர் நந்தி) ........................................ 53 - 64
6. நீதிப்பாடல்கள் ........................................ 65 - 74
   திருக்குறள்
   நாலடியார்
   பழமொழி நானூறு
   நான்மணிக்கடிகை
   வாக்குண்டாம்
   நல்வழி
   முதுமொழிவெண்பா
   பழமொழிப் போதனை
7. நட்சத்திரக் குழந்தைகள் ........................................ 75 - 96
   (பி. எஸ். ராமையா)
8. நந்திக் கலம்பகம் ........................................ 97 - 118
9. பாரதியார் கவிநயம் ........................................ 119 - 132
   (சு. விஸ்வநாதன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது

எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது

எது நடக்க இருக்கிறதோ

அதுவும் நன்றாகவே நடக்கும்

உன்னுடையதை எதை இழந்தாய்

எதற்காக நீ அழுகிறாய்?

எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ,

அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது

எதைக் கொடுத்தாயோ,

அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவனுடைய தாகின்றது

மற்றொரு நாள், அது வேறொருவனுடைய தாகும்.

**இதுவே உலக நியதியும்**
**எனது படைப்பின் சாராம்சமாகும்**
**(பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01. நல்லமரமும் நச்சுமரமும்

1. **அரசிளங்குமரன், தோழனுடன் கானகத்திற்கு எதற்காகச் சென்றான்? எதற்காக இவர்கள் சோர்வடைந்தனர்?**

◈ அரசிளங்குமரன் விரும்பியவாறு வேட்டையாடச் சென்றான்.

◈ அவர்கள் விரும்பியபடி வேட்டையாட வேங்கையும், வேழமும் (யானை) அகப்படவில்லை. இதனால் எங்கணும் அலைந்து திரிந்து அலக்கணுற்றனர்.

◈ பசியால் மெலிந்து, வெயிலால் உலர்ந்து இருவரும் தளர்ந்து சோர்ந்தார்கள்.

2. **அரசிளங்குமரன் ஏன் தோழனது தோளைப் பற்றிக் கொண்டு வழி நடந்தான்?**
**சிற்றூரொன்று அருகே வந்தபோது இருவரும் எந்நிலையில் இருந்தனர்?**

◈ கதிரவனின் வெப்பத்தினால் அரசிளங்குமரனின் தலை நோயுற்றபடியால் தோழனது தோளைப் பற்றி நடந்தான்.

◈ சிற்றூரின் அருகே வந்ததும் இருவரும் மெய்சோர்ந்து, நாவரண்டு அடியெடுத்து நடப்பதற்கு வலியற்றவராயினர்.

3. **நடப்பதற்கு வலியற்றிருந்த இவர்களுக்குப் புத்துயிர்பெற வாய்ப்பளித்தது எது? இவர்கள் எவ்விதம் புத்துயிர் பெற்றனர்?**

◈ இன்முகம் கொண்டு அழைப்பதுபோலத் தென்றல் காற்று வீசியது.

◈ இதனால் இவர்கள் அகமும் முகமும் மலர்ந்தனர்.

4. **தென்றல் காற்றின் திசையில் சென்றவர்கள் எதனைக் கண்டு இன்பமடைந்தனர்?**

இளந்திரைகளோடு இலங்கிய நன்னீர்ப் பொய்கையொன்று அமைந்திருந்தது. அப்பொய்கையில் விளங்கிய செந்தாமரையில் அன்னங்கள் அமர்ந்து நித்திரை செய்யும் அழகு அவர்களின் கண்களைக் கவர்ந்தது. இதனால் இவர்கள் இன்பமடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. **கயத்தில் (பொய்கையில்) துயிலும் நல்லன்னத்தின் அழகை இளவரசன் எவ்விதம் துணைவனுக்கு எடுத்துரைத்தான்?**

"தோயும் திரைகள் அலைப்பத்
தோடார் கமலப் பள்ளி
மேயவகையில் துஞ்சும்
வெள்ளை யன்னம் காண்பாய்"

நுரை எழுப்புகின்ற திரைகள் கொண்ட பாற்கடலிலே செந்தாமரையில் பள்ளி கொள்ளும் திருமாலைப் போன்று, ஆதிசேடன் மேல் தாமரை மலர்கள் நிறைந்துள்ள குளத்தில் நித்திரை செய்கின்ற வெள்ளை அன்னத்தைப் பாராய் எனத் துணைவனுக்கு, இளவரசன் எடுத்துரைத்தான்.

6. **பாற்கடலில் பள்ளிகொள்ளும் திருமாலுக்கு ஒப்பிட்டு இளவரசன் தான் கண்டகாட்சியை எவ்விதம் உவமானப்படுத்துகிறான்?**

பாற்கடல் மேல் பள்ளிகொள்ளும் **திருமால்** - உவமானம்
செந்தாமரையில் துயிலும் **வெள்ளையன்னம்** - உவமேயம்.
பொதுத்தன்மை : **துயிலும் அழகு**

7. **பொய்கையில் இருவரையும் அழைப்பனபோல எவைகள் அசைந்தன என உவமிக்கப்பட்டுள்ளது?**

◈ பொய்கையில் இலங்கிய அழகிய மலர்கள் முகமலர்ந்து இரு வரையும் அழைப்பனபோன்று அசைந்தன.

◈ இங்கே இயற்கையாகவே அழகுடன் அசைகின்ற மலர்கள் இவர்கள் வருவதைக் கண்டு அசைந்தாடி அழைக்கின்றன எனத் தனது குறிப்பை உயர்த்திக் கவிஞர் கூறுகின்றார்.

◈ இங்கே தற்குறிப்பேற்ற அணியைப் புலவர் பயன்படுத்துகிறார்.

8. **இருவரும், வாவியில் எதனைக் கண்டு எவ்விதம் மகிழ்ந்தனர்?**

அவ்வாவியின் **தண்மையும்,** (அழகு - ஓரங்காரம்) **செம்மையும்** (செப்பம் - அழகு) கண்டு இருவரும் தாய்முகம் கண்ட சேய் (பிள்ளை) போல் மனம் மகிழ்ந்தனர். நீர் பருகி மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. **கரையருகே அடுக்கடுக்காக வந்த அலைகள் எதற்காக வந்தன எனக் கவிஞர் கூறுகிறார்?**

மிகுந்த தாகத்தால் வருந்திய இருவருக்கும் தண்ணீரை எடுத்து வழங்கும் தன்மை போன்று அடுக்கடுக்காக அலைகள் கரையருகே வந்தன எனக் கட்டுரையாசிரியர் காட்டுகிறார்.

10. **தண்ணீர்த் தாகம் தணிந்தமை எதனை ஏற்படுத்தியது? எவ்விதம் இன்புற்றனர்?**

**தாகம் தணிந்த இருவரும் எதனைக் கண்டு, என்ன செய்தனர்?**

◈ இருவருக்கும் மனமும் மெய்யும் குளிர்ந்தது. குளத்தின் கரையில் அமர்ந்திருந்து அங்கு வீசிய இளங்காற்றை நுகர்ந்து இன்புற்றனர்.

◈ வாவியின் அருகே கொத்துக் கொத்தாகப் **பொன்நிறக்** கனிகளைத் தாங்கி, குளிர் நிழல் விரித்து நின்ற மரமொன்றைக் கண்டனர்.

◈ அம்மரநிழலில் தங்கி இளைப்பாற அங்கு சென்றனர்.

11. **மரத்தின் வளர்ச்சியைக் கட்டுரையாசிரியர் எவ்விதம் வர்ணித்துக் காட்டுகின்றார்?**

சூரியனுடைய வெப்பம் பூமியில் விழாது தடுப்பதற்காக பச்சை இலைகளால் வேய்ந்தாற் போன்று மரம் வளர்ந்திருந்தது எனச் செழிப்பைக் கூறுகின்றார்.

12. **தோழன் எவ்விதம் பசியைப் போக்கினான்?**

◈ அழகுற விளங்கிய மரக்கொப்பில் கொத்துக் கொத்தாக எல்லாப் பக்கமும் காணப்பட்ட பழத்தைத் தோழன் பறித்தான்.

◈ இருவரும் நன்மணத்தை நுகர்ந்தும், இனிய சுவையை அனுபவித்தும் இன்புற்றனர். பசியைப் போக்கினர்.

13. **கையில் வெண்ணெயிருக்க நெய் தேடி அலையும் வெள்ளியரும் (தலையில் ஒன்றுமில்லாதவர்) உண்டாரென்பதை நேராக அறிந்தேன் என முதியவர் கூறியது ஏன்?**

◈ இருவரும் இளைப்பாறுவதற்காக அமர்ந்திருந்த மரத்தின் பட்டையை பிழிந்து சாற்றை விட்டால் தலைநோய் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ இவ்விதம் கையில் மருந்திருக்க தோழன், முதியவரைப் பார்த்து தலைக்குத்தைத் தீர்க்கும் மருந்து தங்களிடம் உண்டா? எனக் கேட்டதற்காக இவ்விதம் முதியவர் கூறினார்.

14. **அரசிளங்குமரனின் தலைநோய் எவ்விதம் அகன்றது?**
மரப்பட்டையின் சாற்றை அரசகுமாரனது தலையில் தோழன் பிழிந்தால் தலை நோய் அகன்றது.

15. **இருவரும் கானகம் சென்ற முதல் தரத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் எவை?**

◈ பசியாலும், வெயிலாலும் நலிந்து தளர்ந்து வருந்திய போது பொய்கை இன்முகத்துடன் அவர்களை அழைத்துத் தாகம் தணித்துத் தளர்வைப் போக்கியது.

◈ மரம் தங்கியிருக்கக் குளிர் நிழல் தந்து; பசியாறப் பழங்கள் தந்து; தலைநோய் தீர்க்க தனிமருந்து கொடுத்து உதவியது.

16. **நல்லார் கைப்பட்ட செல்வத்தின் தன்மை (அறிவுடைய செல்வர் செயல்) எவ்விதம் விளங்கும் எனக் காட்டப்பட்டுள்ளது?**
வறுமையால் வருந்தி வந்தவரை இன்முகத்துடன் வரவேற்று. அவரது குறையை நிறைவு செய்வதே அறிவுடைய செல்வர் செயலாகும். எனக் காட்டப்பட்டுள்ளது.

17. **கட்டுரையாசிரியர் அறிவுடைய செல்வர் செயலை எதனுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்?**

◈ ஆற்று வழியாகவும், ஊற்று வழியாகவும் நன்னீரைத் தன்னகத்தே நிரப்பிக் கொள்ளும் பொய்கை போன்று.

◈ அறிவுடையார் நல்வழிகளால் ஈட்டிய பெரும் பொருள் நிறைந்த பண்ணைகளாய் விளங்குவார்கள் எனக் காட்டுகின்றார்.

18. **நீர் நிறைந்த பொய்கை தண்மை (குளிர்மை) வாய்ந்து விளங்கு தலைக் கட்டுரையாசிரியர் எதனுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்?**
நீர் நிறைந்த பொய்கை தண்மை (குளிர்மை) வாய்ந்து விளங்குதல் போல அறிவுடைய செல்வரும் ஈரம் வாய்ந்த நெஞ்சினராய் விளங்குவார்கள் எனக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. தடையின்றி நீர் வழங்கும் தடாகத்தினைக் கட்டுரையாசிரியர் எதனுடன் ஒப்பிட்டுக் காட்டி விளக்குகின்றார்?**

கல்வியும், செல்வமும் பூத்த மேலோர் வறியோர்க்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாய் விளங்குவார்கள் என விளக்குவார்.

**20. தமக்கென மட்டுமல்லாது, பிறருக்காகவும் வாழும் பெரியோரிடம் அமைந்துள்ள செல்வம் எதுபோலப் பயன்படும் எனத் திருவள்ளுவர் காட்டுகின்றார்?**

"ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

(அதிகாரம் 22 குறள் 215)

ஊரின் நடுவே உள்ள பொதுக் கிணற்றில் அல்லது குளத்தில் உள்ள நீரானது அவ்வூரின் கண்ணே உள்ளவர்க்கும், பிறர்க்கும் எல்லா வகையாலும் பயன்பட்டு உதவுவது போன்று, பெரியோரிடம் அமைந்துள்ள செல்வம் எல்லோருக்கும் அளவின்றிப் பயன்படும் என்பதாம்.

**21. பின்வருவனபற்றி "நல்ல மரமும் நச்சுமரமும்" என்ற கட்டுரையில் எவ்விதம் காட்டப்படுகிறது?**

**அ. அறிவுடையோர் செயல்.**

**ஆ. அறிவுடையோரின் பெரும் பொருள், நிறைவு**

**இ. அறிவுடையாரின் உள்ளம்**

**ஈ. மேலோரின் வள்ளல் தன்மை**

**உ. தமக்கென வாழாத பெரியோரிடம் காணப்படும் செல்வம், அதன் தன்மை**

**அ. அறிவுடைய செல்வர் செயல்**

வறுமையால் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்று; அவர் குறையை நிறைவு செய்வது அறிவுடைய செல்வர் செயல் எனக் காட்டப்படுகின்றது.

**ஆ. அறிவுடையோர் பெரும்பொருள், நிறைவு**

ஆற்று வழியாகவும் ஊற்று வழியாகவும் நன்னீரை நிரப்பிப் பொய்கை விளங்கும்.

அதேபோல் அறிவுடையார் நல்வழிகளால் ஈட்டிய பெரும் பொருள் நிறைந்த பண்ணைகளாய் விளங்குவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ. அறிவுடைய செல்வர் நெஞ்சம்**

பொய்கை எப்பொழுதும் தண்மை (குளிர்மை) நிறைந்து விளங்குதல் போல அறிவுடைய செல்வர்கள் ஈரம் நிறைந்த உள்ளத்தினராக விளங்குவர்.

**ஈ. மேலோரின் வள்ளல் தன்மை**

தாகத்தால் வருந்தி வருவோர்க்குத் தடையின்றி நீர் வழங்கும் தடாகம் போன்று,

கல்வியும் செல்வமும் பூத்தமேலோர் வறியார்க்கு வரையாது (இல்லையெனாது) பொருள் வழங்கும் வள்ளல்களாய் விளங்குவார்கள்.

**உ. பெரியோரிடம் காணப்படும் செல்வம்**

தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெரியார்பால் அமைந்த செல்வம்,

பொதுக் கிணற்றில், குளத்தில் உள்ள நீர் எல்லோருக்கும் எல்லாவகையாலும் பயன்படுதல்போல

பெரியார் பால் உள்ளசெல்வம் அனைவருக்கும் பயன்படும்.

“உருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு”

(அதிகாரம் 22 குறள் 215)

**22. அறிஞரிடம் அமைந்த செல்வம் வறியவர்க்கு எவ்விதம் பல வகையில் பயன்படும் எனக் கட்டுரையாசிரியர் சான்று கூறிக் காட்டுகிறார்?**

- பயன்தரும் மரமானது பழுதற்ற பழங்களைத் தாங்கி நிற்கின்றது.
- இம்மரம் தனது குளிர்ந்த நிழலால் களைப்பைப் போக்குகின்றது.
- இனிய பழங்களால் பசிநோய் அகற்றுகின்றது.
- மரப்பட்டையால் நோயை (பிணி) அகற்றுகிறது.
- பயன் மரம் ஊள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின்

(அதிகாரம் 22 குறள் 216)

எனத் திருக்குறள் கூறுகின்றது. இதேபோன்று அறிஞர்களிடம் காணப்படும் செல்வம் பலவகையில் பயன்படும் என ஆசிரியர் காட்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. **அறிஞரிடம் அமைந்த செல்வம் வறியவர்க்கு எவ்விதம் பயன்படும் எனத் திருவள்ளுவர் எவ்விதம் எடுத்துரைக்கிறார்?**

அ. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
"நயனுடை யான்கட் படின்"

(அதிகாரம் 22 குறள் 216)

ஊரின் நடுவே நின்று பயன்தரும் மரம் பழுத்தால் அது அனைவரும் பெற்றுப் பசிநீங்கிப் பயன்பெற உதவுகிறது. அதேபோன்று ஒப்புரவாகிய நற்பண்பு உடையவரின் செல்வம் அனைவருக்கும் பலவகையில் பயன்பட்டு உதவும் என்பதாம்.

ஆ. "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்"

(அதிகாரம் 22 குறள் 217)

ஒரு ஊரின் கண்ணே நிற்கும் மரமானது பழத்தால், காயினால், பட்டையால், இலையால், வேரால், பழத்தால் எல்லாவகை யிலும் பயன்பட்டும் பிற உறுப்புகளுக்கு மருந்தாகி யும் பயன்தருகிறது. எல்லாவகையாலும், இதேபோன்று ஒப்புர வாகிய பெருந்தகையுடையவனிடம் செல்வம் சேர்ந்துவிடின் அது எல்லோருக்கும் எல்லாவகையிலும் பயன்படும், உதவும் எனக் கூறுகின்றார் வள்ளுவர்.

எனவேதான் "**செல்வம் பெருந்தகை யான்கட் படின்**" என்றார்.

இ. "ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

அதிகாரம் 22 குறள் 215

ஊரின் நடுவே காணப்படும் பொதுக்கிணறு அல்லது குளம் அனைவருக்கும் நீர்வழங்கித் தாகம் தீர்த்துப், பல்வகையில் உதவுவதுபோல்,

ஒப்புரவினால் நற்பண்பு உடையவரின் செல்வம் உலகம் வாழுமாறு அனைவருக்கும் பலவகையில் உதவும் என்பதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**24. அரசிளங்குமரன் பண்புடைமை வாழ்வின் உண்மையை எவ்வாறு தோழனிடம் இருந்து அறிந்துள்ளான்?**

◈ தண்மை (குளிர்மை) வாய்ந்த தடாகம் போலவும்; தடாகம் குளிர்மை நிறைந்து காணப்படுதல் போலவும், அறிவுடையவரான செல்வர் ஈரம் வாய்ந்த நெஞ்சினை உடையவராய் (இரக்கம் மிக்க) இருத்தல்.

◈ பழங்கள் நிறைந்த பயன்தரு மரமானது எமது பசி, வெப்பம், பிணி என்பவற்றை நீக்குவதுபோல அறிஞர்களின் செல்வம் வறிஞர்க்குப் பல்வகையாற் பயன்படும் உதவும் என்பதாம்.

◈ இவ்வாறு பண்புடை வாழ்வின் உண்மையை அறிந்தான்.

**25. பேதையர் கைப்பட்ட செல்வம் எவ்விதம் பிறருக்கு இடர் விளைவிக்கும் எனக் கட்டுரையில் காட்டப்பட்டுள்ளது?**

இலைகளும், தழைகளும் இல்லாமல் பட்டமரம் போல் காட்டில் மரம் ஒன்று நிற்கின்றது. அம்மரக்கிளைகளில் கண்ணைக் கவரும் பழுத்த பழங்கள் காணப்பட்டது. ஆனால் அம் மரத்தில் இலை, தழை இல்லாததால் விலங்குகளும் மரத்தின்கீழ் நிற்காது வராது விலகிவிடுகின்றன. அத்தோடு அக் கனிகள் நச்சுக் கனிகளாக இருத்தலின் உண்டாரைக் கொன்றுவிடும் என அஞ்சி எவரும் அம்மரமருகே செல்வதில்லை.

விறகாக வெட்டி எரிப்பதற்கும் முள் இடையூறாக உள்ளது. எனவே எரிப்பதற்குக் கூட அம்மரம் பயன்படுவதில்லை.

இவ்வாறு இந் நச்சுமரம் பிறருக்கு பல வகையில் பயன் படாதது மட்டுமன்றி இடர்விளைவிப்பதும், ஆகும். இதேபோன்றே பேதையர் கைப்பட்ட செல்வமும் பிறருக்குப் பயன்படாது இடர்விளை வித்துவிடும். பிறருக்கு அச்செல்வம் இடையூறாகவும் அமைந்து விடுகிறது.

**26. பொய்யாமொழிப் புலவர் (திருவள்ளுவர்) பிறருக்குப் பயன்படாத செல்வம் எவ்வகைப்பட்டது எனக் காட்டுகிறார்?**

"நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று"

(அதிகாரம் 101, குறள் : 1008)

எனக் குறள் மூலம் வெளிப்படுத்துவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவூரின் கண்ணே நச்சுமரம் கண்கவர் பழங்களைத் தொகையாகத் தந்த போதும், அப்பழங்களால் எதுவிதபயனும் இல்லை. அம்மரத்தை எவருமே சென்றடைவதும் இல்லை. அது பயனற்ற மரமாகும்.

அதேபோன்று பிறருக்கு வழங்காது பயன்படாது சேர்த்து வைத்திருபவனது செல்வம் நச்சு மரம் ஊரின் நடுவே பழுத்தது போன்று பிறருக்குப் பயன்படாததே. அம்மரத்தை எவரும் சென்று சேர்வதில்லை. விரும்புவதில்லை. அதேபோன்று இவ்வகைச் செல்வம் வைத்திருப்பவனை எவரும் விரும்புவதில்லை. அவனால் எவ்வித பயனும் இல்லை.

**27. பிறருக்குப் பயன்படாத செல்வத்தை வைத்திருப்பவன் அழிந்து ஒழிவது நல்லது எனக் கட்டுரையாசிரியர் ஏன் விரும்புகிறார்?**

◈ பிறருக்குப் பயன்படாத செல்வம் வைத்திருப்பவன் நிலத்துக்குச் சுமையாக உள்ளான்.

◈ உலகத்துக்கு உற்ற வசையாகவும் அவன் அமைந்துள்ளான்.

◈ அவனது செல்வம் உலகத்தில் உள்ளார்க்கு எவ்வகையாலும் பயன்படவில்லை.

◈ எனவேதான் பிறருக்குப் பயன்படாத செல்வம் வைத்திருப்பவன் அழிந்து ஒழிவது மிக நன்றாகும் என்றார் கட்டுரை ஆசிரியர்.

◈ அச் செல்வம் பிறருக்கு இடையூறு விளைவிக்கின்றது.

**28. அறிவுடையோரின் செல்வம் தொடர்பாக உலக மக்களின் எண்ணக் கருத்து எவ்விதம் அமைந்திருக்குமெனக் கட்டுரை ஆசிரியர் கூறுகின்றார்?**

**அறிவுடையோரின் செல்வம்**

◈ அறிவுடைய செல்வரை உலகம் போற்றும்.

◈ வறுமையால் வருந்தி வந்தவரை இனிய முகத்தோடு அவர்கள் வரவேற்பர்.

◈ வருந்திவந்தோரின் குறையை இவர்கள் நிறைவு செய்வர்.

◈ அறிவுடையோர் நல்வழிகளால் ஈட்டிய பெரும்பொருள் நிறைந்த பண்ணைகளாய் விளங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ அறிவுடைய செல்வர் ஈரம் வாய்ந்த நெஞ்சினராய் இலங்குவர்.

◈ வறியவர்களுக்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாய் விளங்குவர்.

◈ இவர்கள் தமக்கென வாழாது பிறருக்கு உரியவராக வாழ்வர்.

◈ அவர்களுடைய செல்வம் எல்லா வகையிலும் பிறருக்குப் பயன்படும்.

◈ எனவேதான் அறிவுடையாரின் செல்வத்தைப் பிறர்போற்றுவர்.

**29. பின்வருவோரின் இயல்பு பற்றி எவ்விதம் எதனுடன் தொடர்புபடுத்திக் கட்டுரை ஆசிரியர் விளக்குகிறார்?**
**(கட்டுரை ஆசிரியர் தான் எடுத்துக் கொண்ட பொருளை விளக்கக் கையாண்ட உத்திகள் எவை?)**

**அ. அறிவுடையார் ஈட்டிய பெரும் பொருள்.**

**ஆ. அறிவுடைய செல்வரின் ஈரநெஞ்சம்**

**இ. அறிவுடையாரின் வள்ளல் தன்மை**

அ. ஆற்று வழியாகவும், ஊற்று வழியாகவும் நன்னீரைத் தன் அகத்தே நிரப்பிக் கொள்ளும் பொய்கை போன்று;
அறிவுடையார் நல்வழிகளால் ஈட்டிய பெரும் பொருள் நிறைந்த பண்ணைகளாய் விளங்குவார்கள்.

ஆ. நீர் நிறைந்த பொய்கை எப்பொழுதும் தண்மை (குளிர்மை - ஈரம்) வாய்ந்து விளங்குதல் போல,
அறிவுடைய செல்வர் ஈரம் வாய்ந்த நெஞ்சினராக இலங்குவர்.

இ. தாகத்தால் வருந்தி வருவோருக்குத் தடையின்றி நீர் வழங்கும் தடாகம் போன்று,
கல்வியும் செல்வமும் பூத்த மேலோர் வறிஞருக்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாய் இருப்பார்கள்.

**30. பின்வருவோர் பற்றி உலகக் கணிப்பு எவ்விதம் அமையுமெனக் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்?**

**அ. அறிவுடைய செல்வர்**

**ஆ. அறிவற்ற செல்வர்**

**அ. அறிவுடைய செல்வர்**

◈ அறிவுடைய செல்வரை உலகம் போற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறிவுடைய செல்வனது ஆக்கம் கண்டு உலக மக்கள் இன்புறுவர்.
- அறிவுடைய செல்வர் வறுமையால் வந்தவரை இன்முகத்தோடு வரவேற்பர்; உபசரிப்பர்.
- வறியவர்களின் குறைகளைக் கேட்டறிந்து நிறைவு செய்வர்.
- அறிவுடைய செல்வர் நல்வழிகளால் ஈட்டிய, பொருள் கொண்ட பண்ணைகளாக விளங்குவர்.
- இவர்கள் ஈரம்வாய்ந்த நெஞ்சினர்.
- வறியவர்களுக்கு வரையாது வழங்கும் வள்ளல்களாக இருப்பர்.

**ஆ. அறிவற்ற செல்வர்**

- அறிவற்ற செல்வரை உலகம் தூற்றும்.
- அறிவிலாச் செல்வனது ஆக்கம் கண்டு உலகமக்கள் இகழுவர்.
- அறிவற்ற செல்வர் வறுமையால் வந்தவரை வரவேற்க மாட்டார்.
- இன்முகமென்பது இவர்களிடம் கிடையாது.
- இவர்கள் அநேகமாக நல்வழிக்கு எதிரான வழியில் பொருளை ஈட்டியவர்களாயிருப்பர்.
- இவர்களிடம் ஈரம் வாய்ந்த நெஞ்சம் இல்லை.
- இவர்களுக்குப் புகழ் இல்லை.
- சமூகத்தில் நல்ல இடம் இவர்களுக்குக் கிடைப்பதில்லை.

**31. "நல்ல மரமும் நச்சு மரமும்" என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.**

**அ. அறிவுடைய செல்வரின் இம்மை மறுமைப் பயன்கள்.**

**ஆ. அறிவற்ற செல்வரின் இம்மை மறுமைப் பயன்கள்.**

அ.
- அறிவுடைய செல்வன் தன் பொருளை உரியபடி பயன்படுத்தி இம்மையிற் புகழ் எய்துவான்.
- இவன் மறுமையில் இன்பமும் எய்துவான்.

ஆ.
- அறிவிலாச் செல்வன் பயன்பட வாழும் பன்றியாய், பேதையாய் இம்மையில் பழியைப் பெறுகிறான்.
- இவன் மறுமையில் துன்பம் எய்துகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32. அறிவில்லாதவரிடம் உள்ள செல்வத்தைப் பற்றித் திருவள்ளுவர் எவ்வாறு குறள் மூலம் எடுத்துக் காட்டிப் பழிக்கிறார்?**

நச்சப்படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று

அதிகாரம் 101 குறள் 1008

பிறருக்கு உதவாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப் படாதவன் செல்வம், ஊர் நடுவில் நடுவூரின் கண்ணே நச்சுமரம் பழுத்தது போன்று பயனற்றது எனக் கூறுகிறார்.

**33. "நல்ல மரமும், நச்சு மரமும்" என்ற கட்டுரையின் மையக் கருத்து என்ன?**

அறிவுடைய செல்வரது சிறப்பும், அறிவற்ற செல்வரது இழிவும் இக்கட்டுரையில் மையக் கருத்தாகக் காட்டப்பட்டுள்ளது.

கல்லாதவரிடம் (அறிவிலிகள்) சேர்ந்துள்ள செல்வமானது, கற்றறிந்த பண்புடையவரிடம் காணப்படும் வறுமையைவிடத் துன்பம் தருவதாகும்.

**34. "நல்லார் கட்பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார் கட்பட்டதிரு"**

(அதிகாரம் 41, குறள் - 408)

**என்ற குறள் வாயிலாகப் பொய்யாமொழிப் புலவர் யாது கூற விரும்புகிறார்?**

கல்லாத (அறிவிலி)வர்களிடம் காணப்படும் செல்வ மானது; கற்றறிந்த பண்புடையானிடத்தே காணப்படும் வறுமையைவிடத் துன்பம் விளைவிக்கவல்லது எனக் காட்டுகின்றார்.

எனவே அறிவிலிகளிடம் காணப்படும் செல்வத்தால் உலகுக்கு எந்தப் பயனுமே கிடைப்பதில்லை. ஆனால் அச் செல்வம் துன்பத்தையே விளைவிக்க உதவும் என்பார்.

இதனாலேயே கற்றவர்களிடம் காணப்படும் வறுமைத் துன்பத்தைவிடக் கல்லாதவர்களிடம் காணப்படும் அச்செல்வம் துன்பம் விளைவிக்கும் கொடுமையுடையது என வள்ளுவர் எச்சரித்துக் கூறமுயல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**35. பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தான் எடுத்துக்கொண்ட "நல்லமரமும் நச்சுமரமும்" என்ற கட்டுரையை விளக்கக் கையாண்ட உத்திகளை எடுத்துக் காட்டுக.**

கட்டுரையாசிரியர் அறிவுடைய செல்வரது சிறப்பையும், அறிவற்ற செல்வரின் இழிவையும் பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலம் சான்றுபடுத்துகின்றார். அதனை நிரூபிக்க பல சான்றாதாரங் களையும், குறள்களையும் எடுத்துக் காட்டுகிறார்.

அ. ◈ பொய்கை அன்புடன் அழைத்து, இன்முகம் காட்டித் தாகம் தீர்த்தது; தளர்வை நீக்கியது.

◈ மரமானது குளிர் நிழலைத் தந்து பசியாறப் பழங்கள் அளித்துத் தலைநோய் தீர்க்கப் பட்டை மூலம் தனி மருந்தையும் தந்தது.

◈ இதுபோன்றே நல்லார் கைப்பட்ட செல்வமானது வறுமையால் வந்தோரை இனியமுகத்துடன் வரவேற்று, அவர்களது குறையை நிறைவு செய்யும். இது அறிவுடைய செல்வர் செயலாகும்.

ஆ. ◈ பொய்கையானது ஆற்றுவழியாகவும், ஊற்றுவழியாகவும் நன்னீரைத் தன்னகத்தே நிரப்பிக் கொள்கிறது.

◈ இதேபோன்று அறிவுடையார் நல்ல வழிகளால் ஈட்டிய பெரும் பொருள் நிறைந்த பண்ணையாய் விளங்குவர் என்பார்.

இ. ◈ தடாகமானது தாகத்தால் வருந்துவோருக்குத் தடையின்றி நீர் வழங்குகிறது.

◈ இதேபோல் கல்வியும் செல்வமும் பூத்த மேலோர் வறியோர்க்கு வரையாது பொருள் வழங்கும் வள்ளல்களாக விளங்குவர்.

ஈ. ◈ ஊரின் நடுவே பொதுக்கிணற்றில், குளத்தில் காணப்படும் நீரானது அனைவருக்கும் பயன்பட்டு உதவுகிறது.

◈ அதேபோன்று பண்புடைய செல்வர்களிடம் காணப்படும் செல்வம் அனைவருக்கும் பயன்படும். இதனை வள்ளுவர் குறள் மூலம் ஆதாரப்படுத்துகிறார்.

"ஊருணி நீர்நிறைத் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

அதிகாரம் 22 குறள் 215

உ. ◈ மரமானது பழத்தால் பசிநோய் அகற்றி; குளிர் நிழலால் களைப்பை மாற்றி; பட்டையால் பிணியைப் போக்கி பலவகை யில் எமக்குப் பயன்படும்.

◈ அதேபோன்று அறிஞரிடம் அமைந்த செல்வம் வறியார்க்கும் பலவகையில் பயன்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ "பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்"

அதிகாரம் 22 குறள் 216

ஒப்புரவாகிய நற்பண்பு உடையவனிடம் செல்வம் சேர்ந்தால், அஃது ஊரின் நடுவே உள்ள பயன் மிகுந்த மரங்கள் பழங்கள் பழுத்தது போன்று அனைவருக்கும் பல்வகையில் பயன்படும்.

◈ "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"

அதிகாரம் 22 குறள் 217

ஒரு ஊரின் கண்ணே நிற்கும் மரமானது பழுத்தால், காயினால், பட்டையால், இலையினால், பழத்தினால், வேரால் எல்லா வகையிலும் பயன்படும். பிற உறுப்புகளுக்கு மருந்தாயும் பயன்படும்.

இவ்வகையால் எல்லா வகையாலும் ஒப்புரவாகிய பெருந்தகையுடையவனிடம் செல்வம் சேர்ந்துவிட்டால் அது எல்லோருக்கும் எல்லாவகையிலும் ஊர் நடுவே பழுத்த மரம்போல் பயன்படும் என்பார் வள்ளுவர். எனவேதான்
"செல்வம்.....பெருந்தகை யான்கட் படின்" என்றார்.

2ஞ. "நச்சப் படாதவன் செல்வம் நடுவூ ருள்
நச்சு மரம்பழுத் தற்று"

அதிகாரம் 101 குறள் 1008

கண்ணைக் கவரும் நஞ்சு வாய்ந்த கனிகள் நச்சுக்கனிகளாய் இருத்தலினால் இவை பிறருக்கு இடர் விளைவிப்பதாகும். இதே போன்று பேதையர் கைப்பட்ட செல்வம் எவருக்கும் உதவுவதும் இல்லை. மாறாகப் பிறருக்கு இடர்விளைவிப்பனவாகும்.

எ. கல்லாதவரிடம் சேர்ந்துள்ள செல்வமானது, கற்றறிந்த நல்லவரிடம் உள்ள வறுமையைவிட மிக்க துன்பம் விளைவிப்பதாகும். இதனை
"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு"

அதிகாரம் 41 குறள் 408

என வள்ளுவர் எடுத்துக் காட்டுகிறார். இவ்வாறு பல்வேறு சான்றாதாரங்கள் மூலமாக அறிவுடையாரின் செல்வத்தின் சிறப்பையும்; அறிவற்றாரின் செல்வத்தின் இழிவையும் கட்டுரை ஆசிரியர் தெளிவுபடுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02. தனிப் பாடல்கள்

காளமேகப்புலவர் பாடல்

(இவர் சிலேடைப் பாடல்களைப் பாடும் புலவர்.)

1. **உயர்ந்த பெரிய மலையைச் சந்திரனுக்கு ஒப்பாகச் சொல்லித் துதி என, ஏன் காளமேகப் புலவர் கூறினார்?**

பெரிய மலையானது, நிலத்தின் மீது உயர்வாகத் தோன்றி விளங்குகிறது; மேகமண்டலத்தை அது அளாவி நிற்கின்றது; ஐவகை நிலங்களுள் ஒன்றாகிய குறிஞ்சி நிலத்துக்குரிய சில மலர்களைப் பெற்றுள்ளது. நிலத்தின் மீது தொடர்ச்சியாக எங்கும் பரந்து அழகாக உள்ளது.

இதேபோன்று, சந்திரன், நிலவொளியைத் தருகின்றது; நீண்ட வானத்தில் பொருந்திச் சில நேரங்களில் உலவுகின்றது; நிலத்திற்குமேல் உதயம் செய்து தலைக்கு மேல் வானத்தில் மிளிர்ந்து வருகின்றது.

எனவே இக்காரணங்களால் உயர்ந்த மலையைச், சந்திரனுக்கு ஒப்பாகக் கூறலாம். அவ்வாறு சாமானமாகச் சொல்லித் துதி எனக் காளமேகப் புலவர் கூறினார்.

2. **இராமச்சந்திர கவிராயர் வறுமையின் கொடுமையால் அயனை (பிரமாவை) எவ்விதம் நிந்தித்துப் பாடியுள்ளார்?**

"கல்லைத்தான் மண்ணைத்தான்" என்ற பாடல் மூலம் நான்முகனான பிரமாவின் (அயன்) படைப்பின் இயல்பு கவிராயரால் காட்டப்படுகிறது. இங்கே பிரமனால் படைக்கப்பட்ட மனிதன் எவ்விதம் வாழுமாறு படைக்கப்பட்டான் என்பது காட்டப்படுகிறது.

- தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகன், கல்லையும், மண்ணையும் சமைத்து உண்ணுமாறு செய்தானா? இல்லை;
- அல்லது வீட்டினையோ, பொன்னையோ எனக்குத் தந்து நன்கு வாழுமாறு செய்தானா? இல்லை.
- யான்படும் துன்பத்தைச் சொல்லி எவரை நொந்து கொள்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐயோ! எல்லா இடங்களிலும் பல்லைக் காட்டி இரந்து வாழுமாறு அவன் இவ்வுலகத்தில் நம்மைப் படைத்துவிட்டான்
- எனப் பிரமாவின் படைப்பின் விந்தையைக் கவிஞர் எடுத்துக் காட்டி விடுகின்றார்.

**3. "மஞ்சுமஞ் சுங்கை" என்ற பாடல் மூலம் ஒரு பெண்ணின் நயனத்தின் (கண்ணின்) அழகை எவ்விதம் கவிஞர் காட்டவிழைகின்றார்?**

மேகமும் அஞ்சும் கொடைத் தன்மை பொருந்திய கையையுடைய பரராசசேகரன் என்பவனது மலையில் வாழுகின்ற, மென்மைத் தன்மையால் பஞ்சும் அஞ்சத்தக்க அடிகளையுடைய பெண்ணே!

- மன்மதனின் மலர் அம்புகள் ஐந்தும் அஞ்சும் அஞ்சும். கயல்மீன்கள் அஞ்சும் அஞ்சும்;
- கடலும் அஞ்சும் அஞ்சும்; நஞ்சும் அஞ்சும் அஞ்சும்.
- எனவே நின் விழிகள் வெற்றியைத் தரும் வேலைப் போன்று கூர்மையும் ஒளியும் பொருந்தியதோ?
- எனப் பெண்ணின் கண்ணின் அழகை நமச்சிவாயப் புலவர் வியந்து பாடுகிறார்.

**4. பரராசசேகரனது கொடையின் சிறப்பை எவ்விதம் கவிஞர் எடுத்துக்காட்டுகின்றார்?**

இல்லையென்று கூறாது தன்னால் இயன்றளவு மழை நீரை வழங்கி உலகத்தாரின் உயர்வுக்கு ஊன்று கோலாக விளங்குவது மேகம்.

இதனால் **கொடைக்கு மேகம்** எனப் போற்றப்படுகிறது.

இதேபோன்று வரையாது வழங்கும் வள்ளற்றன்மை யுடைய பரராசசேகரனது கைகளைப் பார்த்த, மேகமே அஞ்சுகிறது என்பார்.

ஏனென்றால் மேகத்தைவிட வள்ளற்றன்மையுடையது பரராசசேகரனது கை எனக் கவிஞர் சிறப்பித்துக் கூறுகின்றார். அதாவது மேகத்தைவிடக் கொடையில் பரராச சேகரனின் கை சிறந்தது எனக் காட்டுகிறார். இதனை **"மஞ்சுமஞ் சுங்கைப் பரராச சேகர மன்னன் வெற்பில்"** எனக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03. மங்கையர்க்கரசியின் காதல்

1. **மங்கையர்க்கரசியின் காதல் என்ற சிறுகதையில் காட்டப்படும் களம் (கதை நிகழும் இடம்) ஆசிரியரால் எவ்விதம் உணர்ச்சி பூர்வமாகக் காட்டப்பட்டுள்ளது?**
**(வ. வே. சு. ஐயர் நள்ளிரவைப் பயங்கரமாக வர்ணிப்பதில் சித்தரிப்பதில் வல்லவர். விளக்குக.)**

◈ எங்கும் மேகங்கள் வானத்தில் இடைவிடாது சென்று கொண்டிருக்கின்றன.

◈ காற்று சீறிக் கொண்டு செல்கிறது. சந்திரன் சற்று நேரத்தில் தோன்றுகின்றான். உடனே முன்னரிலும் கனமாக மேகங்களுக்கு இடையில் மறைந்து விடுகிறான்.

◈ தூரத்திலே புலியும், கரடியும் உறுமிக் கொண்டிருக்கின்றன. பக்கத்துக் கொல்லைகளில் நரிகள் ஊளையிட்ட வண்ணமாக இருக்கின்றன.

◈ ஆலமரத்தின் மேலேயிருந்து ஒரு கோட்டான் பயங்கரமாகக் கத்துகிறது; பின் நிறுத்தி விடுகின்றது.

◈ பத்திரகாளி கோயில் விளக்கு எரிந்து கொண்டிருக்கின்றது காற்று தீபத்தை அலைக்கும் போதெல்லாம் மரங்களின் நிழல்கள் அசைவது பூதங்கள் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் புரிவதுபோல் இருக்கிறது.

◈ பத்திரகாளியின் தோற்றம் பயங்கரமாக இருக்கிறது.

◈ [illegible].. ஒரு தனிப்பாதை வழியே செல்கிறார்கள். நிசப்தம். நிசப்தம் எங்கே பார்த்தாலும் நிசப்தம். மேகங்கள் சற்று விலகுகின்றன. சந்திரன் இலேசான மேகத்துக்குப் பின்னிருந்து மங்கின ஒளியைத் தருகிறான்.... மார்த்தாண்டனையும், மங்கையற்கரசியையும் இருள் மறுபடியும் விழுங்கி விட்டது..."

இவ்வாறு களம் நிகழும் இடம் உணர்ச்சி பூர்வமாக வர்ணனையுடன் கட்டுரையாசிரியரால் காட்டப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. மங்கையர்க்கரசி யார்? இவள் கருணாகரனை ஒருநாள் இரவு ஊரின் புறத்திலுள்ள காளிகோயிலில் சந்திக்க விரும்பியது ஏன்?**

- ◈ குலோத்துங்க சோழனுக்காகக் கலிங்கம் சென்று போரில் வெற்றி வாகை சூடி வந்த கருணாகரத் தொண்டைமானுடைய மகளே மங்கையர்க்கரசி ஆவாள்.

- ◈ இவள் கருணாகரன் என்னும் வாலிபனைக் காதலிக்கிறாள்.

- ◈ தந்தை இறந்தபின் அவளின் சிற்றப்பன்தான் அவள் குடும்பத்துக்குத் தலைவன். அவன் மார்த்தாண்டன் என்னும் வேறு ஓர் இளைஞனை மணக்கும்படி மங்கையர்க்கரசியை வற்புறுத்துகின்றான்.

- ◈ இதனை மங்கையர்க்கரசி விரும்பவில்லை. அவள் கருணாகரன் என்னும் வாலிபனையே விரும்புகிறாள்.

- ◈ காளியின் சந்நிதியில் கருணாகரனுக்கு மாலையிட அவள் விரும்பி வந்துள்ளாள்.

- ◈ எனவேதான் ஊர்ப்புறத்தில் உள்ள காளிகோயிலில் கருணாகரனைச் சந்தித்துத் தனது நிலையை, எண்ணத்தைத் தெரிவிக்க விரும்பினாள்.

**3. மங்கையர்க்கரசி, கருணாகரனின் வரவை எதிர்பார்த்திருந்த வேளையில் அவளின் தவிப்பு எவ்விதம் எடுத்துக்காட்டப்படுகிறது?**

- ◈ இத்தனை நேரமாகிவிட்டதே, இன்னும் என் கருணாகரன் வரவில்லையே! கருணாகரா! ஏன் இன்னும் தாமதிக்கிறாய்?

- ◈ குறித்த நேரத்தைச் சற்றுக் கடந்தாலும் என் உயிர்துடித்துப் போய் விடுமென்று உனக்குத் தெரியாதா?

- ◈ தேவி! மகாகாளி! பத்திரகாளி! கருணாகரனுக்கு உன் சந்நிதியில் மாலையிடவேண்டுமென வந்திருக்கிறேன்.

- ◈ கருணாகரனின் வெற்றிவாகையை பெருமைப் படக் கூறுதல்.

- ◈ மார்த்தாண்டனை மணக்கும் படி என் சிற்றப்பன் வற்புறுத்துகிறான்.

- ◈ காளி! உன்னிடத்து வருகிறேன் என்று வாக்களித்த என் கருணாகரனுக்கு நடுவழியில் தீங்கு வராமல் காப்பாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ இன்னும் வரவில்லையே கருணன்! என் செய்வேன்! என்செய்வேன்!

இவ்விதமாக யாழின் இன்னிசை போன்ற குரலில் அவள் ஏதோ பேசுகின்றாள் எனக் கூறி அவளின் தவிப்பைக் காட்டுகிறார் கதாசிரியர் ச. வே. சு ஐயர் அவர்கள்.

4. **மங்கையர்க்கரசியின் தவிப்பின் ஊடாகக் கதாசிரியர், கருணாகரனின் வெற்றித் திறமையை எடுத்துக் காட்டுகிறார் விளக்குக.**

◈ சிங்கத்தைப் பார்த்த கண்ணால் செந்நாயைப் பார்ப்பேனா?

◈ இங்கே சிங்கத்தைச் சான்றுபடுத்திக் கருணாகரனின் வலிமையையும் கம்பீரத்தையும் சீற்றத்தையும் எடுத்துக் காட்டுகின்றார் ஆசிரியர். இங்கே வீரம்பொருந்திய சிங்கமாகக் கருணாகரன் காட்டப்படுகிறான்.

◈ அதே வேளையில் மார்த்தாண்டனின் சாதாரண நிலையை செந் நாயின் மூலமாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

◈ சக்கரக் கோட்டத்திலே விசயதரபூபதிக்காக என்தந்தை செய்த போரில் போர்க்களம் முழுவதும் கறங்கு போல் திரிந்து பகைவர் யானை, சேனையெல்லாம் 'ஊதையிற்பட்ட பூளைப் பூவென்ன' நூறி எறிந்து வாகை சூடியவன் கருணாகரனே யன்றோ! போர்க்களத்தில் கருணாகரனின் வெற்றி வாகையை இவ்வாறு காட்டுவார்.

கருணாகரன் போர்க்களத்தில் காற்றுப் போல் (கறங்கு) சுழன்று, பகைவர்களின் யானை, சேனைகள் எல்லாம் காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சு எனச்சுழன்று, சிதைத்து வெற்றி சூடியவன். [பூளைப்பூ- இலவம் பஞ்சு. வெற்றிப்பூ (வாகைப்பூ)]

◈ கருணாகரனின் கம்பீரமான வீரநடையை மேகத்தின் விரைவான போக்குடன் ஒழுங்குறக் காட்டுதல்.

◈ அவன் வரும்போது தரையிலே ஒரு தேவன் நடந்து வருவது போலிருக்கும் எனக் கருணாகரனின் பொலிவான தோற்றத்தைக் காட்டுதல்.

இவ்விதமாகக் கதையின் ஊடாகக் கருணாகரனின் வீரச்சிறப்பை வெளிப்படுத்துகிறார்.

5. **கருணாகரனின் வரவை எதிர்பார்த்திருந்த மங்கையர்க்கரசி சற்று நேரம் ஸ்தம்பித்துப் போகும் அளவுக்குக் கதாசிரியர் கையாண்ட உத் தியாகக் "கதைத்திரும்பம்" எவ்விதம் விறுவிறுப்பாக அமைந்திருந்தது? (மார்த்தாண்டவனின் வருகையும், பேச்சும் எவ்வாறு நயம்படக் காட்டப்படுகிறது).**

ஒரு வீரன் புயற்காற்று வருவதுபோல வந்து அவள் எதிரே நின்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"**கருணாகரனை இனி அழையாதே!** உன் குரல் இனி அவன் காதில் கேளாது மங்கையர் திலகமே! உன் பேரிலுள்ள சொல்லொணாக் காதல் என்னைத் தூண்ட, நான் அவனைத் தனி வழியில் மறித்து இவ்வாளால் வீரசுவர்க்கம் அனுப்பிவிட்டேன். வாளுக்கு இரையாகிவிட்டவனை இனி நீ நினைத்து வெம்பாதே. நின் கயல் போன்ற கண்ணால் (உவமையணி **உவமானம்** - கண், **உவமேயம்** - கயல் மீன்; **பொதுத்தன்மை** – நீண்ட அழகிய)

நீ கண்ணீர் விடுவது எனக்குச் சகிக்கவில்லை! கருணா கரன் சௌரியத்தில் மோகித்துப் போயிருந்தாய். அவனைத் தனிப் போரில் வென்ற என் வீரத்தைப் பார்! அவனிலும் அதிகமாக நான் உன்னைக் காதலிக்கிறேன். உன் அருட்கண்ணால் என்னைப் பார்ப்பாய். என் உடல், பொருள், ஆவி மூன்றையும் உன் பாதத்தில் சமர்ப்பிக்கிறேன். உன் சுந்தரக் குமுதச் செவ்வாயினால் (**உருவக அணி** குமுதமாகிய செவ்வாய் இங்கே செவ்வாயைக் குமுதப் பூவாக புலவர் உருவகித்தல் சுந்தரம் - அழகு) ஓர் அருள்மொழி மாத்திரம் எனக்கு உரைப்பாய்" இவ்வாறு சொல்வதன் மூலம் கதையில் திருப்பத்தை ஏற்படுத்துகிறார். மார்த்தண்டவனின் மன எண்ணத்தை காட்டுவார்.

6. **கருணாகரன் இறந்து கிடக்கும் இடத்தை (இடத்திற்கு) ஆசிரியர் மங்கையற்கரசியை மட்டுமல்ல வாசகர்களையே திகிலுடன் விறுவிறுப் புடன் கூட்டிச் செல்கிறார். இதனை நிகழ்ச்சிகள் மூலம் ஆதாரப்படுத்துக. (மங்கையற்கரசி கானகத்துக்குச் சென்ற நிகழ்வு ஆசிரியரால் காட்டப்படும் விதத்தைத் தெளிவுபடுத்துக.)**

ஒரு தனிப்பாதை; நிசப்தம். நிசப்தம். எங்கு பார்த்தாலும் நிசப்தம். மேகங்கள் சற்று விலகுகின்றன. சந்திரன் இலேசான மேகத்துக்குப் பின்னிருந்து மங்கின ஒளியைத் தருகிறான்.

ஆனால் பாதை ஒரு அடர்ந்த காட்டினுள் புகுந்துவிட்டது.

மார்த்தாண்டனையும் மங்கையர்க்கரசியையும் இருள் மறுபடியும் விழுங்கிவிட்டது. மார்த்தாண்டன் திடீரென நின்று விட்டான்; கன்னியும் நிற்கின்றாள். அவள் முகத்தினின்று வரும் பெருமூச்சைத் தவிர அங்கே வேறு சப்தம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தில் ஒரு காற்று வேகமாய் வீசிச் சந்திரனை மறைத்த மேகங்களை வாரி ஏகிவிட்டது. ஓர் ஆந்தை இறக்கையை அடித்துக் கொண்டு மேலே பறந்து சென்றது. வன மத்தியத்தைச் சந்திரன் தன் ஒளியால் விளக்குகிறான்.

ஒரு மரத்தின் அடியில் **பளீர், பளீர்** என்று ஏதோ ஒரு பொருள் மின்னிக் கொண்டிருந்தது. ஒரு வார்த்தையும் பேசாமல் மங்கையர்க்கரசி அந்த மரத்தடிக்குச் சென்றாள்; சென்றாள்.

உடனே விழுந்தாள் விழுந்தாள் கோவென்று அலறினாள்.

கருணாகரா! கருணாகரா! என் காதற் கணவனே! எங்கே சென்றுவிட்டாய்! உனக்கு இங்கே மாலையிடலாம் என்று வந்தேனே! ஒரு நிமிஷத்தில் வீர சுவர்க்கம் சென்று விட்டாயே! இனி இந்த உலகத்தில் சௌகரியத்துக்கும், வீரத்துக்கும் யாரோ உள்ர்? ஹா காளி! பக்தி நிறைந்த மனத்தோடு உனக்கு நறுமலர் கொணர்ந்து பூசை செய்தேன், இதுதானா உன் அருள்.

கருணா! உன்னை என் உயிர் எனவே நினைத்திருந்தேனே? நீ போன பிறகு எவ்விதம் நான் இன்னும் நின்று கொண்டும் பேசிக் கொண்டும் இருக்கிறேன்? என் நாதா, உன் உதடு அசைகிறது போல் இருக்கிறதே! என்னை அழைக்கிறாயோடா? வந்தேன்! வந்தேன்!

இவ்வாறு உயிரற்றுக் கிடக்கும் கருணாகரன் உடல் மீது வீழ்ந்தாள், நெடுநேரம் வரை அவள் எழுந்திருக்கவில்லை. அவள் உருவமே மாறுபட்டுப் போய்விட்டது.

எனக் காட்டுவதன் மூலம் கதாசிரியர் வாசகர்களையே கானகத்துள் கூட்டிச் சென்று திகிலடைய வைத்துவிடுகிறார்.

7. **மங்கையர்க்கரசி, மரத்தடியில் கருணாகரன் இறந்து கிடப்பது கண்டு எவ்விதம் நிலை தடுமாறி அரற்றினாள் எனக் கதாசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார்?**

மரத்தடியில் பளீர், பளீர் என ஏதோ பொருள் மின்னிக் கொண்டிருந்தது ஒரு வார்த்தையும் பேசாமல் மங்கையர்க்கரசி அம்மரத்தடிக்குச் சென்றாள். உடனே விழுந்தாள்; விழுந்தாள் கோவென்று அலறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருணாகரா! கருணாகரா!** என் காதற் கணவனே! எங்கே சென்று விட்டாய்! உனக்கு இங்கே மாலையிடலாம் என்று வந்தேனே! ஒரு நிமிஷத்தில் வீர சுவர்க்கம் சென்று விட்டாயே! இனி இந்த உலகத்தில் சௌரியத்துக்கும், வீரத்துக்கும் யாரோ உளர்?

**ஹா, காளி!** பக்தி நிறைந்த மனத்தோடு உனக்கு நறுமலர் கொணர்ந்து பூசை செய்தேன்; இதுதானா உன் அருள்.

"கருணா! உன்னை என் உயிர் எனவே நினைத்திருந் தேனே! நீ போன பிறகு எவ்விதம் நான் இன்னும் நின்று கொண்டும் பேசிக் கொண்டும் இருக்கின்றேன். என்நாதா, உன் உதடு அசைகிறது போல் இருக்கிறதே! என்னை அழைக்கிறாயோடா? வந்தேன்! வந்தேன்."

என வாசகர்களின் உள்ளத்தை உருக்குமளவுக்கு அவளது அவல வார்த்தைகளை வ. வே. சு ஐயர் வாசகர்களின் மனத்தில் கொட்டி விடுகின்றார்; வாசகர்களையும் நிலைதடுமாற வைத்தும் விடுகின்றார்.

**8. காதலனை (கருணாகரனை) இழந்த மங்கையர்க்கரசியின் தோற் றத்தைக் கதாசிரியர் எவ்விதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்?**

மங்கையர்க்கரசி இவ்வாறு பிரலாபித்துக் கொண்டு உயிரற் றுக்கிடக்கும் கருணாகரன் உடலின் மீது வீழ்ந்தாள்.

நெடுநேரம் வரையில் அவள் எழுந்திருக்கவில்லை. அப்போது அவள் மனம் என்னவெல்லாம் நினைத்தது என யாரால் சொல்ல இயலும் என வாசகர்களையே எண்ணவைத்து விட்டுக் கதாசிரியர் அவளது அவல வார்த்தைகளை விளம்புகிறார். வாசகர்களும் திகிலடைந்து விடுகின்றனர்.

கடைசியாக மங்கையர்க்கரசி எழுந்தாள், ஆனால் எழுந்த தும் அவள் உருவமே மாறுபட்டுப் போய்விட்டது. இப்பொழுது அவள் ரௌத்திராகாரமாக விளங்குகிறாள். மேகங்கள் சந்திரனை மூடிவிட்டன. அந்த நள்ளிருளில் அவள் கண்கள் தழல்விட்டு எரிகின்றன.

இங்கே ஆசிரியர் மேகங்கள் சந்திரனை வெளிச்சம் கொடாது மூடிவிட்டன எனக்கூறி நள்ளிரவின் காரிருளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகின்றாள். இருள் சூழ்ந்த அவ் வேளையில் வாசகர் மனத்திலும் திகிலான இருளைச் சூழ வைத்துவிடுகிறார். அப்பயங்கர இருளின் ஊடே மார்த்தாண்டவனைக் காணுவதாக ஐயர் பேசுகிறார்.

அந்த நள்ளிருளில் அவள் கண்கள் தழல் விட்டு (நெருப்புச் சுடர்) எரிகின்றன. காளியே மனித உரு எடுத்தாற் போன்று நிற்கின்றாள் என அவளது தோற்றத்தையும், ஆவேசமான நிலையையும் காட்டுகிறார் அவளது நெருப்புச் சுடர்விட்ட கண்களில் இருந்து வரும் வெளிச்சத்தில் பார்க்கிறாள். ஆசிரியர் மார்த் தாண்டனை ஏற எடுத்துப் பார்த்தாள் எனத் துணுக்குறக் கூறுகிறார். என்ன சொல்ல, செய்யப் போகிறாள் மங்கையர்க்கரசி என எண்ணும் வாசகர்களைத் தன்வசம் ஈர்த்து, கதையின் போக்கை எதிர்பார்க்கை யுடன் வாசிக்கத் தூண்ட ஆசிரியர் முயன்றுள்ளார்.

நாகத்தைக் கண்ட புறாப்
போல அவன் இருந்த
இடத்தைவிட்டு அசையவில்லை
எனக்கூறி என்ன நடக்கப்
போகிறது என வாசகர்களை அலைய வைக்கிறார்.
இவ்வாறு மங்கையர்க்கரசியைக் காட்டுகிறார்.

**9. மங்கையர்க்கரசி தன் காதலன் இறந்தமையை ஆற்றாது மார்த் தாண்டனைப் பார்த்துக் கூறிய வார்த்தைகளும், செய்கையும் எவ்விதம் விறுவிறுப்புடன் காட்டப்பட்டுள்ளது?**

உயிரற்றுக்கிடக்கும் கருணாகரன் உடலின்மீது வீழ்ந்தாள் நெடுநேரம் எழவில்லை எனக் கூறிய கதாசிரியர் அதன் பின்பு மங்கையர்க்கரசி எழுந்தமையையும் அவளது கோபாவேசத்தையும், தோற்றத்தையும் வாசகர் மனதில் முதலில் விதைத்து அதனூடே வாசகர்களைக் கதையின் பால் ஈர்த்து லயிக்க விட்டார் ஆசிரியர். அதனோடு நின்றுவிடவில்லை. அதாவது அவளது தோற்றத்தைப் பலவாறு எடுத்துக்கூறி மங்கையர்க்கரசியின் நிஜ உருவத்தை வாசகர்கள் தம் கண்களில் காட்டும் உத்தியைக் கையாண்ட வ. வே. சு ஐயர் அவள் ஊடாக வார்த்தைகளையும் செயலையும் கொட்டிவிடுகிறார்.

மங்கையர்க்கரசியின் வார்த்தைகள் ஊடாகக் காதலனின் சிறப்பையும், பெருமையையும், தன் எண்ணத்தையும் கூறிய ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளைக் கூறுவதன் தொடர்ச்சியாக அவளது வீராவேஷத்தின் முடிவினையும் எடுத்துக் காட்டி வாசகர்களைத் திகைக்க திகிலடைய வைக்கத் தவறவில்லை.

**"பாதகா! என் சிங்கத்தை மறைந்து வந்து கொன்று விட்டாயே, என்னை மணக்கலாம் என்றல்லவா இருந்தாய்! இந்தா மாலையிடுகிறேன் வா!"** என்று சொல்லிக் கொண்டே மடியிலிருந்த கையீட்டியினை உருவினாள்; மார்த்தாண்டன் மீது பெண்புலி போல் பாய்ந்தாள், மருமத்தில் (உயிர் நிலை - மார்பு) அவனைக் குத்தி வீழ்த்தி விட்டாள். இங்கே மங்கையர்க்கரசியைப் பெண் புலியாக உவமித்து அவள் பாய்ந்து கொல்லும் பாங்கை விபரிப்பார் ஐயர் அவர்கள் (மங்கையர்க்கரசி - உவமானம், பெண்புலி - உவமேயம்,. பாய்தல் - பொதுத்தன்மை)

இங்கு ஆசிரியர் அவளது பேச்சின் ஊடாக எழுந்த வீராவேஷம் அவனின் உயிர்நிலையில் குத்திக் கொலை செய்யும் அளவுக்குச் சென்று விட்டதைக் காட்டியதோடு நின்றுவிடாது; மங்கையர்க்கரசியைத் தொடர்ந்த அவலத்தினால் ஏற்பட்ட வீராவேஷத்தை மீண்டும் வார்த்தைகளின் ஊடாக வடிக்கின்றார்.

**"வஞ்சகா! பாதகா! போ! தைரியமிருந்தால் வீரசுவர்க்கத்துக்குப் போய் கருணாகரனோடு போர் செய்! நானும் வருகிறேன்."** என்ற வார்த்தைகள் ஊடாக மார்த்தாண்டன் மேல் உள்ள உச்ச வெறுப்பினைக் காட்டுகிறார்.

என் காதலன் இல்லாத இடத்தில் நீ உயிர் வாழ்கிறாயா? நீயும் உயிர் நீத்துவிடு என்ற செய்தியை செயலூடாக எம்மை உணர வைக்க ஆசிரியர் முனைகிறார். அவள் காதலன் மேல் வைத்திருந்த அளவற்ற வாஞ்சையையும் அவளது வீரம்மிகு வார்த்தைகளையும், செயல்களையும், செயலினூடாக, முடிவினூடாகக் காட்டுகிறார்.

வீரசுவர்க்கத்துக்குச் சென்று கருணாகரனுடன் போர் செய்! நானும் வருகிறேன் என்ற வார்த்தைகள் ஊடாகக் கருணாகரனின் வீரச்சிறப்பை வெளிப்படுத்துவார். கருணன் போன பிறகு எனக்கு இனி இவ்வுலகில் ஒன்றுமில்லை.

**"காளீ! இந்த உடலை உனக்கு இங்கே பலியிடுகிறேன். ஏற்றுக்கொள்! கருணன் கூப்பிடுகிறான். வந்துவிட்டேன் என்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாதா வந்துவிட்டேன்!** இனித் தாமதியேன் என் கடமை தீர்ந்து விட்டது. என் உயிரை வஞ்சித்து (வஞ்சகமாக ஏமாற்றி) வாங்கிய வனைப் பழிவாங்கிவிட்டேன் இதோ வந்துவிட்டேன். எனக்கூறிக் கொண்டு கருணாகரன் உடலிருந்த இடம் சென்று தன்னையும் குத்திக் கொண்டு விழுந்து விட்டாள் எனக் கூறுவதன் மூலமாக வாசகர்களை துக்கக் கடலினுள் திகைப்புடன் ஆழ்த்தி விட்டார் கதாசிரியர் வ. வே. சு. ஐயர் அவர்கள். இதற்குமேல் வாசகர்களால் என்னதான் எண்ணமுடியும் நிலை தடுமாறுவதைத்தவிர, கதைசொல் வதில் வல்லவர் வ. வே. சு. ஐயர் என்பதைச் சிறுகச் சொல்லி வாசகர் மனதில் தன் எண்ணத்தைப் பதித்து விடுவதில் அவர்கை யாண்ட கதை உத்திகளும், திருப்பங்களும் போற்றத்தக்கன.

தன் காதலன் மேல் அவளுக்கு இருந்த அளவொணாக் காதலை வார்த்தைகள் ஊடாக வடித்த ஆசிரியர், மார்த்தாண்டவன் மேல் அவளுக்கு இருந்த வெறுப்பை வார்த்தைகள் ஊடே ஐயர் வடித்ததோடு நின்று விடாது மார்த்தாண்டவனின் வஞ்சகச் செயலுக்குத்தக்க பதிலடியைச் செயல் மூலம் காட்டிவிடுவதையும் கதைத் தொடர்ச்சியில் ஆசிரியர் காட்டி விட்டார், கதைமுடிவினை செயல் முடிவாக கண்முன் நிறுத்திவிடுகிறார். இவ்விதம் வார்த்தைகள் ஊடாகவும், செயல் மூலமாகவும் மங்கையர்க்கரசியின் உணர்ச்சியை யும், கதைமுடிவையும் இலாவகமாகக் கதை சொல்லி எம்மை வியப்பில் கதாசிரியர் ஆழ்த்தியே விடுகிறார். வ. வே. சு ஐயர் சிருஷ்டித்த கதாபாத்திரங்கள் உயிருடன் நடமாடுவன. உண்மைக் காதல், தியாகம், வீரம் முதலிய மாண்புடை மக்கள் பண்புகள் கதையில் ஒளியுடன் விளங்குகின்றன.

**10. பின்வரும் விடயங்களுக்குக் குறிப்புரை தருக.**

**அ. சிறுகதை எழுதப்பட்ட காலப்பின்னணி**

**ஆ. இக்கதைக்கு சூசிகை எழுதப்பட்டதன் நோக்கம்.**

**இ. ஐயரின் சிறுகதை எழுதும் ஆற்றல்.**

**ஈ. கதை கூறும் உத்தி பாங்கு**

**உ. கதையின் மொழிநடை**

**அ. சிறுகதை எழுதப்பட்ட காலப்பின்னணி**

ஐரோப்பிய நாகரிகத் தொடர்பினால் தமிழிலே பல இலக்கிய வகைகள் தோன்றியுள்ளன. நாவல் இலக்கியம் தோன்றிய பின்பே சிறுகதை இலக்கியம் தோன்றியது. இவற்றுள் சிறுகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

இலக்கியம் முதலிடம் பெறுகிறது. இச்சிறுகதைகள் தோன்றுவதற்கு முன்பே '**பஞ்சதந்திரக்கதை**,' '**விக்கிரமாதித்தன் கதை**' போன்ற கதைகள் தமிழில் இருந்திருக்கின்றன. எனினும் சிறுகதைகளுக்கான உருவ அம்சங்களைக் கொண்டு இவை சிறுகதைகளாக மாட்டா எனப்பேராசிரியர் செல்வநாயகம் அவர்கள் கூறுவார். '**எட்கார் அலன் போ**' என்னும் அமெரிக்க இலக்கிய ஆசிரியர் நூற்றாண்டுகளுக்கு முன்னர் தொடக்கி வைத்த ஒரு தனிப்பட்ட இலக்கிய வகையே '**சிறுகதை**' எனலாம். இருபதாம் நூற்றாண்டிலே இந்திய ஆசிரியர் களில் முதல் முதலில் '**இரவீந்திரநாத் தாகூர்**' என்பவரே சிறுகதை முயற்சியில் ஈடுபட்டார்.

இவரைப் பின்பற்றி வா. வே. சு. ஐயரும், பாரதியும் தமிழிலே சிறுகதை இலக்கியத்துக்கு உருவம் அமைத்தனர். தாகூர் அவர்கள் எழுதிய கதையொன்றை முன்மாதிரியாகக் கொண்டு வ. வே. சு. ஐயர் '**குளத்தங்கரை அரச மரம்**' என்னும் சிறுகதையை முதன்முதலில் எழுதினார். அதைத் தொடர்ந்து '**மங்கையர்க்கரசியின் காதல்**' முதலிய கதைகள் நூல் வடிவில் வெளிவந்தன.

தமிழிலக்கியம் பலவழிகளிலும் புத்துயிர் பெற்று வளர்ச்சி யுறும் காலமாக இருபதாம் நூற்றாண்டைக் கொள்ளலாம். இக்கால இலக்கியம் வளமுள்ளதாக இருந்துள்ளது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. தமிழ் நாட்டில் மட்டுமன்றி ஏனைய நாடுகளிலும் மக்களு டைய வாழ்க்கைப் பண்பாடுகள், மொழி முதலியனவும் முன்னேறின இத்தகைய விழிப்புணர்ச்சிக்குப் பின்வருவன காரணங்களாக அமைந்தன.

- ஐரோப்பிய நாகரிகத் தொடர்பும், ஆங்கிலக் கல்வி விருத்தியும்.
- பண்டைக்கால தமிழிலக்கியத்தின் சிறப்பை உணர்ந்து அவ்விலக்கி யங்களை அச்சிட்டு வெளிக் கொணர்ந்தமை.
- இத்தகைய நூல் வெளிவந்தமையால் மக்கள் அக்கால சீரிய நிலை, இலக்கிய வளம் பற்றி அறிந்தமை.
- தமிழ் மொழியை மேலும் வளரச் செய்ய மக்கள் முயன்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ ஆங்கிலக் கல்வியினால் தமிழ் மக்களுடைய உள்ளம் மேலும் விரிவடைந்தது, புதிய கருத்துக்களும் கொள்கைகளும் தோன்றின. இவை அவர்களிடையே உணர்ச்சியை வெளிப்படுத்தின.

◈ இவ் உணர்ச்சிகளை எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒரு இலக்கிய வகைகளாக நாவல், கவிதை போன்ற இலக்கியங்கள் அமைந்தன இதன் தொடர்ந்த வளர்ச்சியே சிறுகதை இலக்கியம் தோன்றும் பின்னணியாக அமைந்தது.

◈ இதற்கு அச்சு இயந்திரம் வருகையும் செயற்பாடும் உத்வேகம் அளித்தது எனக் கூறின் மிகையாகாது.

◈ இதன் பின்னணியிலேயே **"மங்கையர்க்கரசியின் காதல்"** என்ற சிறுகதை எழுதப்பட்டது எனலாம்.

◈ குலோத்துங்க சோழனுக்காகப் படை எடுத்துக் கலிங்கம் சென்று வெற்றிவாகை சூடித் திரும்பியவனே கருணாகரத் தொண்டைமான்.

◈ ஆங்கில ஆட்சியின் வருகையை ஒட்டிய இலக்கிய வகைகளின் பிரசுரமும், தோற்றமும் இக்கதை எழுதுவதன் பின்னணியாக அமைந்தது.

◈ அவ் வீரனுடைய மகளே மங்கையர்க்கரசி. அவளது வீரத்தைக் கதை மூலம் வ. வே. சு. ஐயர் இருபதாம் நூற்றாண்டில் கூறிவைக்கிறார்.

**ஆ. இக் கதைக்குச் சூசிகை எழுதப்பட்டதன் நோக்கம்.**

◈ இக்கதை எழுந்த காலப் பின்னணியை அறிந்து கொள்ளுதல்.

◈ இக் கதையின் கதாபாத்திரங்களாகச் சிருஷ்டிக்கப்படுபவர்களை அறிமுகம் செய்யும் நோக்கம்.

◈ ஐயர் கதையை ஆரம்பிப்பதற்கு முன்னர் என்ன விடயங்கள் நிகழ்ந்துள்ளன என்பதைச் சிறுகக்கூறி வாசகர்களைத் தன் வசம் ஈர்க்கச் செய்தல்.

"கருணாகரன் என்னும் வாலிபனை மங்கையர்க்கரசி காதலிக்கிறாள்."

◈ கதாபாத்திரங்களை அறிமுகம் செய்தலோடு அவர்களின் குடும்பப் பின்னணியைத் தெரியச் செய்தல்.

◈ கதையை மிகைபடக் கூறாது கதை எழுந்ததற்கான காரணத்தை இரத்தினச் சுருக்கமாகக் கூறி வைக்க விரும்புதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ சூசிகையை வாசகர் படித்தவுடன் பிரச்சினையை ஓரளவு தெரிந்து கொள்ளல், அதன் பின் நடந்ததை அறியக் கதை படிக்க ஆர்வப்படல்.

◈ சூசிகையை வாசகர் படித்தவுடன் அடுத்து என்ன நிகழப்போகிறது என்ற வேணவா, அதாவது கதை வேட்கையை ஏற்படுத்துதல்.

**இ. ஐயரின் சிறுகதை எழுதும் ஆற்றல்.**

◈ வ. வே. சு. ஐயர் அவர்கள் சிறுகதைக்குத் **தந்தை** ஆவார். முதன்முதலில் தாகூரைப் பின்பற்றித் தமிழில் முதன்முதல் **"குளத்தங் கரை அரசமரம்"** என்ற சிறுகதையை எழுதியவர்.

◈ ஐயர், சிறுகதை எழுதுவதற்கு ஆற்றல் மிக்கவர் என்பதை அவர் இலாவகமாகக் கதை கூறிச் செல்வதில் இருந்து அறியலாம்.

◈ கதையின் பாத்திரங்களை அறிமுகம் செய்யும் போதே வாசகர்களைக் கவரும் விதத்தில் இவர்கள் யார்? இவர்களது பிரச்சினை என்ன என்பதை வ. வே. சு. ஐயர் தெரிய வைத்து விடுகிறார்.

◈ கதையின் ஆரம்பத்தில் கதைநிகழும் களத்தை (வனம்) அறிமுகம் செய்ய ஐயர் கையாண்ட உத்தி போற்றத்தக்கது.

◈ நடுநிசி இருளையும், பத்திரகாளியின் கோயிலையும் காட்டும் விதம் வாசகர்களை ஈர்க்கும் விதத்தில் பயங்கரத்துடன் கூடியதாக அமைந்து விடுகின்றது.

◈ கதை கூறிச் செல்லும் ஐயர் கதையில் அடிக்கடி திருப்பங்களை அமைத்தல் காணமுடிகிறது. சான்றாக நடுநிசியின் இருளின் கொடுமையைக் கூறிய ஐயர்.

> "பத்திரகாளி சந்நிதியில் தனியே உட்கார்ந்து
> கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்
> இக் கன்னி யார்?
> சத்தம் செய்யாதே யாழின் இன்னிசை
> போன்ற குரலில் அவள் ஏதோ பேசுகிறாள்......"

எனக் கூறுவார். இவ்வாறு வாசகர்களைத் தன்பால் ஈர்த்துக் கதை கூறும் பாங்கு வியக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ சுருங்கக் கூறி விளக்கவைத்தல் பிரதான பாத்திரமான மங்கையர்க் கரசியின் ஆவலையும், ஆசையையும் வாசகர்கள் உணரும் விதத்தில் கூறிவைத்தல்.

◈ அடுத்து என்ன நிகழப்போகிறது என்ற ஆவலைத் தூண்டும் விதத்தில் வாசகர்களைத் தன்னருகே அழைத்துச் செல்லும் பாங்கு.

◈ அடிக்கடி கதையில் திருப்பங்களை ஏற்படுத்தலோடு, படிப்போர்கள் திகிலடையும் விதத்தில் உணர்ச்சி பூர்வமான வார்த்தைப் பிரயோகங்கள்; அடுக்கடுக்கான நினைவோட்டங்கள்.

◈ வாசகர்கள் அடுத்து என்ன நிகழப்போகிறது என்ற ஆவலைத் தூண்டும் விதத்தில் அடிக்கடி **திகிலோடு கதை கூறும்** பாங்கு.

◈ கதாபாத்திரங்கள் பேசும் விதம், உணர்ச்சி ததும்பக் கதைகூறும் போக்கு என்பன.

"காளீ! உன்னிடத்து வருகிறேன்... கருணாகரனுக்குத் தீங்கு வராமல் காப்பாய்"

◈ கதையை எவரும் வாசித்து விரும்பும் வகையில் அமைந்த தேவைக்கேற்ற கம்பீரமான மொழிநடை.

◈ மங்கையர்க்கரசி எதனை விரும்பினாளோ அதனை அடையத் துடிப்பதும், எண்ணியதை அடையாதபோது கதாநாயகி படும் அவஸ்தை, அவலத்தை வாசகர்களின் மனத்தில் தைக்குமாறு கூறுவதில் வ. வே. சு. ஐயர் வல்லவர்.

"காளீ! உன் அருட் கண்ணால் என்னைப் பாராய். என் உடல், பொருள், ஆவி மூன்றையும் உன்பாதத்தில் சமர்ப்பிக்கிறேன்"

எனப் பின்னால் நிகழப் போவதை மங்கையர்க்கரசி ஊடாக உள்ளார்ந்தமாகக் கூறிவைத்தல்.

◈ மங்கையர்க்கரசி தனக்குக் கிடைக்க வேண்டியது கிடையாத போது எடுக்கும் இறுதி முடிவை கதையின் இறுதியாக அமைத்துக் கதைக்கு முடிவு கூறும் போக்கு சிறப்பானது. முடிவினை வாசகர்கள் தாமே தெரிந்துகொள்ள இடம் வைக்காது கதையின் முடிவையும் கூறி வாசகர்களை வியப்படையச் செய்துவிடுவதில் ஐயர் சிறப்பானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ கதையை ஆரம்பத்தில் வாசித்தது தொடக்கம் இறுதிவரை இதன்பின் என்ன நிகழப்போகிறது என்ற ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கதையை வளர்த்தல்.

◈ பாத்திரங்களை மிகக் குறைவாக அமைத்ததோடு; பாத்திரங்கள் யாவும் விறுவிறுப்புடன் கதை கூறுதல்.

◈ ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை விறுவிறுப்புடனும், வாசகர்களின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலும் வாசகர்களைச் சலிக்காது கதை வாசிக்கக் கூட்டிச் செல்லும் விதம் பாராட்டத்தக்கது

◈ தான் கதைக்குக் கருவாக எடுத்துக் கொண்ட நிகழ்வு; அதனை அடைய நிகழ்த்திய ஏனைய உப நிகழ்வுகளைப் பொருத்தி, அவற்றை இயங்கச் செய்தல், பாத்திரங்களை நகர்த்திச் செல்லல் என்பன போற்றத்தக்கது. ஐயர் கதை கூறுவதில் வல்லவர் என்பதை இவை மூலம் அறிந்து கொள்ளலாம்.

**இ. கதைகூறும் உத்தி பாங்கு.**

◈ கதாபாத்திரங்களை முதலில் அறிமுகம் செய்துவிடல்.

◈ கதை நிகழும் இடத்தை விறுவிறுப்புடன் அறிமுகம் செய்யும் பாங்கு.

◈ எங்கே பார்த்தாலும் இருள்; காரிருள்; கறுத்த. கனத்த மேகங்கள்.
காற்றுச் சீறிக் கொண்டு செல்கிறது
பத்திரகாளியின் தோற்றம் பயங்கரமாக இருக்கிறது....

◈ தூரத்தில், புலியும் கரடியும் உறுமுதல்.

◈ கோட்டான் பயங்கரமாகக் கத்துகிறது.

◈ களத்தை அறிமுகம் செய்த ஐயர் மங்கையர்க்கரசியின் வேணவா? அவள் இவ் இருளில் வந்திருப்பதன், நோக்கம் என்பவற்றை அறிமுகப் படுத்தும் பாங்கு என்பவற்றை

"..... யாழின் இன்னிசை பேசுகிறாள்....!"

எனக் கூறி அவள் ஆசையை, அவள் எண்ணத்தைக் கூறும் விதம்

"பத்திரகாளி! உன் சந்நிதியில் கருணாகரனுக்கு மாலையிட வேண்டுமென்றே வந்திருக்கிறேன்...."

"சிங்கத்தைப் பார்த்த கண்ணால் செந்நாயைப் பார்ப்பேனா?"

எனக் கூறிக் கருணாகரனின் பெருமையையும் மார்த்தாண்டனின் சிறுமையையும் கூறும் விதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ காளியிடம் வேண்டுதல் செய்யும் பாங்கு. கதையை வளர்த்துச் செல்லல்; பாத்திரங்களை நகர்த்துதல்; உணர்ச்சி பூர்வமாகப் பாத்திரங்கள் பேசுதல்; நடமாடுதல்.

காளீ! உன்னிடத்து வருகிறேன் என்று வாக்களித்த என் கருணாகரனுக்கு தீங்கு வராமல் காப்பாய்...

◈ கதைத்திருப்பமாக புயல் காற்று வருவதுபோல ஒரு வீரன் அவளெதிரே வருதல், பேசுதல் போன்ற யுத்திமூலம் வாசகர்களை வேறுவழிக்கு ஈர்த்து இழுத்துச் செல்லும் விதம், உத்திகள்.

இதற்குப் பிறகு என்ன நிகழப்போகிறது என வாசகர்களின் வாஞ்சையைத் தூண்டி அவர்களை கதை வாசிப்பதில் விருப்பத்தை ஏற்படுத்தும் பாங்கு.

◈ கருணாகரன் இறந்துகிடக்கும் வனத்தை அதாவது கதையின் களத்தை பயங்கரத்தோடு காட்டுதல்

சந்திரன் இலேசான மேகத்துக்குப்பின் இருந்து மங்கின ஒளியைத் தருகிறான்.........

மார்த்தாண்டனையும் மங்கையர்க்கரசியையும் இருள் மறுபடியும் விழுங்கி விடுகிறது......

◈ கருணாகரனுக்கு நேர்ந்த நிகழ்வு மூலமாக வாசகர்களைத் திகிலடையச் செய்வதோடு;

காதலியின் எண்ண அலைகளை வார்த்தைகள் மூலம் வடித்துவிடல். காதலியின் அவலங்களை அடுக்கிச் செல்லும் விதம்.

கருணாகரா! கருணாகரா! என் காதற் கணவனே! எங்கே சென்று விட்டாய்!

ஹா காளி! பக்தி நிறைந்த மனத்தோடு நறுமலர் கொணர்ந்து பூசை செய்தேனே;

இதுதானா உன் அருள்!

◈ ஐயர் கதையின் இறுதியில் ஆவேசமாக மங்கையர்க்கரசி பாத்திரத்தை வளர்த்து வந்து; அவளது உணர்ச்சியுடன் கூடிய செய்கையைக் காட்டி விடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காளீ! என் உடல். பொருள். ஆவி மூன்றையும் உன்பாதத்தில் சமர்ப்பிக்கிறேன். உன்அருட் கண்ணால் என்னைப் பார்ப்பாய்..."

பின்னே நிகழ்வதை முன்னே கூறும்விதம். காதலன் இல்லாத இடத்தில் நான் வாழ்வதா? அவனிடம் நான் வந்துவிடுகிறேன் என மங்கையர்க்கரசி தன்னை மாய்த்தல்..

◈ கதையைப் படிப்போர் கதாநாயகியின் முடிவை அறிவதோடு; அதற்கு நியாயத் தீர்ப்பு ஒன்றை வழங்கக் கூடியதாக கதை முடிவையும் ஐயர், கூறிவிடுகிறார்.

வஞ்சகா! பாதகா! போ! தைரியமிருந்தால் வீரசுவர்க்கத்துக்குப் போய் கருணாகரனோடு போர் செய். நானும் வருகிறேன்.....

எனக்கூறித் தனது செய்கையைக் கடமையாகக் காதலி கூறுவதையும் கதையின் உத்தியாக ஆசிரியர் கூறி வாசகர்களை வியக்க வைத்து விடுகிறார்.

இவ்வாறு பல்வேறு உத்திகள், கதை கூறும் பாங்கு என்பவற்றின் மூலம் வ. வே. சு. ஐயர் கதைகூற வல்லவர் என்பதை அறிய முடிகிறது.

உ. **கதையின் மொழிநடை**

வாசகர்களின் வாசனைக்கு ஏற்ற விதத்தில் தனது மொழி நடையைக் கையாண்ட பெருமை வா. வே. சு ஐயர் அவர்களுக்குச் சிறப்பான இடத்தை வழங்கியுள்ளது.

◈ கதாபாத்திரங்கள் கதைகூறும் பாங்குக்கு ஏற்றதாக விறுவிறுப்புடன் தனது மொழி நடையை மாற்றிச் செல்லும் விதம் வியக்கத்தக்கது.

◈ தான் கூற வந்த விடயத்தை அறிமுகம் செய்ய திகிலுடன் கூடியதான வார்த்தைப் பிரயோகம்; விறுவிறுப்புடன் கூடிய சொற்திறன், வளம், கையாளுகை காணப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்திரகாளி கோயிலில் விளக்கு எரிந்து
கொண்டிருக்கிறது காற்று தீபத்தை
அணைக்கும் போதெல்லாம் மரங்களின்
நிழல்கள் அசைவதானது பூதங்கள்
ஒன்றையொன்று எதிர்த்துப் போர்புரிவது
போல் இருக்கிறது..........."

"பத்திரகாளியின் தோற்றம் பயங்கரமாக
இருக்கிறது........."

◈ காதலி தன் எண்ணத்தை வெளியிடும் பாங்கு, வாசகர்களை ஈர்க்கும் விதத்தில் மொழிநடையைக் கையாளும் விதம். தேவி! மஹாகாளி! பத்திரகாளி! உன் சந்நிதியில் கருணாகரனுக்கு மாலையிட வேண்டு மென்றே வந்திருக்கிறேன்........

"சிறுத்தையைப் பார்த்த கண்ணால்
செந்நாயைப் பார்ப்பேனோ? "

◈ காதலனின் பெருமை கூறும்போது அவன் செய்த போரில் போர்க்களம் முழுவதும் கறங்கு (காற்று) போல் திரிந்து பகைவர் யானை சேனையெல்லாம் ஊதையிற்பட்ட பூளைப் பூவென்ன நூறி எறிந்து....!

எனக் கூறுவதன் மூலம் சான்றுகாட்டி நிறுவுதல், அடுக்கடுக்கான சொல் பிரயோகங்கள்.

◈ வாசகர்கள் யாவரும் கற்று விளங்கக் கூடிய விதத்தில் யதார்த்தத் துடன் கதைகூறும் மொழிப் பிரயோகம்.

◈ கதையின் ஆரம்பம் தொடக்கம் முடிவுவரை கதையை நகர்த்திச் செல்லும் போதெல்லாம் தேவைக்கேற்ற மொழிநடை, மொழிப் பிரயோகம் என்பவற்றை இடத்துக்கேற்ப மாற்றி அமைத்தல் என்பன ஐயரின் கதையின் சிறப்புக்கும், வெற்றிக்கும் வாய்ப்பாக அமைந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகா! என் சிங்கத்தை மறைந்து
வந்து கொன்று விட்டாயே.
என்னை மணக்கலாம் என்றல்லவா
இருந்தாய்!
இந்தா. மாலையிடுகிறேன் வா!

என்று கூறி தனது கடமையை முடிக்கிறேன் என மங்கையர்க்கரசி பேசுகிறாள். இவ்வாறு கதை எங்கணும் தேவைக்கேற்ப மட்டிட்ட அளவில் வாசகர்களின் கவனத்தைத் திருப்பும் விதத்தில் மொழிநடையைக் கையாண்ட ஐயர் அவர்களின் கதை சொல்லும் போக்கு வியக்கத்தக்கது. ஐயர் அவர்கள் கதைகூறுவதில் மொழிநடையைத் தேவைக்கேற்ப பயன்படுத்துவதில் சிறப்பான இடத்தைப் பெற்றவர் என்பதை கூறலாம்.

காளீ! இந்த உடலை உனக்கு இங்கு
பலியிடுகிறேன். ஏற்றுக்கொள்!
கருணன் கூப்பிடுகிறான் வந்துவிடுகிறேன்....!

என இலாவகமாக வாசகர்களின் மனத்தைத் தொடும்படியாகவும் வியப்பிலாழ்த்தும் விதத்தில் விறுவிறுப்பான வார்த்தைப் பிரயோகங்களுடன் கதையை வளர்த்துச் சென்றார். வெற்றி பெற்றார். இவற்றிற்கு ஐயர் கையாண்ட மொழி நடையும் முக்கிய பங்கு வகித்தது என்பதைக் கூறமுடியும். ஐயரின் மொழி நடை வாசகர்களின் வாசனையை, எதிர்பார்ப்பை அதிகரித்தது என்பதில் வியப்பே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04. கவிதைகள்

1. முன்னோக்கு

1. **"முன்னோக்கு" என்ற கவிதையின் மூலமாக முருகையன் எதனைக் காட்ட முனைகிறார்?**
**("முன்னோக்கு" என்ற கவிதையில் கவிஞர் கூற முற்படும் விடயம் என்ன?)**

"சென்றொழிந்த காலம் மீண்டும் திரும்பி வரமாட்டாது...." என்பதைக் கவிஞர் நினைவு கூருகிறார். அதேவேளை **நிகழ்ந்தத்தை எந்நேரமும் எண்ணிக் கொண்டிராதே** என்பதையும் கூறிவைக் கின்றார். உனது வாழ்வியல் நிகழ்வில் பல்வேறு வெற்றிகள், தோல்விகள் உனக்கு அடிக்கடி ஏற்படும். அதனைச் சந்திக்கவேண்டி ஏற்படலாம். எது, எவ்வாறு நிகழினும் எதிர்நின்று தோல்வி ஏற்படும்போது மனங்கலங்கிப் பின்னோக்கி விடாதே. வெற்றியே அடைவதையே உனது இலட்சியமாகக் கொண்டு முன்னோக்கிச் செல். அப்போது இழந்ததை மீண்டும் பெறுவாய். வெற்றிபெறுவாய், எனக்குக் கிடைத்த தோல்விகள் எல்லாம் வெற்றிகளாக மாறும். எனவே எப்பொழுதும் தோல்வி கண்டு பின்னோக்காது எப்பொழுதும் முன்னோக்கி உனது செயலைத் தொடர்ந்து ஆற்று எனக் கவிஞர் **"மலையில் பெய்த மழையின் பயணத்தை", பெருவெள்ளத்தைச்** சான்று காட்டி விளங்க வைக்க முனைகிறார்.

2. **கவிஞர் முருகையன் குன்றில் பெய்த மழையின் பெருவெள்ளத்தை எவ்விதம் மனிதவாழ்வின் பயணத்துடன் ஒப்புவித்துக் காட்டுகின்றார்?**

மலையிலே பொழிகின்ற பெருமழை பெருவெள்ளமாகப் பிரவாகித்துக் கீழ்நோக்கி ஓடுகின்றது. இவ்வாறு ஓடும் நீர் பல்வேறு வழிகளிலும் கீழ்நோக்கிச் சென்று ஓடைகளாக மாறிவிடுகின்றன.

இவ்வாறு மலையில் நின்று கீழ்நோக்கிச் செல்லும் பல்வேறு ஓடைகள் யாவும் ஓரிடத்தில் வீழ்ந்து பெரு ஆறாக மாறி ஓடுகின்றன. இவ்விதம் பெரிய மகாவலிகங்கைபோல் ஆறாக மாறிப் பல்வேறு இடங்களிலும் பல்வேறு தடைகளையெல்லாம் தாண்டிச் செல்கிறது. வளைந்து, நெழிந்து, சுழன்று, உயர்ந்து, தாழ்ந்து பல்வேறு வழிகளிலெல்லாம் கீழ்நோக்கிப் பெருஆறாக இந்நீர் ஓடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறெல்லாம் ஓடிச்செல்லும் நீரானது இறுதியில் தாழ்ந்த இடத்தில் நீலத் திரைகடலைச் சேர்ந்து சங்கமமாகிறது. அதாவது கடல்நீரோடு இந்நன்னீர் கலந்து நீரோடு நீராகி விடுகிறது. இந்நீர் திரும்பவும் தான் உற்பத்தியாகிய மலையை நோக்கி மேலே செல்ல வழியே இல்லை. திரும்பி மேல் நோக்கிச் செல்ல எந்தவிதத்திலும் முனைய வும் முடியாது. அது நினைப்பினும் நிகழப்போவதும் இல்லை. சென்றது கீழ்நோக்கிச் சென்றதுதான்; உயரப்போக முடியாது.

"மலையுச்சிச் சொந்த ஊர் செல்லத்
துளியும் இடமில்லை"

மனிதன் பிறக்கிறான். பிறக்கும்போது எந்தவிதமான மனச் சஞ்சலமுமற்ற வெள்ளையுள்ளத்துடனேயே பிறக்கிறான்; குழந்தை யாக வாழ்கிறான். ஆனால் அவனது காலவோட்டத்தில் பல்வேறு அகப், புறக் காரணங்களால் அவனது வாழ்வு, எண்ணம், செயலி வேறுபட்டு விடுகின்றது. அவன் பிறந்தபோது இருந்த வெட்ட வெளி யான அந்த வெள்ளை உள்ளம் எதுவுமே பற்றிய சுமை யில்லாத நன்மனம், நல்வாழ்வு தொடர்ந்து கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் அவனே துன்பத்தை வரவழைக்கிறான்.

மனிதனது வாழ்வின் காலச்சக்கரத்தில் பல்வேறு தோல்வி கள், வெற்றிகள் அவனைச் சந்திக்கின்றன. மகிழ்ச்சி, சந்தோஷம் இவையாவும் மனிதனின் காலவோட்டத்தில் சுழலும் சக்கரமாக மாறிவிடுகின்றன. இவ்வாறு பல்வேறு போராட்டங்களை எதிர்கொள் வது மனிதவாழ்வியல். இவ்வாறெல்லாம் பல்வேறு இன்னல்களுக்கும், போராட்டங்களுக்கும், மகிழ்வுகளுக்கும், சாதனை களுக்கும் சுழன்று சுழன்று வாழ்வின் பயணத்தை நகர்த்திச் செல்லும் மனிதன்; ஆற்றுநீர் எவ்வாறு கடலையடைந்து சங்கமாகிவிடுகின்றதோ; அதேபோல் ஒருநாள் தன் இயல்பினை இழந்து, செயலினை இழந்து, இயக்கத்தை இழந்து இறந்தே விடுகின்றான்.

"வெற்றி விளைந்தாலும் தோல்வி விளைந்தாலும்
என்னதான் எய்திடினும் இம்மியும்
பின்னோக்காது முன்னோக்கும்..."

இவ்வாறு மனிதனின் வாழ்வியல் பாதையையும், அவனது இறுதிமுடிவினையும் காட்டிச் சென்று ஒழிந்த காலம் திரும்பி வரமாட்டாது எனக் காட்டும் கவிஞர் மனிதனில் காலவோட்டப் பயணத்தை மலையுச்சியில் உற்பத்தியாகும் மழை நீருடன் ஒப்பிட்டுக் காட்டி முன்னேறிச் செல் எனக் கர்ச்சனை செய்து எம்மை உயரத் தில் தள்ளி விடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **"கீழ்இறங்கிப் போன நீர் கீழேதான் பின்னரும் ஆழ இறங்கும்" என்ற இயல்பு வழியை மனிதவாழ்க்கையுடன், முருகையன் எவ்விதம் இயைபுபடுத்துகிறார்?**
**(முன்னோக்கு என்ற கவிதையில் காலத்தையும், நதியையும் கவிஞர் ஒப்பிடுவதில் உள்ள பொருத்தப்பாடு என்ன?)**

மழைநீரானது பல்வேறு வழிகளிலும் கீழ்நோக்கி ஓடி; பல ஓடைகளாகி; ஓடைகள் வழியே கீழ்நோக்கி ஓடி; இப்பல ஓடைகள் யாவும் ஒன்றாக வீழ்ந்து ஆறாக மாறிக் கீழ் நோக்கி ஓடுகின்றது.

இவ்வாறு ஓடும்போது வளைந்து நெழிந்து உயர்ந்து, தாழ்ந்து பல்வேறு வழிகளிலும் நீர் அலைக்கழிக்கப்பட்டுக் கீழ் நோக்கியே ஓடுகின்றது. மலையில் இருந்து இந்நீர் எப்போது கீழ் இறங்கியதோ மேனோக்கித் திரும்ப வந்த வழியே அது செல்வ தில்லை. செல்ல முடியாது இவ்வாறு ஓடும் பெரு ஆறானது இறுதியில் கடலுடன் சேர்ந்து சங்கமமாகி விடுகின்றது. தான்வந்த வழியைத் திரும்பிப் பார்த்தது கிடையாது. திரும்பிப் பார்த்தாலும் உயரச் செல்லமுடியாது. அது கடல் நீரோடு நீராகி விடுகின்றது.

'மலையுச்சிச் சொந்தஊர்செல்லத் - துளியும் இடமில்லை'

நீரானது கீழே இறங்கி இறங்கிச் சென்று பின்னரும் கீழே ஆழ இறங்கி விடுகின்றது. அது உயரவழியே இல்லை. எனவே மனிதன் தனது வாழ்வில் எப்பொழுதும் பின்னோக்கிச் செல்பவனாக வாழக்கூடாது. தனது முயற்சியினால் அதாவது **"முயற்சி திருவினை யாக்கும்"** என்ற வாக்கினைத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு முன்னோக்கிச் செல்வதாகத் தனது வாழ்வியலை அமைத்துக் கொள்ள வேண்டும்.

மனிதனின் காலவோட்டத்தில் பல்வேறு இன்பம் துன்பம், வெற்றி, தோல்விகள் ஏற்படலாம். துன்பம், தோல்வி கண்டு துவண்டுவிடின் எமது வாழ்வின் நோக்கம், செயல் பின்னோக்கிச் சென்றுவிடும். இத்தோல்விகளை எதிர்த்து முன்னோக்கிச் செல்வதன் மூலம் தோல்வியை முறையடிக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் சாதனை படைப்பதாக உயர் எண்ணம், முயற்சி கொண்டதாக அமையவேண்டும். இவ்வாறு காலவோட்டத்தில் எமக்கு ஏற்படும் தோல்விகள் எம்மைக் கீழே தள்ளி மனத்தைப் பாழ்படுத்தி யோசனையை ஏற்படுத்தி வாழ்வில் நிசப்தத்தை ஏற்படுத்திவிடும். எனவே துன்பம் கண்டபோது துவண்டு விடலாகாது. ஏனெனில் எமது வாழ்வின் பயணத்தைப் பின்னோக்க அது ஒரு காரணமாகப்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியாக அமைந்துவிடும். எனவே எப்பொழுதும் சாதனை படைக்க, வெற்றிபடைக்க முன்னோக்கிய எண்ணங்களை மனிதன் கொண்டிருக்க வேண்டும்; முன்னோக்கிச் செல்லல் வேண்டும் என்பதைக் கவிஞர் எமக்கு '**முன்னோக்கு**' என்ற கவிதை மூலம் புரிய வைக்கின்றார்.

"வெற்றி விளைந்தாலும். தோல்வி விளைந்தாலும்
என்னதான் எய்திடினும் இம்மியும் பின்னோக்காது
முன்னோக்கும் என்றும் முனைந்து."

4. **"முன்னோக்கு" என்ற கவிதை மூலம் கவிஞர் முருகையன் எமக்குத் தரும் படிப்பனை, வாழ்க்கைத் தத்துவம் யாது?**
**(தலைப்புக்கும் கவிதைக்கும் உள்ள பொருத்தப்பாடு என்ன?)**

◈ சென்றொழிந்த காலத்தையே சதா எண்ணிக் கொண்டிராது, நிகழப்போகும் காலத்தை அதாவது இனி வரும் காலத்தை எண்ணி எதிர் நீச்சல் போடு என அறைகூவுகிறார்.

'சென்றொழிந்த காலம் திரும்பிவரமாட்டாது'

◈ மலையில் உற்பத்தியாகும் மழை நீர் பல்வேறு வழிகளிலும் அலைக்கழிக்கப்பட்டு இறுதியிலே கீழ்நோக்கிச் சென்று கடலில் சங்கமமாகி விடுகிறது. தான் வந்த வழிகளை அந் நீரால் எண்ண முடிவதில்லை; வந்த வழியே உயர்ந்து திரும்பவும் செல்ல முடிவதில்லை.

'மலையுச்சிச் சொந்தஊர் செல்லத் துளியும் இடமில்லை'

இவ்வாறே மனிதனின் வாழ்வியல் அம்சத்தில் பல்வேறு இன்பதுன்பங்களில் அவன் மூழ்கிறான். வெற்றிகிடைத்தபோது துள்ளிப் பாய்கிறான். தன்னை விட யாருளர் என்கிறான். மகிழ்கிறான், தோல்வி கிடைத்ததும் துவண்டு விடுகிறான். இத்தோல்வி கண்டு தன்வாழ்வின் செயற்பாடுகளை குறைத்து விடுகிறான். சதா கவலையோடு, நடைப்பிணமாக மாறிவிடுகிறான். இது அவனது வாழ்வின் பின்னடைவுக்கும், தோல்விக்கும் காரணமாக அமைந்துவிடுகிறது. நாம் இன்பத்தில் துள்ளாமலும் துன்பத்தில் துவளாமலும் இருக்க வேண்டும். இவ்வாறு இருப்பது என்பது எல்லோராலும் முடியாத காரியம்தான். ஆனால் அதனைப் பின்பற்ற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான் எப்பொழுதும் முன்னோக்கிய எண்ணம், முயற்சி, செயல் கொண்டவனாக மனிதன் தனது வாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டும். மனிதனின் காலவோட்டத்தில் வெற்றியும் தோல்வியும் சுழலும் சக்கரமாக மாறிமாறி வரும். எனவே தோல்விகண்டபோது மனச்சஞ்சலம் அடைந்து உனது வாழ்வைப் பின்னோக்கி அமைத்துவிடாதே! சோர்ந்து அமைதியாகி விடாதே. உனது பயணம் எப்பொழுதும் முன்னோக்கியதாக அமைய வேண்டும் என விழுமியம் கூறுகிறார்.

மலையில் உற்பத்தியாகிய மழை நீர் கடலுடன் சங்கமிக்கின்றது. நீரோடு நீராகிவிடுகின்றது. அதனால் திரும்பவும் தான் பிறந்த ஊரான அம்மலைக்குச் செல்ல முடிவதில்லை. வீழ்ந்தது வீழ்ந்தது தான்.

'கீழ் இறங்கிப் போன நீர் கீழேதான்...'

இவ்வாறே மனிதனின் காலவோட்டச் சக்கரத்தில் தோல்வி கண்டு துவண்டுவிடின் வீழ்ச்சியே தொடர்ந்துவிடும். எனவே வெற்றி, தோல்விகளைக் கண்டு முறையே மகிழ்ச்சியும், துக்கமும் அடையும் நீ எக்காரணத்தாலும் பின்னோக்கிச் செல்லாது உனது பயணம் முன்னோக்கியதாக முயன்று வெற்றி கொள்ளப் பயணத்தை ஆக்கிக் கொள். அதற்கேற்ப உன்மன எண்ணத்தைச், செயலை ஆக்கிக் கொள். முயன்று முன்நோக்கிச் செல்; வெற்றிபெறுவாய் எந்த விதத்திலும் தோல்விகண்டு, துஞ்சாது எதிர்நீச்சல்போட்டு முன்னேறு, **"முயற்சி திருவினையாக்கும்"** எனக் கூறுகிறார் **"முன்னோக்கு"** என்ற கவிதை மூலமாகக் கவிஞர் முருகையன் எமக்கு இவ்வாறு படிப்பனையூட்டுகின்றார். மனித வாழ்வின் பயணத்தை குன்றில் பெய்த பெருமழையுடன் பொருத்தப்பாடு பொருந்த ஒப்பித்து நல்வழி காட்டுகிறார்.

"தாவி வளைந்து சுழன்று நடந்து சென்று
நீலக் கடலையடைந்து நீரோடு நீராகும்"

எனஆற்றின் பயணத்தைக் காட்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நிழலின் நினைவு

1. **"நிழலின் நினைவு" என்ற கவிதை மூலம் கவிஞர் சிவசேகரம் கூறமுனையும் கருத்து யாது?**

மனிதவாழ்வின் தொடரும் அவலங்கள், அதனால் ஏற்படும் வீழ்ச்சிகளையும், இன்னல்களையும் '**நிழலின் நினைவு**' என்ற கவிதை மூலமாகக் காட்டவிழைகிறார். வேப்பமரத்தில் நிகழ்கின்ற செயல்களை ஒவ்வொன்றாகச் சுவைபடக் கூறிச் செல்லுகின்ற கவிஞர் ஒருநாள்; வேம்பின் வீழ்ச்சியை எடுத்துக்காட்டுகின்றார்.

தான் தொடர்ந்து வாழலாம்; எமது வாழ்வு சிறப்பானது, அழிவில்லாதது நிரந்தரம் என நினைத்திருந்த வேம்பானது பெரும் புயலால் சரிந்துவிட்டது; அழிவு இல்லை என்றிருந்த வேம்புக்கு இக்கதி.

'புயல் வரவு ...'
'மரஞ் சரிவு......'

மனிதராகிய நாம் எமது வாழ்வு, சிறப்பானது, மனிதன் தனது சிறப்பான வாழ்க்கைக்காக பல்வேறு செயல்களில் ஈடுபடுகிறான். ஆனால் வாழ்வின் ஓடத்தில் அதாவது வாழ்க்கைப் பயணத்தில் எதிர்பாராது ஏற்படும் இன்னல்களால் எமது வாழ்வு அழியலாம்; நிறைவேறாது போகலாம். ஆனால் துவண்டுவிடாதே. ஏனெனில் பெரும் புயலினால் வேம்பு சரிந்தது, வேம்பின் இனிய நிழலை மறைத்த மண் சரிவால் ஏற்பட்ட மண்மேடு காணப்படுகிறது; அதனூடே காலுயரம் மட்டும் வளர்ந்து நிற்கின்ற சிறுகன்று கள் வளர்ந்து தாய்மரம் போல் தன் வாழ்வினை அமைக்கும், நிழலைப் பரப்பும் இதுவே வாழ்வின் மகத்துவம்.

எனவே மனிதவாழ்வினால் நாம் எதிர்பார்த்த வாழ்க்கைப் பயணம் வாழ்வின் நோக்கம் முயற்சி அழிந்துவிடலாம். கிடைக்காதும் போகலாம். நாம் எதிர்பார்த்த எண்ணம் நிறைவேறாதது போன்று தோன்றலாம். நிறைவேறாதும் போகலாம். மனிதனே துவண்டுவிடாதே தனக்குக் கிடைத்த இன்பத்தை அழிவில்லாதது என எண்ணிவிடாதே உனக்குக் கிடைக்காததை உன்சந்ததி நிறைவேற்றுவர். உன் எண்ணத்தை நிறைவேற்றுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிழல் மறந்த மண் முழுதும்
நாளை நிழல் இறைக்கும்"

தனக்கு அழிவில்லை என எண்ணிய பெருவேம்பு இன்று சாய்ந்து வீழ்ந்துவிட்டது. அதன் மூலம் பெற்ற இன்ப உணர்வுகள், செயல்கள் யாவும் சாய்ந்து ஒளிந்துவிடவில்லை. காலுயரம் உயர்ந்திருக்கும் சிறுகன்று தாய்வேம்பின் செயலை, இன்பத்தைப் பெறும். அதன் செயலை மீண்டும் இச் சிறு கன்று நிறைவேற்றும்.

எமது மனித வாழ்வில் எம்மால் அடைய முடியாதவை யாவும் எம்பின்னோரால் அடையப்படும். எமது வாழ்வில் போராட்டங்கள் ஏற்படலாம். அவை நிரந்தரமானவை அல்ல. அதனால் எமக்கு இன்னல் ஏற்படலாம், அவையாவும் எமது பின்னோரால் இளம் சந்ததியினரால் ஈடுசெய்யப்படும். நாம் எண்ணிய செயல்கள் யாவும் எமது இளம் சந்ததியினால் ஈடுசெய்யப்படும்; எடுத்துச் செல்லப்படும். எம் வாழ்வில் ஒளி பிறக்கும். எமக்குக் கிடைக்காதவை பிள்ளைகளுக்குக் கிடைக்கும் எமது எண்ணங்களை எமது பின்னோர் நிறைவேற்றுவர் என **"நிழலின் நினைவு"** என்ற கவிதை மூலம் கவிஞர் சிவசேகரம் கூறிவைக்கின்றார்.

**2. தான் எடுத்துக்கொண்ட விடயத்தை வெளிப்படுத்தக் கவிஞர் கையாண்ட உத்தி பற்றித் தெளிவுபடுத்துக.**

மனித வாழ்விலே தான் எண்ணிய நோக்கங்கள் அனைத்தும் பல்வேறு காரணங்களால் தவிடுபொடியாகலாம், நிறைவேறாது போகலாம். அழிவில்லாது வாழ்வோம் என்றிருந்த வேம்பு சாய்ந்துவிட்டது. வேம்பின் நிழல் பரப்பிய இடமெல்லாம் மண்மேடாகி விட்டது. ஆனால் அம்மண் மேட்டில் காலுயரம் வளர்ந்திருக்கும் சிறுகன்று மீண்டும் மணல் மேட்டின் இடத்தில் மீண்டும் நிழல் பரப்பும், நிழல் கொடுக்கும்.

இதேபோன்று நாம் எண்ணியது கிடைக்காது போகலாம், நாம் எவ்வாறெல்லாம் வாழவேண்டும் என எண்ணினோம்; ஆனால் அது நிறைவேறாது போகலாம். இதற்காக இவ் வாழ்வின் வீழ்ச்சி நிச்சயமானதாய் நிரந்தரமானது; எமது வாழ்வில் கிடைக்கவில்லையே என எண்ணாதே! எம் இளம் சந்ததியினர் எமது கனவை நனவாக்குவர்; இன்பவாழ்வை மீண்டும் பெறுவர்; விளக்கேற்றுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிழல் மறந்த மண் முழுதும்
நாளை நிழல் இறைக்கும்"

இவர்கள் இருள்படிந்த வாழ்வில் ஒளி ஏற்றுவர்; அவர்களுக்கு ஒளி கிடைக்கும். வேம்பின் இளங்கன்று எவ்வாறு மீண்டும் தளைத்து நிழல் பரப்பும் எனக் கூறும் கவிஞர் எமது வாழ்விலும் எமது இளம் சந்ததியினர் ஒளியேற்றுவர்; துவண்டுவிடாதே எனப் பறை சாற்றுகிறார்.

பெருவேம்பின் செயலைப், பயனை, நோக்கத்தை, இன்பத்தை வேம்பின் இளங்கன்று நிறைவேற்றுகிறதல்லவா? அதேபோல் எம்வாழ்வு, எம் இருண்ட வாழ்வில் விடிவு பிறக்கும், ஒளி பிறக்கும் என்பதை விளக்க வேம்பின் செயற்பாட்டின் மூலமாக விளங்க வைக்கின்றார்.

மனிதனுடைய வாழ்க்கையின் ஓட்டத்தில் குளிர்காயும் சில மனிதர்களையும் கவிஞர் சாடத் தயங்கவில்லை. வேப்ப மரத்தின் செழிப்பின் ஊடே தமது வாழ்வினைத்தேடும் நுண்மலர்களை, இளஞ்காற்றை எடுத்துக்காட்டும் கவிஞர் தொடர்ந்து மனிதனின் இனிமையான வாழ்வின் இன்பங்களைப் புதைகுழியில் புதைத்துத் தான் இன்புறும் கல்நெஞ்ச மனிதரும் எம்மிடையே வாழ்கின்றனர் என்பதைக் காட்ட

"கனிந்த பழங்களின்
மனிதர் உணரா
இனிமை இரகசியத்தைப்
பரிமாறுங் காக்கைகள்..."

எனச் சுவாரசமாகச் சாடுகின்றார். பிறரின் வாழ்வில் குளிர்காயும் மனிதர்களைக் காட்டப் பல்வேறு வகையில் உத்திகளைக் கவிஞர் கையாளுகின்றார்.

ஒருவரின் உயர்வை வீழ்த்தமுயலும் மனித வாழ்வின் இம்சையை

"அணிலைத் துரத்தி
மரமேறி விழும்பூனை....."

எனக் காட்டி இதனால் மனிதனது வாழ்வில் இன்னல்கள் ஏற்படுகின்றன. இவை அவனது வாழ்வைச் சின்னாபின்னப்படுத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில், வாழ்க்கையில், இன்பத்தில், தனது உயிரில் இழப்பை ஏற்படுத்துகிறது என்பதை

"உதிரும் பொன் இலைகள்"

எனக் காட்டுகிறார். மரம்செழித்து வளர ஊன்றுகோலாக இருந்து பொன்நிற இலைகள் யாவும் உதிர்கிறது. இதன் மூலம் மனித வாழ்க்கையில் பொன்னான மதிப்புள்ள மனிதர்களை, மனித இனத்தை இழக்கின்றோம்; எனக் காட்டி மனித வாழ்வின் இன்னல்களால் மனிதப் பெருஞ் செல்வம், மனிதமேதைகள் அடியோடு அழிந்து, உதிர்ந்து, அழிந்து வீணே பயனற்று வீழ்ச்சி கண்டு விட்டனர். என்பதை மிக்க வேதனையுடன் கவிஞர் காட்டுகிறார்.

மனிதனின் இத்துன்பத்திலும், இவ் அவலத்திலும் இன்பங் காண முனையும் மனிதர்களும் வாழ்கின்றார்கள் காட்டிக் கொடுத்தல் பழிவாங்குதல், வஞ்சம் தீர்த்தல் என்பவற்றைச் செய்கின்றனர். வாழ்வின் அடிமட்டத்தில் தோல்வியின், இழப்புக்களின் இறுதி விளிம்பில் நிற்கும் மனிதனையும் வேதனைப்படுத்தும், அதிலும் இன்பம் காண விழையும் மனிதர் களைக் கூறவந்த கவிஞர் வேம்பின்,

"பட்டை வெடிப்பில்
பிசின் கசிவு
முகரும் எறும்புகளின் ஊர்வலம்" எனக் காட்டுவார்.

இவ்வாறு பல்வேறு உத்திகள் மூலமாக மனிதவாழ்வின் அவலங்களும் அவை எவ்வாறு ஏற்படுகின்றது என்பதையும் கவிஞர் சிவசேகரம் காட்டுகிறார். ஆனால் இதற்கெல்லாம் விடிவு உண்டு வேம்பின் சிறுகன்று தன் தாய் வேம்பின் பயனைக் காட்டி, வளர வில்லையா? தாய்மரம் கொடுத்த நிழலை, நிழலை மறைத்து நிற்கும் மண்மேட்டில் மீண்டும் நிழல் கொடுக்கவில்லையா? நிழல் கொடுத்ததே.

"இன்று
காலுயரம் நிற்கின்ற
வேம்பின் கன்றுகள்
நிழல் மறத்த மண்முழுதும்
நாளை நிழல் இறைக்கும்.."

எனக் கூறிக் கவிஞர் நாளை எம் சந்ததியினர் நிழல் பரப்புவர் நினைத்ததை நிறைவேற்றுவர் எனக் கூறி நிம்மதியடை கின்றார். இருண்டு கிடக்கும் இவ் இடம் யாவும் நாளை ஒளியுடன் திகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குக் கிடைக்காத எம்மால் செய்ய எண்ணிய கருமங் களை எமது இளம் சந்ததியினர் நிறைவேற்றுவர் என்ற ஆதங்கத்தை எமது மனத்தில் விதைப்பார். எமக்குக் கிடைக்காதது அவர்களுக்குக் கிடைக்கும், நாம் எண்ணியதை அவர்கள் நிறைவேற்றிவைப்பர் என்பதை ஆணித்தனமாகக் கூறிவைக்க

"என்மேல் இல்லாவிடின்
என் பிள்ளைகள் மேல்
நிச்சயமாய்
என்பேரர்கள் மேல்"

என உறுதியுடன் கூறிவைத்து எமக்குக் கிடைக்காத அனைத்தும் அவர்களுக்குக் கிடைக்கும் என எம்மை ஆறுதலடைய வைக்கிறார். பல்வேறு உத்திகள் மூலமாக வாழ்வின் நினைவுகள் அணியப்படுவதை நிச்சயப்படுத்துகிறார்.

3. **கவிஞர் சிவசேகரம் வர்ணனையாளன் என்பதை "நிழலின் நினைவு" என்ற கவிதை மூலமாக ஆதாரப்படுத்துக.**
**(வேம்பு பற்றிய வர்ணனையில் காணப்படும் சிறப்பு அம்சங்கள் எவையெனத் தெளிவுபடுத்துக).**

வேப்ப மரத்தைக் கூறவந்த கவிஞர் முதலில் வேம்பு நிற்கும் இருப்பிடம் காட்டுகிறார்

"விஸ்வரூபமாய் வழிமறிக்கும்
முற்றத்து வேம்பு..."

வெளிப்புறத்தின் படலையைத் திறந்தவுடன் செழித்துப் பரந்து, பூதாகாரமாக வளர்ந்திருக்கிறது முற்றத்தில் நிற்கும் வேம்பு, இது படலையைத் திறந்து தாண்ட முதலில் தெரிவது என அதன் செழிப்பையும், நிற்கும் இடத்தையும் சொல்லுகிறார்.

சிவந்த பொன்நிறமான இளந் துளிர்கள் அத்துளிர்கள் முற்றியவுடன் பச்சைநிறமான இலைகளைத் தாங்குகின்ற கிளைகள், அக் கிளைகளினூடே

"மறைவில் விரிந்து உதிரும் நுண்மலர்"

என வேம்பின் செழிப்பையும், பூத்துக் குலுங்குவதையும் இலாவகமாக வர்ணிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் தளிர்கள் - பொன்னிறம்
இலை முற்றப் - பசுந்தளிர்கள்
கிளைகள் — இளவேனில் - பசுமை, வளம்
உதிரும் - நுண்மலர்

என அடுக்கடுக்காக வேம்பின் செழிப்பையும், இயற்கையையும் வர்ணிக்கிறார்.

தளிராக இருக்கும்போது பொன்நிறமாக இருக்கின்றது. இவ் இளந்தளிர் முற்றப் பசுமையாக (பச்சையாக) மாறுகிறது. செழிப்பான மரத்தினூடே நுண்மையான மிகச்சிறிய வெள்ளைப் பூக்கள் பொலிவுடன் மலர்வதை "நுண்மலர்" எனக் கூறிவிடுகிறார். இவ்வளவு தொகையான இலைகளையும் தாங்கி நிற்கும் கிளைகள் அதன் செழிப்பு குளிர்மை, - இளவேனில் என்பார். இக்கிளைகள் பலமுடையதாகவும் செழித்தும் குளிர்மையுடன் காணப்படுகிறது என்பதை இளவேனில் என்ற வார்த்தையூடாகப் புலப்படுத்தி விடுகிறார்.

இவ்வாறு கவிதையூடாக வேப்பமரத்தின் தோற்றத்தை வர்ணித்த கவிஞர் அவ்வேப்பமரத்தில் நிகழும் இயற்கை நிகழ்வுகளை அடுத்தடுத்து வர்ணிக்கின்றார். வேப்ப மரத்தினூடாகக் கிடைக்கும் குளிர்மை, நிழல், அதனூடே கிடைக்கும் இளம் காற்று என்பதை மிக அழகாக

"நண்பகலில்
வெய்யிலை அஞ்சி
மரத்தடியில் ஒதுங்கும்
பெருநிழல் மேல்குளிர்தேடி ஊரும்
இளங்காற்று..."

எனப் பாடுகிறார். நண்பகலிலே வெயிலுக்குப் பயந்து, வெயிலின் கொடுமையை, வெப்பத்தைத் தாங்க முடியாது மரத்தடியில் நிழல் ஒதுங்குகிறது எனத் தனது கருத்தை முன்வைக்கிறார். இவ்வாறு ஒதுங்கி நிற்கின்ற நிழலின் ஊடாக குளிர்மை பெறுவதற்காக இளங் காற்று வீசுகிறது என்றார்.

நிழலின் ஊடாக வேப்பமரத்தடியில் குளிர்மையான இளங்காற்று வீசுகிறது என்பதை மிக அழகாக கவிஞர் வர்ணிப்பதை இங்கு காணலாம்.

வேனிற்பருவத்தில் செழித்து முதிர்ந்து, கனிந்துள்ள பழங்களைக் காக்கைகள் ஒன்றையொன்று பரிமாறி, அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைகள் தம் குஞ்சுகளுக்கும் கொடுத்து உண்கின்றன. ஆனால் இப்பழத்தின் இனிமைச் சுவையை மனிதன் உணர்வதில்லை. ஏனெனில் வேப்பம் பழத்தின் சுவையை விரும்பி மனிதர் உண்ப தில்லை என்பதைக் காட்டி, காக்கைகள் விருப்புடன் உண்ணுகின்ற பழம் வேப்பம் பழம் என்பதையும் அதன் நிகழ்வைக் கவிஞர் காட்டுகிறார்.

"வேனிலுடன் முதிர்ந்து
கனிந்த பழங்களின்
மனிதர் உணரா
இனிமை இரகசியத்தைப்
பரிமாறும் காக்கைகள்...!"

எனக் காட்டுகிறார். இதனூடாக இப்பழத்தின் உள்ளேயும் சுவையுண்டு. அச்சுவையின் இரகசியத்தை மனிதன் உணரவில்லை என்பதை வெளிப்படுத்துவார்.

வேப்பமரத்தின் செழிப்பில் வாழவும்; அதன் பழத்தை உண்ணவும் செல்கின்ற அணிலைத் துரத்துகிறது பூனை. அப்பூனை மேலே பாய்ந்து செல்ல முடியாது கீழே வீழ்கிறது எனக் காட்டுவதன் ஊடாக இயற்கை நிகழ்வுகளை தத்துரூபமாக முன்வைக்கும் கவிஞர் தொடர்ந்து;

"உதிரும் பொன் இலைகள்
பட்டைவெடிப்பில்
பிசின் கசிவு....."

எனக் கூறுவதால்,

அவ்வேப்பமரத்தில் இருந்து மஞ்சள் நிறமாக இலைகள் உதிர்கின்றன. அவ்விலைகளைப் பொன் இலைகள் என உருவகித்த கவிஞர் அம்மரத்தின் பட்டைகளின் ஊடாகக் கசிந்திருக்கின்ற பிசின் பற்றியும் கூறிவிடுகின்றார்.

தனது வர்ணனை ஆற்றலால் ஒரு வேப்பமரத்தை எம்முன் நிறுத்தும் கவிஞர் அவ்வேப்பமரத்தின் தோற்றம், செழிப்பு, இயற்கை நிகழ்வுகள் என்பவற்றை வர்ணனையூடாகத் தந்து மகிழ்கிறார்.

வேப்பம் பட்டையில் காணப்படும் பிசினை எறும்புகள் ஊர்ந்து சென்று முகருகின்றன. அவ் எறும்புகளின் போக்கானது மேலும் கீழுமாய் சென்று திரும்புகின்றன. அதிக எண்ணிக்கையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறும்புகள் ஒன்றன் பின் ஒன்றாக ஊர்வலம் செல்வதுபோல் செல்கின்றன. என இயற்கை நிகழ்வுகளை தத்துருபமாக வர்ணனையுடன் கூறும் ஆற்றல், தகைமை கவிஞருக்கு ஒருங்கே உண்டு என்பதை அவரது கவிதை வரிகள் ஒவ்வொன்றும் பறைசாற்றி நிற்கின்றன.

"…. பிசின் கசிவு
முகரும் எறும்புகளின் ஊர்வலம்
மேலும் கீழுமாய்…"

என்பார். இவ்வாறான வேப்பமரத்தின் நிழலில் மனிதன் ஆறுகின்ற நிலை மனத்திற்கு இன்பம் பயப்பதல்லவா? இவ்வாறு கிடைப்பது கிடைத்தற்கு அரிதானதல்லவா? என வினா எழுப்புகிறார். இவ்வாறாக மனத்திற்கும், உடலுக்கும் மகிழ்வையும், இதத்தையும் ஊட்டுகின்ற இவ்வேப்பமரம், அதன் நிழல் மனிதனுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் அல்லவா? எனச் சாற்றுகிறார்.

"மரத்தடியில்
நீட்டி நிமிர்ந்து
நிழல்காயும் நேரத்தும் மனத்திற்கு இனிதன்றோ"

எனப்பாடும் கவிஞர் இறுதியில் இவ்வாறான பாக்கியத்தைப் பெறுவது பெரும் கொடை அல்லவா? இவ்வாறான வாய்ப்புக்கிடைப்பது அரிதல்லவா! என வாசகர்களிடமே கவிஞர் கேள்வி எழுப்பிவிடுகிறார்.

எனவே **"நிழலின் நினைவு"** என்ற கவிதையூடாகக் கவிஞர் சிவசேகரம் தனக்கே உரித்தான வர்ணனைகளைக் கொட்டி விடுகிறார். இதனூடாக அவர் இயற்கையை வர்ணிப்பதில் வல்லவர் என்பதை யதார்த்தமான சான்றுகள் பலவற்றை எடுத்துக் காட்டுவதன் மூலம் சான்றுபடுத்துகிறார்.

## 3. கடற்புறம்

**1. கடற்புறம் என்ற கவிதையைக் கவிஞர் எழுத முன்வந்ததற்கான நோக்கம் எதுவெனக் கூறலாம்?**

மீனவரின் வாழ்க்கைப் போராட்டங்களும், அதனூடே அவன் எதற்காக இவ்வாறெல்லாம் போராடுகின்றான். அதன் முடிவும் பயனும் தான் என்ன? எதுவுமே அற்ற வெறுமை நிலையே மீனவனின் வாழ்வு என்பனைக் காட்டக் கவிஞர் முன்வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனவனின் வாழ்வில் அவனது குடும்பத்தில், வாழ்க்கைப் போராட்டம், தொழில் பிரயாசம், எதிர்கொள்ளும் ஆபத்துக்கள், தனது தொழிலை முன்னெடுத்துச் செல்லல், கடலுக்குச் சென்றவன் எந்தவிதமான துன்பத்திற்கும் ஆளாகாமல் வீடுவந்து சேரவேண்டும் என இறைவனை வேண்டுகின்ற உள்ளங்கள், மீனவனின் எதிர்நீச்சல் இவையாவும் எதனைத் தருகின்றன எனக் கவிஞர் கேட்கிறார்.

"..... சிறுகுடிசை
இரண்டு பிடிசோறு
தோணி உடையான்
தரும் பிச்சை...."
"பெருமூச்சு...."

மீனவனது வாழ்வில் இருள் சூழ்ந்துள்ளது இயல்பாகவே வானத்தில் விடிவெள்ளி தோன்றி, பொழுது விடிவதைக் காட்டுகிறது.

ஆனால் மீனவனின் வாழ்வில் விடிவு உண்டா? இல்லை. வானத்தில் மட்டும்தான் இருளுக்கு விடிவு கொடுத்து வெளிச்சம் வர விடிவெள்ளி கிழக்கே பிரகாசிக்கின்றது.

ஆனால் மீனவனின் வாழ்வில் விடிவு உண்டா? வாழ்நாள் பூராகவும் வாழ்க்கைப் போராட்டம் இருள் சூழ்ந்த வாழ்வியல் போராட்டம்; இது தொடர்கதையாக அமைகிறது.

"தோணி உடையான்
தரும் பிச்சை ...." எதுவெனில்

"இந்தச் சிறுகுடிசை
இரண்டுபிடி சோறு"

எனக் காட்டி கவிஞர் மீனவனின் வாழ்க்கைப் போராட்டத்தையும் அதனால் அவனுக்குக் கிடைக்கும் வெறுமையுடன் கூடிய வாழ்க்கையும், எதுவுமே அற்ற இருள் சூழ்ந்த இன்னல் நிறைந்த வாழ்வே மீதமாக, இருப்பதையும் கவிஞர் காட்டுகிறார்.

எனவே "கடற்புறம்" என்ற கவிதையூடாகக் கவிஞர் ஜெயபாலன், மீனவரின் வாழ்க்கைப் போராட்டத்தையும், வாழ்வின் வெறுமையையும், இருள் சூழ்ந்த வாழ்வினைத் தொடரும் மீனவனுக்கு விடிவு இல்லை. வாழ்வின் உயர்வு இல்லை. வானத்தில் தோன்றும் விடிவெள்ளி கூட இருளை அகற்றி ஒளியேற்றுகிறது ஆனால் மீனவனின் வாழ்வு இருள் சூழ்ந்தது என இயற்கை நிகழ்வினை ஆதாரம் காட்டி மீனவனின் இன்னல் நிறைந்த வாழ்வினையும், அவனின் வெறுமையையும், எதுவுமே அற்று வெறுங்கையனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பதையும் கவிஞர் காட்டுவதன் மூலம் மீனவனுக்கு விடிவு இல்லை என ஆணித்தனமாகக் கூறுகிறார்.

ஆசிரியர் தனது எண்ணத்தை இக் கவிதையூடாக மீனவன் எதுவுமற்று வெறுமையுடன் அதாவது வெறுங்கையுடன் உள்ளான் என்பதைத் தெளிவுறுத்துகிறார்.

2. **"கடற்புறம்" என்ற கவிதை மூலம் தனது கருத்தை வெளிப்படுத்தக் கவிஞர் கையாண்ட உத்திகளை வரிசைப்படுத்துக.**

கவிஞர் தான் கூறவந்த மீனவக் குடும்பத்தின் இருள் சூழ்ந்த வாழ்வியலையும், அவர்களது வாழ்வியற் போராட்டங்களையும் பல்வேறு கண்ணோட்டத்தின் மூலம் தெளிய வைக்கின்றார்.

தான் கூறவந்த மீனவர் குடும்பத்தின் இருப்பிடத்தை மிகவும் வர்ணனையோடு அப்படியே ஒப்புவிக்கின்றார்.

"காலமகள் மணலெடுத்து
கோலமிட்ட மணற்புறத்தில்
ஏழை மகள் ஒருத்தி...."

எனக் காலத்தின் கோலமாக எங்கும் மணற்பாங்காக அம்மீனவர் வாழ்கின்ற பகுதி காணப்படுகிறது. பூமா தேவியானவள் மணற்பாங்காக எங்கும் மணலால் இயற்கையாகக் கோலமிடப்பட்டுப் பரந்து காணப்படுகிறது எனக் காட்டும் கவிஞர் மீனவக் குடும்பத்தில் வாழ்வியற் சூழலை படம்பிடித்துக் காட்ட முனைவார்.

ஏக்கத்துடன் தலைவனின் வரவை எதிர்பார்த்து நிற்கும் மீனவப் பெண்மணியை அவளது சிந்தனை, எங்கோ சென்று விட்டது. தலைவன் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றவன் திரும்பி வருவானா? என்பது அவளது உள்ளத்தில் ஏக்கத்தை வெளிப்படுத்துகிறது. கடற்பரப்பின் தூர எல்லையைத் தன் விழியால் நோக்கி ஏக்கத்துடன் பார்க்கும் மீனவப் பெண்ணை; அவளின் எண்ணத்தை மிகவும் அற்புதமாக வாசகர்களுக்குக் காட்டி விடுகிறார்.

"...... முதுகடலின் பின்னாடி
விண்ணோ தொடரும்
விண்ணுக்கும் அப்பாலே
விழி தொடர நிற்கின்றாள்..."

தான் கூறவந்த மீனவர்களின் ஏக்கம் நிறைந்த எதுவுமற்ற வெறுமை பொதிந்த வாழ்வை அவர்களின் அகப்புறச் சூழலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுவதன் மூலம் அப்பட்டமாகக் காட்டும் போக்கினைக் கவிஞர் சிறந்த உத்தியாகக் கையாண்டுள்ளார்.

"…. தாழைமர வேலி
தள்ளி ஒருகுடிசை
சிறுகுடிசைக்குள்ளே
தூங்கும் சிறுகுழந்தை…."

எனக் கூறியவர்

"ஆடுகின்ற தோணியிலே"

- - - - - - - - - - - - - -

"காற்று பெருங்காற்று
காற்றோடு கும்மிருட்டு
கோசமிட்ட கடல் பெருக்கு"

இவ்வாறு கடற்புறத்தைக் காட்டுவதன் மூலமாக மீனவர்களின் இருப்பிடத்தையும், இப்பயங்கரமான போராட்டத்தின் மத்தியில் வாழ்க்கையைக் கொண்டோடும் இக் குடும்பம்; ஆனால் எதுவுமற்ற நிலை. இதனை புறச்சூழலைக் காட்டுவதன் மூலம் வாசகர்களைச் சிந்திக்க வைக்கும் உத்தியை கவிஞர் கையாண்டுள்ளார்.

கல்லுவைத்து வணங்கப்படுகின்ற கோயில்கள் எல்லாவற்றையும் கைகூப்பி இரவு முழுவதும் எண்ணி, கடலுக்குச் சென்ற கணவனுக்கு எதுவும் நிகழாது அவரைக் காப்பாற்றும்படி இறைஞ்சுகின்றாள் வீட்டின் தலைவி. இரவு தூக்கமின்றி ஆழ்கடலுக்குச் சென்ற தலைவன் திரும்பி எத்துன்பமும் நிகழாது வரவேண்டும் என விழித்திருந்து பதட்டத்துடனும், ஏக்கத்துடனும் வாழ்கின்ற அவர்களது வாழ்க்கையைக் காட்டுகின்ற ஆசிரியர் மிகவும் சிறிய சிறிய வார்த்தைகளில் விளங்கக் கூடிய விதத்தில் தனது கவிதையை ஆக்கிக் செல்கிறார். வாசகர்களின் மனத்தைத் தொடும் வகையில் அடுக்கடுக்காக அவலங்களைக் கூறுகின்ற முறைமை வியக்கத் தக்கது.

இவ்வாறான அவலங்களுக்குள் இடர்படும் மீனவன் இறுதியில் கண்டதுதான் என்ன? எதுவும் அற்ற வெறுமை நிலைதான்.

"… இந்தச் சிறுகுடிசை
இரண்டுபிடி சோறு"

இவ்வளவுதான் அவனுக்குக் கிடைப்பது அதுவும் தோணி வைத்திருந்து தொழில் செய்பவனது நிலை. அத் தோணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாவிடின் எதுவுமே அற்ற அந்தோ நிலை எனக் கவிஞர் காட்டுவார். உழைப்பு உணவுக்குப் போதுமாயில்லை வாழ்வில் பொருளாதாரப் போராட்டம் தொழிலில் கடலில் போராட்டம்.

தான் கூறவந்த விடயத்தை வாசகர்களின் மனத்தில் இருத்த விரும்பிய கவிஞர்; மீனவ இருப்பிடம், சூழல் என்பவற்றை முதலில் காட்டியதோடு நில்லாது தலைவியின் ஏக்கம் நிறைந்த வாழ்வு, இரவின் பயங்கரம், வாழ்க்கைச் சூழல், கணவனின் வருகைக்காக நித்திரையின்றி இறைவனை இறைஞ்சுகின்ற வீட்டுத் தலைவியின் அவல நிலை, இரைந்து கோசமிடும் கடல்பெருக்கு, கடலைப் பார்த்தபடி ஏங்கிநிற்கும் மனைவி, குடும்பம் இவற்றினை மிக இலாவகமாக சொற்சிறப்புடன் செட்டாகக் காட்டியுள்ளார்.

"தோணி உடையான்
தரும்பிச்சை...."

பெரிதாக எதுவுதமில்லை. அது எதுவெனில்

"இந்தச் சிறுகுடிசை
இரண்டு பிடிசோறு..."

எனக் நகைப்புறக் கூறுகிறார். கூறுவார். எனவே தான் கூறவந்த விடயத்தை வாசகர்கள் உணர்ந்து அவ் மீனவரின் அவலத்தை மனத்தின் கண்ணே அனுபவிக்க இவ்வாறு பல்வேறு உத்தி வழிகளைக் கையாண்டு கவிஞன் ஜெயபாலன் கவிதை வடித்தார் எனக் கூறலாம்.

3. **"தானாய் விடிவெள்ளி
தோன்றுகின்ற சங்கதிகள்
வானத்தில் மட்டும்தான்
வாழ்வில் இருள் தொடரும்"**

**இவ்வரிகள் ஊடாகக் கவிஞர் ஜெயபாலன் கடற்புறம் என்ற கவிதையில் கூற முற்படுகின்ற கருத்து யாது?**

வானத்திலே அதிகாலையில் விடிவெள்ளி தோன்றுகிறது. இதன் அறிகுறி பொழுது விடியப் பேபாகிறது. இருள் அகன்று எங்கும் ஒளி பிறந்து பிரகாசிக்கப் போகிறது என்பதைக் காட்டுவதற்கு ஆதாரமாக இருப்பது விடிவெள்ளியாகும்.

இங்கே விடிவெள்ளி அதிகாலையில் தோன்றி இருள் கலைந்து உலகில் உள்ளோரெல்லாம் உவந்து உளமார இன்புறம் சூரியன் பிரகாசிக்கிறது. இந்நிகழ்வானது வானத்தில் மட்டும்தான் நிகழ்கின்றது. ஆனால் மீனவனின் வாழ்க்கையில் அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் போராட்டத்தில், வாழ்க்கை நீரோட்டத்தில் விடிவு இல்லை இருள்சூழ்ந்த மந்தகரமான முன்னேற்றமின்றிய கவலைபடிந்த, கறை பூசப்பட்ட எதுவுமற்ற நிர்க்கதியான நிலைமையே காணப்படுகிறது என்பதைக் காட்டக் கவிஞர் இக் கவிதை மூலம் முனைகிறார்.

"தானாய் விடிவெள்ளி
தோன்றுகின்ற சங்கதிகள்
வானத்தில் மட்டும்தான்
வாழ்வில் இருள் தொடரும்."

எனவே உலகமக்களை உய்விக்க, உலகத்தில் உள்ள இருள் அகற்றி எங்கும் ஒளிபிறக்க விடிவெள்ளி வானத்தில் மட்டும் தோன்றுகிறது. ஆனால் கடலுக்குச் சென்றவர்கள் இரவு பூராவும் கடலுடன் போராடுவார்கள். இப்போது விடியப் போகிறது என்பதைத் தெரியப்படுத்தும் விடிவெள்ளி கிழக்கில் உதிக்கும். இதனைக் கண்டு தமது தோணிகளையும் திருப்பிக் கொண்டு மீனவர்கள் வீடுநோக்கிப் புறப்படுவர். இதற்கே விடிவெள்ளி அவர்களுக்கு உதவியது. விடியப் போகிறது வீட்டுக்குத் திரும்பு என்பது மட்டும்தான் வாழ்வில் மகிழ்வு, முன்னேற்றம் அல்ல. மீனவர்கள் இருள் சூழ்ந்த துன்பம் நிறைந்த அவலமும் ஏக்கமும் நிறைந்த எதுவுமற்ற ஒட்டாண்டிகளாகவே வாழ்கின்றனர். இவர்களது வாழ்க்கையில் விடிவு இல்லை என மிகவும் இலாவகமாகக் கவிஞர் காட்டுகின்றார்.

"தோணி உடையான்
தரும் பிச்சை....
இந்தச் சிறுகுடிசை
இரண்டுபிடி சோறு..

இவர்களது வாழ்வில் பிரகாசம் இல்லை. தொடர்ந்துவரும் துன்பம் இருள் சூழ்ந்த அவலமான வாழ்வு, வறுமை தழுவிய வாழ்வு, இவ்வெறுமைப் போராட்டம் தொடர்கிறது. விடிவு இல்லை இதனையே வானத்தில் மட்டும்தான் பிரகாசம் தருகின்ற விடியப் போகிறது என்பதை எடுத்துக் காட்டும் விடிவெள்ளி தோன்றுகிறது. அது மீனவர்கள் வாழ்க்கையில் அல்ல அவர்கள் வாழ்வில் விடிவு இல்லை. அவலமே நிறைந்துள்ளது. எனக் கவிஞர் கூறமுனை வதை இங்கு காணமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05. பார்வைகள்

1. **நந்தியின் "பார்வைகள்" என்ற சிறுகதை சமூகத்தின் தனிமனித பிரச்சினைகளைப் பிரதிபலிக்கிறது. சான்றுபடுத்துக.**

சிறுகதை எழுத்தாளர்கள் டாக்டர் நந்தி அவர்கள் சமூகத்தின் தனிமனிதர்களின் பிரச்சினைகளை எடுத்துக் காட்ட '**பார்வைகள்**' என்ற சிறுகதையை எழுதினார் எனச் சுருங்கக் கூறிவிடலாம் வாழ்க்கையின் நீரோட்டத்தில் மனிதன் பல்வேறு போராட்டங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படுகிறது.

உயர்வு, தாழ்வு என்ற இருசொற்கள் எவ்விதம் மனித வாழ்வினை அலைக்கழித்து; அவதிப்படுத்துகின்றன. பணம், பொருள், கல்வி, தொழில், சாதி, அந்தஸ்து, தொழில் சாதனை, அழகு என்ற பல்வேறு வகைகளில் அவை மனிதனைப் பாகுபடுத்தி விடுகிறது. .

'**பார்வைகள்**' என்ற சிறுகதை மூலமாக அரச சேவையில் வேலை செய்யும், ஒரே நிறுவனத்தில் வேலை செய்யும் இருவர்களுக்கிடையிலான இருவேறுபட்ட தொழில்கள். ஒருவர் டாக்டர். ஒருவர் ஆஸ்பத்திரி தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளி. ஆனால் இருவரும் அரச ஊதியம் பெறும் அரச ஊழியர்கள். அதில் வேறுபாடு கிடையாது.

இக்கதையை எழுதிய நந்தி அவர்கள் ஒரு பிரபல்யமான டாக்டர். பிரதம வைத்திய அதிகாரியாக, பணிப்பாளராகக் கடமை புரிந்தவர். இவரது இயற்பெயர் சிவஞானசுந்தரம். தனது இறுதிக் காலத்தில் யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளராக இருந்தவர். பல்வேறு சிறுகதைகளை எழுதியவர்; தனக்கென ஓர் இடத்தை சிறுகதை எழுத்தாளர்களுள் பெற்றவர். தான் வாழ்ந்து தொழில் செய்த களத்தைப் பிரதான களமாக அமைத்து வைத்தியசாலையில் காணப்படும் ஏற்றத்தாழ்வு களையும் சமூகத்தில் அந்தஸ்த்தான தொழில் புரிவோர் எவ்விதம் சிறுதொழிலாளர்களை வஞ்சிக்கின்றனர் என்பதை அப்பட்டமாகப் பார்வைகள் என்ற கதையில் காட்டி விடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ **"பார்வைகள்"** என்ற கதையில் நந்தி அவர்கள் தனது அனுபவத்தைக் கொட்டிவிட்டார் எனலாம். சிற்றூழியர்கள் சமூகத்தில் எவ்விதம் வஞ்சிக்கப்படுகின்றார்கள், அவமானப்படுத்தப்படுகிறார்கள், அவர்களது வாழ்வும், செயலும், போக்கும் கூனிக் குறுகியதாக உயர் அதிகாரிகளுக்கு அடிபணிந்து நடக்கும் வாழ்வியல்களாக அமைந்துவிட்டது என்பதை டாக்டர் அப்படியே பிரபல்யப்படுத்துகிறார் எனலாம்.

தனிமனித வாழ்வின் அவலங்களை அப்பட்டமாக வெளிபடுத்தும் **"நந்தி"** அவர்கள், தர்மலிங்கம் சிற்றூழியனாக இருந்தும், தனது தொழிலை விசுவாசத்துடன் செய்வதையும், அவனது வேட்கையுடன் கூடிய உழைப்பையும் காட்டும் அதே வேளையில் உயர் அதிகாரிகளுக்குப் பிரத்தியேகமாக வேலைசெய்து, உயர் அதிகாரிகளின் அதட்டலுக்கும், தண்டனைகளுக்கும் ஆட்படாது ஆதரவைப் பெறத் துடிக்கும் சிற்றூழியர்களின் போக்கினைக் காட்டுகிறார்; சாடுகிறார்.

◈ டாக்டர் நந்தி அவர்கள் இச் சிறுகதை எழுத அவரது அனுபவமே வித்திட்டது எனக் கூறிவிடலாம். வைத்தியசாலைகளில் உயர் அதிகாரிகள் எவ்விதம் தொழிலாளிகளைக் கணிக்கின்றனர். தனிப்பட்ட வேலைகளுக்கு டாக்டர்களின் வீடுகளில் வேலை செய்வது போன்றவற்றைச் சமூகத்துக்கு அப்பட்டமாக எடுத்துக்காட்டி, இதனால் மனமுடைந்துள்ள சிற்றூழியர்களின் உடைந்த அவலம் நிறைந்த தொழிலையும், சஞ்சலமும், பயமும் கொண்ட தொழிலாக தொழிலாளர்களது பணி காணப்படுகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

தனிமனிதனின் வாழ்வில் அந்தஸ்து என்பது ஏனையோரைப் பொதுவாகச் சிற்றூழியர்களை வஞ்சிக்கிறது என்பதைத் தனது கதையோட்டத்தில் டாக்டர் நந்தி அவர்கள் காட்டத் தவறவில்லை.

◈ தங்கம்மாவுக்குத் தனது கணவன் பூமரங்களைப் பராமரிக்கும் தொழிலாளி என்றும், அவன் செய்யும் வேலையின் விபரமும் தெரியும். ஆஸ்பத்திரித் தோட்டத்தில் வேலையுடன் பெரிய டொக்டரின் வீட்டிலே அவர் மனைவியின் ஆணைப்படி செய்யும் தொட்டாட்டு வேலைகள் உட்பட, பின்னையது அவனது கடமை அல்ல. ஆனால் பெரிய அதிகாரி, அவர் மனைவி அவர்கள் செய்யச் சொல்வதை அவை சில வேளைகளில் ஆக்கினையாக இருந்தாலும் **"எப்படித் தட்டுவது?"** என்ற வார்த்தைகள் ஊடாகக் காட்டுவார். பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரியின் தண்டனைக்கும் ஏச்சுக்கும் ஆளாகாமல் இருப்பதற்காக அதிகாரிகளின் வீடுகளிலும், வெளியிலும் தமது அரச வேலைக்குப் புறம்பாக வேலை செய்யும் சிற்றூழியர்களையும் பெரிய அதிகாரி களின் மனைவிமார்கள் கூறும் வேலைகளை செய்துமுடிக்கும் வைத்தியசாலைச் சிற்றூழியர்களைச் சமூகத்தின் பார்வைக்கு எடுத்துக் காட்டுகிறார்.

- தனிமனித வாழ்வியலை **"பார்வைகள்"** மூலமாக எடுத்துக்காட்டும் டாக்டர் நந்தி அவர்கள் பெரிய அதிகாரிகளின் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் சிற்றூழியர்களின் பிள்ளைகள் படிக்கக்கூடாது என்பதை அதிகாரிகள் விரும்புவதை இலாவகமாக எடுத்துக் காட்டுகிறார். அட்மிசன் எடுப்பதற்காகப் பெரிய டொக்டரின் மனைவி வந்திருந்தா? எனக் கூறும் தர்மலிங்கம்,

**"என்ன? லிங்கம்! இங்கே யாரை...."** சின்னக் கேள்விகள் விசாரித்தன.

**"எனது மகனைச் சேர்ப்பதற்காக வந்தனான் அம்மா"**

இவ்வாறு கூறினான் லிங்கன் அந்த ஒருவிதமான விக்கினமும் இல்லாத பதில். **அம்மா முகத்தில் துர்நாற்ற வாயுவைப் பீச்சியது போல் அலங்கோல மாற்றத்தை உண்டு பண்ணியது** எனக்காட்டும் ஆசிரியர் உயர் அதிகாரிகள் தமது பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் சிற்றூழியர்களின் பிள்ளைகள் படிப்பதை விரும்பவில்லை என்பதை ஆணித்தனமாகச் சமூகத்துக்கு முன்வைக் கின்றார்.

- அதன்பின்பு லிங்கம் உயர் அதிகாரியின் வீட்டில் தொடர்ந்து வஞ்சிக்கப்படுகிறான். அதேவேளையில் பெரிய டாக்டரின் போக்கிலும் மாற்றத்தை உணர்ந்தான் என டாக்டர் நந்தி அவர்கள் காட்டுகிறார். இன்று அவனை (லிங்கத்தை) அவனுடைய மகனுடன் கண்டபோது வெளிவந்த **"மடையன்" "பொய்யன்....."** ஆகிய வார்த்தைகள் அந்த வெறுப்பின் உச்சக்கட்டம் என உணர்ந்தான் என லிங்கத்தின் நிலையை வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறு தனிமனித முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ள அந்தஸ்த்து என்ற வார்த்தையும், செயலும் எவ்வாறு சிற்றூழியர்களின் வாழ்வையும், மனத்தையும் புண்படுத்தி, அவர்களைச் சின்னாபின்னப் படுத்தி நடைப்பிணமாக்குகிறது என்பதை அப்பட்டமாக எடுத்துக் காட்டி உயர் அதிகாரிகளின் போக்கை மறைமுகமாகக் கதைமூலம் டாக்டர் நந்தி அவர்கள் சாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெரிய டொக்டரும், சிற்றூழியனும் அரச பதவியில் இருப்பவர்கள் அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது வேலை செய்யும் களம் அரசுக்கு உரித்துடையது என்பதை விளங்காது சிற்றூழியர்கள் பல்வேறுவழிகளிலும் வஞ்சிக்கப்படுவதை தனக்கே உரித்தான கதைமூலம் எடுத்துக்காட்டி தனிமனிதரின் பிரச்சினையை எடுத்துக்காட்டும் அதனை வெளிப்படுத்தும் கருவியாகப் **"பார்வைகள்"** என்ற சிறுகதையை நந்தி பொழிந்தார் எனக் கூறின் மிகையாகாது. இவ்வகையான **வஞ்சிப்பு மனித இனத்துக்கு உரியதல்ல** என்பதைச் சமூகத்துக்கு டாக்டர் நந்தி எடுத்துக்காட்டுகிறார்.

- இவ்வாறு கூறும் கதையில் தான் கடமை செய்த தொழிற்கூடமான ஆஸ்பத்திரியில் நிகழும், சிற்றூழியர்கள் வஞ்சிக்கப்பட்டு தன்னிலையிழந்து பரிதவிக்கும் நிலையைக் காட்டுவதன் மூலமாக வேறுநிறுவனங்களின் ஏனைய உயர் அதிகாரிகளுக்கும், இக்கதை பதில்கூறி அவர்களின் செயலுக்கும், போக்குக்கும் வன்மையான கண்டனத்தையும், ஆட்சேபனையையும் தருவதாகவும், அவ்வாறு செய்வோருக்கு அவமானத்தையும் தோல்வியையும் காட்டுகின்ற கதை **'பார்வைகள்'** ஆகும். ஒரு தனிமனிதப் பிரச்சினையை வெளிக்காட்டும் கதையாகவே "பார்வைகள்" என்ற கதையை டாக்டர் நந்தி ஆக்கியுள்ளார் எனக் கூறிக் கொள்ளளலாம்.

**2. "பார்வைகள்" என்ற தலைப்பு இச்சிறு கதைக்கு எவ்வளவு பொருத்தமானது என்பதை நியாயப்படுத்துக.**

- மனித சமுதாயத்திலே எவர் எவ்வளவுதான் நல்ல விடயங்களைச் செய்த பொழுதும் பிறரின் பார்வைகள் அவர் செய்கின்ற காரியங்களையும் மறைத்து தவறான பாதைக்கே கொண்டு சென்று விடுகின்றன.

- தருமலிங்கம் ஆஸ்பத்திரியில் வளவும் பூந்தோட்டமும் பராமரிக்கும் தொழிலாளி. ஆனால் அவனிடம் நல்ல பண்பு இருந்தது. குடும்பத்தில் நல்ல ஐக்கியத்துடன் வாழ்ந்துள்ளான். ஆனால் சமூகத்தின் பார்வை அவனுக்குப் பாதகமாக அமைகின்றது.

> **"ஆஸ்பத்திரித் தோட்டத்தில் வேலையுடன் பெரியடொக்டரின் வீட்டில் அவர் செய்யும் தொட்டாட்டு வேலைகள்..."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ இவ்வாறு கதையில் காட்டப்படுகிறது. டாக்டரும், தருமலிங்கமும் அரச உஸ்த்தியோகத்தர்கள். இருவரும் அரச ஊழியத்தையே பெறுகின்றனர். ஆனால் சமூகத்தின் பார்வை உயர்தொழில், தாழ்ந்த தொழில் என்ற வேறுபாடு. இதனால் செய்யும் தொழிலுக்கு ஏற்ப அவன் சமூகத்தில் வேலைத்தளத்தில் பின் தள்ளப்பட்டவனாக வேலை செய்யும் இடத்தில் அதிகாரிகளின் அடக்கு முறைகளுக்கும் அடாவடித்தனத்துக்கும் உட்படுபவனாக இருக்கின்றான். இதற்குக் காரணம் தொழில், அந்தஸ்த்து வேறுபாடுகள் என்ற பார்வையே.

◈ தங்கம்மாவின் தகப்பனும் ஆஸ்பத்திரியில் தோட்டத் தொழிலாளியாகத்தான் (கார்டன் லேபர்) வேலை செய்தவர். தனது கணவன் தர்மலிங்கமும் அதேவேலைதான்.

> "ஆனாலும் கட்டைக் காற்சட்டை போட்டு
> வெயிலிலும் மழையிலும் நாள் முழுவதும்
> செய்யும் வேலையிலிருந்து தனது மகன்
> ஒரு அலுவலகத்தின் பாதுகாப்பிலே நாற்காலியில்
> உட்கார்ந்து பேனை பிடித்து உழைக்க வேண்டும்."

எனத் தங்கம்மா விரும்புகிறார். செய்யும் தொழிலே தெய்வம் எனப் போற்றி வாழும் இன்பமயமான தர்மலிங்கத்தின் குடும்பத்திலும் தொழில் தொடர்பான பார்வை, சமூகத்தில் தொழில் ரீதியான தாக்கமும், பேச்சுக்களும் தங்கம்மாவுக்கு மகன் கிளாக்காக வேண்டும் எனக் கனவு காண வைத்தது. எனவே தொழில் தொடர்பான தங்கம்மாவின் பார்வை; இங்கே தொழிலிலும் அந்தஸ்தான தொழில் என்ற பகுப்பு உண்டு என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

◈ பட்டணத்தில் படிப்பவர்கள், பட்டணத்தில் வேலை செய்பவர்களுக்குத் தனிமதிப்பு உண்டு. இம் மதிப்பு கிராமத்தின் சமூகப் பார்வையால் ஏற்பட்டது. இதனைச் சான்றுபடுத்த தர்மலிங்கம் **"அப்பா எங்கே வேலை செய்கிறார்"** என்று பெரிய பாடசாலை டீச்சர் கேட்டால் **"பட்டணத்து ஆஸ்பத்திரியில்"** என்று சொல்ல வேண்டும். எனக் கூறுவதை இங்கு நோக்கத்தக்கது.

எங்கே ஐயாவும் மகனும்? பிள்ளையார் கோயில் ஐயர் எதிர்ப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பட்டணம் ஐயா, இன்றைக்கு இவருக்கு நேர்முகப் பரீட்சை"
ஐயர் சிரித்தார்.

தர்மலிங்கம் சைக்கிளில் இருந்து இறங்கியதும் வைத்திய அதிகாரி திரும்பிப் பார்த்தபோது பார்வையில் கடும் கண்டனம் தெரிந்தது.

◈ "மன்னிக்க வேண்டும் ஐயா. எனக்கு ஒருநாள் அவசர லீவு வேண்டும் என்று கேட்டான் தருமலிங்கம்" "ஐயா! மகனுக்கு இன்றைக்கு பள்ளிக்கூடம் சேர்ப்பதற்கு நேர்முகப் பரீட்சை"

"நேற்றுத்தான் ஐயா கடிதம் வந்தது. அந்திலைதான் பார்த்தேன்."

"பொய் பேசாத லிங்கம்"

"டொக்டர் பார்வை இப்போது விமலன் பக்கம் வீசியது."

".... எனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்தால், நீ தான் மடையன்."

டேய் நீ இப்ப.....

இவ்வார்த்தைகளின், செயற்பாடுகளின் ஊடாக பதவி நிலையில் குறைந்த தொழிலாளிகள் உயர் அதிகாரிகளால் வஞ்சிக்கப்பட்டும், கடின வார்த்தைகளால் ஏசப்பட்டும் மனம் வதங்கியே வாழ்கின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் செய்கின்ற தொழில்ரீதியான பாகுபாடே காரணம், எனவே சமூகப்பார்வை, தொழில் நிலையங்களில் கொடுக்கப்படும் அந்தஸ்த்தும் மரியாதையும் கணிப்பின் அடிப்படையில் நிகழ்த்தப்படுவதையும் **"பார்வைகள்"** என்ற தலைப்பு பிரதிபலித்து நிற்கின்றது.

◈ பெரிய டொக்டரின் மனைவி தனது பேரப்பிள்ளைக்கு **"அட்மிஷன்"** எடுக்க வந்திருந்தா.

"என்ன? லிங்கம்! இங்கே? யாரை...?"

"எனது மகனைச் சேர்ப்பதற்கு வந்தனான் அம்மா"

ஒருவித விக்கினமும் இல்லாத அந்த வார்த்தை அம்மா முகத்தில் துர்நாற்ற வாயுவைப் பீச்சியது போல், அலங்கோல மாற்றத்தை உண்டு பண்ணியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டணத்துப் பாடசாலையில் ஆஸ்பத்திரி லேபரின் மகன் படிக்கவா? என்ற வெறுப்பு சமூகத்தில் எனது பேரப்பிள்ளையும், லிங்கத்தின் மகனும் ஒரே பாடசாலையில் படிப்பதா? என்ற உள்ளாந்த வேறுபாடான வினா. பெரிய டாக்டர் மனைவியின் பார்வையில் ஏக்கத்தை, வெட்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே தான் இக்கதைக்குப் **பார்வைகள்** எனத் தலையங்கம் இட்டார் டாக்டர் நந்தி.

◈ அன்றுமுதல் லிங்கம் பெரிய டொக்டர் வீட்டுக்கும் போகும்போது அம்மாவின் முன்னைய உபசாரம் இருப்பதில்லை. லிங்கம் ஒரு அரசாங்க ஊழியன். அதை மறந்து பெரிய டொக்டரின் போக்கிலும் மாற்றத்தை லிங்கம் கண்டான்.

"மடையன்!, பொய்யன்....!" என்ற வார்த்தைகள் வெறுப்பின் உச்சக்கட்டம்.

எனவே சமூகத்தின் பார்வை தொழிலாளி, தொழிலாளியாகவே இருக்க வேண்டும். அவனது வாழ்க்கை நீரோட்டம் உயர் அதிகாரிக்குக் கட்டுப்பட்டதாக அமைய வேண்டும். அவர்களது பிள்ளைகளும் தொழிலாளியாகவே வரவேண்டும். இதுதான் அவர்களது எண்ணம். சமூகப்பார்வையும் விருப்பமும்.

உயர் அதிகாரிகளின், நிர்வாகிகளின், உத்தியோகத்தர்களின் பிள்ளைகளே பட்டணத்துப் பாடசாலைகளில் படிக்க வேண்டும் என்ற சமூகப் பார்வை, ஏழைத் தொழிலாளர்களின் மனத்தையும், வாழ்வையும் உலுக்குகிறது என்பதை எடுத்துக்காட்ட டாக்டர் நந்தி தனது கதைக்குத் தலைப்பாகப் **"பார்வைகள்"** எனப் பெயரிட்டார் போலும் எனவும் கூறலாம்.

◈ இவ்வாறு சமூகத்தில் தொழில்ரீதியான பாதிப்புகளை தொழிலாளர்கள் அனுபவிக்கின்றார்கள். டாக்டர் நந்தி அவர்கள் தான் ஆஸ்பத்திரியில் வேலை செய்தபோது, உயர் அதிகாரியாகப் பதவி வகித்தபோது கண்டும், கேட்டும் அனுபவித்த தொழிலாளிகளின் இன்னல்களைப் **"பார்வைகள்"** என்ற தலைப்பின் ஊடாகச் சமூகத்தில், தொழில் நிறுவனங்களின் பார்வை எவ்வாறு உள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.

இவ்வாறு பல்வேறு வகையிலும் தொழில் நிறுவனங்களில் சிற்றூழியர்கள் வஞ்சிக்கப்படுவதும் உயர் அதிகாரிகளினதும், சமூகத்தினதும் பார்வை அவர்களைக் குறைத்து மதிப்பிட்டு விடுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர்களும் அரச ஊழியர்கள் தான் என்பதையும் அவர்களுக்கும் குடும்பம் உண்டு; ஆசை உண்டு, அவர்களும் சமூகத்தில் உயர்வடைய வேண்டிய கடப்பாடு உண்டு. அவர்களைச் சமூகம் மதிக்க வேண்டும். அவர்களுக்கு முன்னேற்றம் வரவேண்டும், அவர்களும் இறைவனின் பிள்ளைகளே என்ற எண்ணம் எல்லோருக்கும் மனத்தில், செயலில் ஏற்பட வேண்டும். எனவே எல்லோரது பார்வையும் எவருக்கும் தீங்கிளைக்காது இருக்க வேண்டும் என்பதையும் சமூகத்தின் பார்வை எப்பொழுதும் உயர்ந்த எண்ணம் கொண்டதாக அமைய வேண்டும் எனவும் விரும்பிய டாக்டர் நந்தி இச் சிறுகதைக்குப் **"பார்வைகள்"** என்ற பொருத்தமான தலையங்கம் இட்டுள்ளார் எனலாம்.

3. **"ஒரு தனிமனிதனின் ஆளுமை சமூகத்தின் வேறுபட்ட தளங்களுக் கேற்ப மாறுபட்டுத் தோன்றலாம்" என்ற கூற்றுக்குத் தர்மலிங்கம் என்ற பாத்திரம் பொருத்தமானதா? என்பதை ஆதாரப்படுத்துக.**

◈ ஒரு தனிமனிதனின் ஆளுமையானது இடத்துக்கு இடம் நெகிழ்வுபட்ட தாக மாற்றங் கொண்டதாக அமைவதில் வியப்பு இல்லை. இதுவே இயல்பு.

"தம்பி லிங்கம் ஒரு உதவி வேணும்"

போஸ் மாஸ்றரின் வீட்டுக்குப் பின்னேரம் வருவதாக அப்பா கூறினார்.

ஓ, கிராம சேவகர் சந்திரன் மாமா.

அப்பா, பாடசாலைக்குப் போய் பேசிவிட்டு வந்தார். சனசமூக ஆண்டுக்கூட்டம் விஷயமாக....!

தனது புருஷனுக்கு அந்தச் சின்ன உலகிலே உள்ள நடப்பை நினைத்து தங்கம்மா நெஞ்சு நிறையப் பெருமிதம். இவ்வாறு சமூகப் பொருத்தப்பாடு கொண்டவராக, தான் விரும்பி எதையும் செய்யும் போக்கு லிங்கத்தின் ஆளுமைக்கு எடுத்துக் காட்டாகும். இது ஒரு கோணம்.

◈ "தம்பி லிங்கம், வாற திங்கள் கோயிலிலே சங்காபிஷேகம். மறந்திடாதேயும் என்றார் ஐயர். சமூகத்தில் பொதுப்பணிகளில் தன்னாலான உதவிகளைப் புரிபவனாக லிங்கம் காட்டப்படுகின்றான். வெவ்வேறு பணிகளிலும் இடத்துக்கேற்ப லிங்கம் தனது ஆளுமை யைச் செயற்படுத்துவதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ தர்மலிங்கம் தோட்டத்தொழிலாளி; பூமரங்களைப் பராமரிப்பதில் கவனம் உச்சம் என்று பொதுவாக அனைவரும் பேசிக் கொள்வார்கள். இங்கே லிங்கம் தனது ஆளுமையைத் தளத்திற்கு ஏற்ப பதித்துக் கொள்வதைக் காணலாம்.

◈ பெரிய அதிகாரியுடன் பேசும் போது கொடுக்க வேண்டிய மரியாதை, இனிய வார்த்தைகள் என்பவற்றை லிங்கம் தமதாக்கினான். **"மன்னிக்க வேண்டும் ஐயா, எனக்கு ஒரு நாள் அவசர லீவு வேண்டும்"** இதுவும் அவனின் ஆளுமையின் வெளிப்பாடே.

◈ இல்லை ஐயா, மகனுக்கு இன்றைக்குப் பள்ளிக்கூடம் சேர்ப்பதற்கு நேர்முகப் பரீட்சை....

"பொய் பேசாதே லிங்கம்"
".... நீதான் மடையன்"
"டேய். நீ இப்ப......"

வைத்திய அதிகாரியின் வாய்க்கு வந்த படியான ஏச்சுக்கள், நச்சரிப்புக்கள். ஆனால் லிங்கம் தனது ஆளுமையை இங்கு அமைதியுடன் பயன்படுத்துகிறான். அதிகாரிகளின் பேச்சின் கடினத்தையும், கனத்தையும் கூறும் கதாசிரியர்;

"லொறியில் கற்கள் பறிக்கப்படும் ஓசைக்கும்
அந்தப் பேச்சுக்கும் இடையில் ஒருவித ஒற்றுமையை
உணர்ந்தான்"

என்ற கூற்றின் ஊடாக வார்த்தைகளின் கடினம் விளங்குகின்றது. இவ் விடத்தும் லிங்கன் தளத்துக்கு ஏற்ப தனது பொறுமையைப் பேணுகின்றான், எதிர் வார்த்தை பேசவில்லை; லீவினைப் பெறுகின்றான்.

◈ ஒரு மாத காலமாக அவன் கூறும் அந்த டொக்டர் வீட்டு அன்னியோன்னியத் தொடர்பில் வீழ்ச்சி ஏற்பட்டதை லிங்கம் அனுபவித்தான்.

"லிங்கம் அவர்கள் வீட்டிற்குப் போகும் போது அந்த அம்மாவின் முன்னைய உபசாரம் இருப்பதில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தன் உள்ளத்தில் லிங்கம் சுமந்தான். ஆனால் அவர்களிடம் எதிர்த்துக் கேட்கவில்லை. தானும் அரச ஊழியன், பெரிய டொக்டரின் வீட்டில் மனைவியின் ஆணைகள்படி செய்யும் தொட்டாட்டு வேலைகள் இது அவனது கடமை அல்ல.

ஆனால் பெரிய அதிகாரி. அவர்கள் சொல்வது ஆக்கினையாக இருந்தாலும் எப்படித் தட்டுவது? அவ்விடத்திலும் பெரிய அதிகாரிகளின் மனத்தைச் சமாதானப்படுத்த, சந்தோஷப்படுத்த வேண்டிய நிலை. இது அவனது ஆளுமைக்கு எடுத்துக்காட்டு. தளத்திற்கு ஏற்ப மாற்றமடைந்தவனாகக் காணப்படல்.

◈ "தங்கம் பெரிய டொக்டர் வீட்டில் கொஞ்சம் வேலை இருந்தது செய்து முடிக்க நேரம் போனது தெரியவில்லை."

அவர்கள் வீட்டு வேலைக்கு அரசாங்கம் பணம் தருகிறதா? அல்லது அவர்தான் ஏதாவது தருகிறாரா? நீங்கள் என்ன அந்த வீட்டுக் கூலியாளா? லிங்கம் மனைவி கேள்விகளை அடுக்குவாள்.

தங்கம், பணம் தானா எல்லாம் அதைவிட ஒருவரின் நல்லெண்ணம் பெரிசல்லவா? ஒரு குடும்பத்துடன் பழகும் மகிழ்ச்சி, சிரிப்பு இவை பெரிதல்லவா?

இக்கூற்றுக்கள் எதனைக் காட்டி நிற்கின்றன? டாக்டர் வீட்டில் செய்யும் பிரத்தியேக வேலை தனது கடமைக்கும் புறம்பான வேலை எனத் தெரிந்திருந்தும் லிங்கம் இப்போது தனது குடும்பக் களத்தில் நின்று தனது மனைவிக்கும் கூறும் சமாதான, நிதானமான, அமைதியான ஏற்றுக் கொள்ளக் கூடிய பதிலைக் கூறும் விதம் லிங்கம் தளத்துக்கு (இடம்) ஏற்பத் தனது ஆளுமையைப் பிரயோகிக்கும் ஆற்றல் பொதிந்தவன் என்பதைப் பறை சாற்றுகிறது.

◈ லிங்கம், பெரிய டொக்டரைப் பார்த்தான். அவனின் கண்கள் நியாயத்தைப் பேச நிலைகுத்தி நின்றன.

"உங்களுக்கு ஒன்று சொல்லவிரும்புகிறேன். டொக்டர் அப்படியே நின்றார். டொக்டர். நீங்கள் ஒரு அரசாங்க ஊழியர் நானும் அப்படித்தான். இந்த நிறுவனத்திலே எமக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் உண்டு. நீங்க நிர்வாகி. நான் சிற்றூழியன். ஆனால் என்மேல் குற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை இருந்தால் அதனை விசாரிக்கவும் என்னைத் தண்டிக்கவும் விதிமுறைகள் உண்டு.........."

என நியாயத்தின் பக்கம் அவன் உண்மையை நேரே பேசுவதும் அவனிடம் உள்ள ஆளுமையை வெளிப்படுத்துகிறது.

டாக்டர் தனது தந்தையை ஏசியதைக் கேட்ட விமலனது முகம் பிடுங்கி வைக்கப்பட்ட ஒரு செடிபோல் சோர்ந்து காணப்பட்டது என ஆசிரியர் கூறுவார். சோர்வின் உச்சத்தை லிங்கம் செய்யும் தோட்டத்தில் நிகழும் நிகழ்வின் ஊடாக உள்ளங்கை நெல்லிக் கனியெனப் படம் பிடித்து விடுகிறார் டாக்டர். தனது நிலையை வெளிப்படையாக டாக்டரிடம் கூறுவதும், நியாயம் எது என்பதை டாக்டரிடம் வினவி நிற்பதையும் இங்கே காணமுடிகிறது. எனவே தளத்துக்கு ஏற்ப உயர் அதிகாரியின் தொழில் உயர்வையும், சிறப்பையும் காட்டும், மதிக்கும் லிங்கம் தான் சிற்றூழியன் என்பதையும் எடுத்துக் காட்டி ஆனால் அதனூடாக நாம் இருவரும் அரச ஊழியர்களே என்பதையும் எமக்கென அரசு விதித்த விதிமுறைகளும், சட்டங்களும், உண்டு என்பதை அரச ஊழியன் என்ற உன்னதமான தளத்தில் நின்று வெளிப்படுத்தும் ஆற்றலும்; அவ் ஆற்றலை தான் எண்ணியதை நியாயப்படுத்த ஆதாரப்படுத்தும் விதிகளும் லிங்கம் தளத்திற்கு ஏற்பத் தன்னை ஆக்கிக் கொள்ளும் ஆற்றலும், ஆளுமையும் கொண்டவன் என்பதைப் பிரதிபலிக்கிறது.

◈ "ஆரப்பா அவர்?" என்று கேட்டான் விமலன். யார்?
"அப்பாவுடன் பேசியவர்?"
"அவர் பெரிய டொக்டர்"
"ஆர் அப்பா பெரியவர். அவரா நீங்களா?
"ஆஸ்பத்திரியில் அவர் "பெரிசு" என்றான் லிங்கம்
"அப்ப நீங்கள்"
"எங்கள் வீட்டிலை எங்கள் ஊரிலை அப்பா பெரிசு.... நாங்கள் எல்லோரும் பெரிசு...."

என்ற லிங்கத்தின் வார்த்தைகள் ஊடாகத் தனது மகன் விமலனின் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்துக்கும், வருத்தத்துக்கும், வாடியபயிருக்கு நீர் விட்டாற் போன்று நல்ல பதில் கொடுக்க வேண்டும் என்பது தெரிந்தது. எனவேதான் இங்கே குழந்தையின் இடத்தில் குடும்பக்களத்தில் நின்று தகுந்த வார்த்தைகளால் மகனைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானப்படுத்தி அவனை இன்புறச் செய்ய இவ் வார்த்தைகளை லிங்கம் கூறிவிடுகிறான். இது லிங்கத்திடம் காணப்படும் இடத்திற் கேற்ப ஆளுமையைப் பயன்படுத்தும் ஆற்றலை விளம்பி நிற்கிறது எனில் மிகையாகாது.

◈ **"பெரிய இடத்தவர்கள்தான் வந்திருந்தார்கள் பெரும் பாலும் பிள்ளைகளின் தாய்மார் படித்தவர்கள்"** என எண்ணிப் பெருமூச்சு விடுகிறான் லிங்கம்.

**"குட்மார்னிங்"** உடன் நேர் முக உரையாடல் ஆரம்ப மாகும் இவற்றை நேர்முகப் பரீட்சையில் தர்மலிங்கம் அவதானித் தான்.

"…. விமலனுக்கு வணக்கம் கூறும்படி சொல்லிக் கொடுத்தான்"

எனக் கதாசிரியர் காட்டுகிறார். இங்கே இறுதி நேரத்தில் பிள்ளையை அவதிப்படவைக்கக் கூடாது என்ற எண்ணம் லிங்கத்திடம் இருந்தது, இன்னும் கூறப்போனால் **'குழந்தை உளவியல்'** தொடர்பான ஆற்றல் அவனிடம் இருந்தது எனலாம். இறுதி நேரத்தில் **"குட்மோனிங்"** சொல்லிக் கொடுத்து விமலனைச் சஞ்சலத்தில் ஆழ்த்தி விடாது எச்சரிக்கையாக நடந்து கொண்ட; தளத்திற்கு ஏற்ப எதனையும் நியாயமாக எதிர்கொள்ளும் போக்கு லிங்கத்திடம் இருந்தது என்பதில் வியப்பில்லை.

இவ்வாறு பல்வேறு தளங்களில் லிங்கத்தையும் அவனது போக்கையும், எண்ணத்தையும், காரியமாற்றும் விதத்தையும் இனிய பேச்சையும், பக்குவத்தையும் காட்டும் கதாசிரியர் டாக்டர் நந்தி அவர்கள் லிங்கத்தை அதாவது **"தனிமனிதனின் ஆளுமை தளத் திற்கு ஏற்ப மாறுபடும்"** என்ற கூற்றினை நியாயப்படுத்துவதாக அமைந்துள்ளமையை லிங்கம் வாயிலாக எமக்கு விளங்க வைக் கின்றார் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06. நீதிப் பாடல்கள்

திருக்குறள் - செங்கோன்மை

1. **திருவள்ளுவர் பின்வருவனவற்றை எவ்விதம் எடுத்துக்காட்டுகிறார் என்பதை விளக்குக.**

**அ. செங்கோன்மையின் சிறப்பு**

**ஆ. கொடுங்கோன்மையின் இழிவு (புன்மை)**

**அ. செங்கோன்மையின் சிறப்பு**

"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

எனத் தனது திருக்குறளின் செங்கோன்மை என்ற 55வது அதிகாரத்தில் 544 வது குறளில் கூறுவார். இங்கே செங்கோன் மையின் உயர்வைக் காட்டக் குடிமக்களை ஆதாரப்படுத்தும் சிறப்பி னைக் காணமுடிகிறது.

அரசன் குடிமக்களை அன்போடு அணைத்து, அன்பு பாராட்டி செங்கோல் செலுத்துகின்றவனாக இருத்தல் வேண்டும். அவ்வாறு செங்கோல் செலுத்துகின்ற வளையாத ஆட்சி கொண்ட அரசனது அடியை, அவனது ஆணையை உலகத்தார் போற்றி நிற்பர்; பொருந்தி நிற்பர் என வள்ளுவர் காட்டுகின்றார்.

மக்கள் எவரது ஆட்சியை விரும்புகின்றனர்? செங்கோல் ஆட்சியை. செங்கோலாட்சி எவ்விதம் அமைய வேண்டும்? மக்களை அன்புடன் அணைத்துப் பராமரிக்கும், போற்றும் ஆட்சியாக அது அமைய வேண்டும்.

அவ்விதம் அமையச் செய்யும் அரசனது ஆணையை அவனது அடியை மக்கள் விரும்புகின்றனர். போற்றுவர் எனச் சிறப்பாகச் செங்கோலின் உயர்வைத் திருவள்ளுவர் காட்டுகிறார்.

"குடிபுறங் காத்து ஓம்பிக் குற்றங் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில்"

என வள்ளுவர் தனது 55 வது அதிகாரத்தில் 549 வது குறளில் அரசனுடைய தொழிலின் உயர்வைக் காட்டுதலின் மூலமாகச் செங்கோன்மையின் சிறப்பை நியாயப்படுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிமக்கள் அரசனது அடியைப் போற்ற வேண்டுமாயின் அவ் அரசன் தனது தொழிலை எவ்வாறு ஆற்ற வேண்டும். அதுவே செங்கோன்மையை நிலை நிறுத்தச் சிறந்த ஊன்றுகோலாக அமையும் என்பதைப் பின்வருமாறு காட்டுகின்றார்.

செங்கோல் செலுத்தும் மன்னன் குடிகளை (குடிமக்களை)ப் பிறர் வருத்தாது பாதுகாக்க வேண்டும்.

அதே வேளையில் தானும் வருந்தாது இன்பமுடன் கரும மாற்ற வேண்டும்.

குடிமக்கள் குற்றம் செய்தபோது அக்குற்றங்களைக் களைவதற்காக எதிர் காலத்தில் அக் குற்றங்கள் நிகழாது இருப்பதற்காக, ஏனையவர்கள் அக்குற்றங்களைத் தொடராது இருக்கக் குற்றங்கள் களையப்பட வேண்டும். குற்றங்களையப்படும் சந்தர்ப்பத்தில் குற்றம் செய்தவர் தண்டிக்கப்படலாம்; குற்றங்களுக்குத் தக்க தண்டனை வழங்குதல் அரசனுடைய தொழில் அல்லவா? குற்றங்களைத் தண்டனையால் ஒழித்தல் மன்னன் கடமை அல்லவா? அது பழியல்ல. எனவே குடிமக்களைப் போற்றி அவர்களைக் காக்க வேண்டுமாயின் நாட்டில் நிகழும் குற்றங்கள் களையப்பட வேண்டும். அப்போது குடிமக்களைப் பிறர் வருத்தாது காக்கலாம் இது வேந்தன் செய்ய வேண்டிய தொழிலே.

எனவே செங்கோன்மை சிறக்க நாட்டில் நிகழும் குற்றம் களைந்து, குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அது நியாயமானது; அதுபழி அன்று அரசனின் தொழிலே. செங்கோன்மை சிறக்க அவை செய்யப்பட வேண்டும் என விளம்புவார்.

இவ்வாறு செங்கோன்மையின் சிறப்பைத் திருவள்ளுவர் திருக்குறளில் எடுத்துக் காட்டுகிறார்.

## ஆ. கொடுங்கோன்மையின் இழிவு

திருவள்ளுவர் கொடுங்கோன்மையின் இழிவு பற்றி அதிகாரம் 56 இல் குறள் 553 வது குறளில்

"நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்"

என இவ்வாறு கூறுகின்றார்.

நாள்தோறும் (ஒவ்வொரு நாளும்) தனது ஆட்சியில் விளைகின்ற நன்மை, தீமைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்ப முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாத (வழிப்படுத்தாத) அரசன், நாள்தோறும் மெல்ல மெல்லத் தன் நாட்டை இழந்து வருவான்; விடுவான்.

இங்கே கொடுங்கோலாட்சி நிகழும் நாட்டில் அரசன் எவ்வாறு திகழவேண்டும் கருமமாற்ற வேண்டும் அவ்வாறு செய்யா விடின் அதனால் ஏற்படும் விளைவு எப்படியான பாதகமாக இருக்கும் என்பதைத் திருவள்ளுவர் மிக எச்சரிக்கையாக எடுத்துரைக்கின்றார். இங்கே கொடுங்கோலாட்சி நிலைத்திருக்காது. அவ் ஆட்சி செய்யும் மன்னன் தன் ஆட்சியின் பிடியை நாள்தோறும் இழந்து இறுதியில் நாட்டையே இழந்து விடுவான் என எச்சரிப்பார் வள்ளுவப் பெருமான்.

எனவே செங்கோலாட்சியுடன் கூடிய மன்னனே வழிவழி யாக நிலைத்திருப்பான் என்பதை வள்ளுவர் எடுத்துக்காட்டுகிறார். உனது ஆட்சியில் தினமும் நாட்டில் நன்மை, தீமைகள் எவ்விதம் நிகழ்கின்றது என ஆராய்ந்து பார்; ஆட்சி நடக்கிறது என வீணே இருந்து விடாதே. நாட்டில் நிகழும் நன்மை தீமைகளை நாள் தோறும் நீ ஆராய்ந்து பார்த்து ஒழுங்குபடுத்தி, வழிப்படுத்தாவிடில் உனது ஆட்சியை ஆட்சியின் வலிமையை நாள் தோறும் இழந்து விடுவாய். இறுதியில் நாட்டையே இழந்து விடுவாய் என்பார்.

எனவே செங்கோலாட்சியே செய் எனவும்; அது உனது ஆட்சி நிலைக்க வழிகாட்டும் என ஆணித்தரமாகக் கூறிக் கொடுங்கோலாட்சியின் புன்மையைச் சாடுகிறார்.

இவ்வாறு கொடுங்கோலாட்சியின் இழிவைக் கூறிய பொய்யாமொழிப்புலவர் தனது 56வது அதிகாரத்தில் 554 வது குறளில் மேலும் கொடுங்கோலாட்சியில் அரசன் எவற்றை, எவ்விதம் இழந்து வருந்துவான் எனக் காட்டுகிறார்.

"கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் கோல்கோடிக்
குழாது செய்யும் அரசு"

இங்கே, **"குழாது கோல் கோடிச் செய்யும் அரசு, கூழுங் குடியும் ஒருங்கு இழக்கும்"** என்பார். அதாவது (ஆட்சிமுறை கெட்டு) தான் கொடுங்கோலனாகி இதனைச் செய்வதனால் என்ன விளைவு கள் ஏற்படும் என ஆராயாமல் தவறு செய்யும் மன்னன் தான் செய்கின்ற தவறான காரியத்தினால் தான் முன்னர் ஈட்டியிருந்த பொருட்களையும், முன்பு, பின்பும் ஈட்டுவதற்கு உரியதும் பாதுகாப் பதற்கும் சேர்ப்பதற்குமுரிய குடிமக்களையும் ஒருங்கே சேர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்துவிடுவான் எனக் கொடுங்கோன்மையின் இழிவை வள்ளுவர் காட்டிவிடுகிறார்.

மன்னன் தனது ஆட்சியில் தனது செய்கை எவ்வாறு உள்ளது தான் கொடுங்கோலனாகித் தன் எண்ணத்தில் செய்யப்படும் ஆட்சியின் பின் விளைவுகள் எவ்வாறு அமையும் என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். மன்னன் தான் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஆராய்ந்து அதன் நன்மை தீமைகளை அறிந்தே அதனைச் செய்ய முன்வரவேண்டும்.

அதனைவிடுத்து ஆராயாது தான்தோன்றித்தனமாக எடுக்கப்படும் தவறான கைங்கரியங்களாலும், முயற்சியினாலும், செய்கையினாலும், தான் சேர்த்த பொருட்களை முற்றாக இழந்துவிடுவதோடு ஈட்டுவதற்கு ஏதுவாகிய குடிகளையும் ஒன்றாக இழந்து விடுவான். குடிகளை, பொருளை இழந்தபின் அவனால் ஆட்சியைத் தொடரமுடியாது குடிமக்களை இழக்கும் அளவுக்கு மன்னனின் ஆட்சி அமைய வேண்டுமா? அது விரும்பத்தக்கதா? அவ் ஆட்சியை மக்கள் மனமுவந்து ஏற்பார்களா? அது முடியக்கூடிய காரியமா? என்றெல்லாம் எண்ணுதல் வேண்டும். இவ்வாறு கொடுங்கோலாட்சி யின் இழிவை எடுத்துக்கூறும் அதேவேளையில்

ஈட்டியபொருளையும் குடிமக்களையும் பேணுவதற்குச் செங்கோலாட்சியே சிறந்தது என இக்குறள் மூலம் மறைமுகமாக வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

நாலடியார்

2. **"பெரியாரோடு சேர்ந்திருந்து மக்கள் தம் குறை தீர்த்துப் பெருமையடைய வேண்டும்" என்பதை நாலாடியார் எவ்விதம் சிறப்பித்துக் காட்டுகிறது?**

பாலோடு கலந்த (**அளாயநீர் – ஒன்றாகக் கலந்த நீர்**) நீரானது பாலாகத் தோன்றுமே தவிர, நிறம் மாறித்தோன்றாது. பாலினுள்ளே நீரை விடின் அந்நீரும் பாலின் நிறமாக மாறித் தோன்றிவிடுகிறது. நீர் தன் தன்மையை இழந்து விடுகிறது. இங்கே இனிய சுவையுடைய நறும்பாலின் வெண் நிறமானது நீருக்கும் கிடைத்து அனைத்தும் வெண்ணிறமாகி விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது போலக் கீழ்மக்கள், மேன்மக்களுடன் சேர்ந்து விட்டால், கீழ்மக்களின் இழிந்த குணமானது, மேன்மக்களின் பெருமைக் குணங்களில் கண்டு கொள்ள முடியாதபடி கலந்து மறைந்து போய்விடும் என நாலடியாரில் கூறப்பட்டுள்ளது.

இதனை

"பாலோ டளாய நீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம் "

எனக் கூறினார்.

ஆராய்ந்து பார்ப்பின் (தேரின்) சிறியாரிடம் காணப்படும் சிறுமைக்குணமும் தோன்றாது ஏனெனில் உயர்ந்த பெரியவர்களுடைய பெருமைக்குரிய பெருந்தன்மையும், பண்பும் சிறியாருடன் சேர்தலால், சிறியாரிடம் உள்ள குறைபாடு எதுவும் தோன்றாது மறைந்துவிடும். இது பெருமைக்குரிய விடயமாகும். இதனை

"சிறியார் சிறுமையும் தோன்றாதாம் நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து "

எனக் கூறுகின்றர்.

எனவே மக்கள் எப்பொழுதும் பெரியவர்களுடன் சேர்ந்து கொண்டால் அவர்கள் தம்குறைகளை சீக்கிக் கொள்வதோடு பெருமையையும் புகழையும் தேடிக் கொள்ளலாம் என நாலடியார் கூறுகின்றது.

## பழமொழி நானூறு

3. **"அறிவுடையார் புகழை மறைத்தாலும் மறைபடாது" என்பதை பழமொழி நானூறில் புலவர் எவ்வாறு எடுத்துக் காட்டுகிறார் என்பதை விளக்குக.**

**("ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்" என்ற பழமொழி மூலம் ஆசிரியர் எதனை விளக்க முறைப்படுகின்றார்?)**

மூங்கில் போன்ற திரண்ட தோள்களையும், வேல் போன்ற கூரியதும், பிரகாசமானதுமான கண்களையும் உடைய, பெண்ணே! **"ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்"** என்பதை அறிவாயாக அதாவது சூரியனைக் கையினால் மறைத்துவிட முடியுமா? ஒருபோதும் அதனைச் செய்துவிடமுடியாது. கையினால் சூரியனை மறைத்து அது ஒளியைப் பரப்பாது விடச் செய்ய முடியுமா? முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பெயரெச்சம் - பரந்த; வினையெச்சம். கரந்து, நிரந்து, எழுந்து).

பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டுக்
கரந்து மறைக்கலும் ஆமோ?

என வினவுகிறார் ஆசிரியர்.

அதாவது மிக்க ஆற்றல் உடையவர்களின்மேல் பல்வகையில் செய்யாத கடுங்குற்றங்களைச் சுமத்தி அவர்களின் புகழைத் திட்டமிட்டு மறைக்க முயலுதல் தோல்வியையே ஏற்படுத்தும். ஏனெனில் அதனை ஒருபோதும் செய்ய முடியாது. சூரியனைக் கையினால் மறைத்து அதன் பிரகாசத்தை இல்லாமல் செய்துவிடமுடியுமா? முடியாது என்பதுபோல் ஆற்றல் மிக்கவர்களின் புகழையும் ஒரு போதும் நாம் குறைத்துவிட முயற்சித்தல் வெற்றியை அளிக்காது. மாறாகத் தோல்வியையே தரும் என்பதனை பழமொழி நானூறில் ஆசிரியர் இவ்வாறு எடுத்துக் காட்டுகின்றார்.

## நான்மணிக்கடிகை

1. **நான்மணிக்கடிகையில் "நகைநலம் நட்டார் கண்" என்ற பாடல் மூலம் ஊர்மக்களின் சிறப்பு (தன்மை) எவ்வாறு அறியப்படும் எனக் கூறப்பட்டுள்ளது?**

ஒருவரின் முகமலர்ச்சியின் நன்மையானது நட்புச் செய்தவர் ஊடாகச் சிறப்படையும். இதனை

'நகைநலம் நட்டார்கண் நந்தும்'

என்றார்.

சிறந்த சபையொன்றின் பெருமை அங்கே பயிலப்படு அன்பின் தன்மை கொண்டு அறியப்படும். அதாவது

'சிறந்த அவைநலம் அன்பின் விளங்கும்'

எனக் கூறினார்.

விரைந்த வேகமானது ஓட்டப்படும் பாகனால் பெருமை சிறப்புப் பெற்று விளங்கும்.

'விசைமாண்ட தேர்நலம் பாகனாற் பாடெய்தும்'

அதேபோன்று ஊர் மக்களின் நன்மையும், சிறப்பும் அவ்வூரினை ஆளும் அரசனின் செங்கோலாட்சியினால் அறியப்படும். இதனை

'ஊர்நலம் உள்ளானால் உள்ளப்படும்'

எனக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ முகமலர்ச்சியானது நட்புச் செய்தவருடாக நன்மையை வெளிப் படுத்தும்.

பெருமைவாய்ந்த சபையொன்றின் சிறப்பு அங்கே பயிலப்படும் அன்பான வார்த்தைகளால் அறியப்படும்.

வேகத்தின் மிகையானது அங்கே ஓட்டுபவனாலேயே பெருமையடைய முடியும். ஓட்டுபவன் எவ்வாறு ஓட்டுகின்றானோ அதற்கு ஏற்பவே ஓட்டம் கூடும்.

ஆனால் ஊர்மக்களின் சிறப்பு, அவர்களின் பெருமிதத்தை எவ்வாறு அறியலாம்.

அதனை அறிய வேண்டுமாயின் அவ்வூரை யார் ஆளுகின்றான் என்பதிலேயே தங்கியுள்ளது. அதாவது 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.' ஆளுகின்ற அரசனின் சிறப்பே மக்களின் பெருஞ் சிறப்பு எனக் காட்டப்பட்டுள்ளது. ஆளும் அரசனைப் பார்த்து மக்களின் நிலையை மதிப்பிட்டு விடலாம் என்பதாம்.

## வாக்குண்டாம் (மூதுரை)

**4. ஔவையார் "உருவத்தினாலே சிறியவர் சிறப்புடையவரே" என்பதை எவ்வெவ் எடுத்துக் காட்டுகள் மூலம் தனது வாக்குண்டான் என்ற பகுதியில் காட்டுகிறார்?**
**(உருவத்துக்கும் அறிவுக்கும் தொடர்பில்லை என்பதை ஔவை யார் எவ்வாறு எடுத்துக் காட்டுகிறார்?)**

◈ தாழம்பூவானது பெரிய இதழ்களைக் கொண்ட பூவாகும். ஆனால் மகிழம்பூவானது சிறிய இதழ்களைக் கொண்ட பூவாகும். ஆனால் பெரிய இதழ்களைக் கொண்ட தாழம்பூவைவிட சிறிய இதழ்களைக் கொண்ட மகிழம்பூ வாசனையில் இனிதாகிறது. (மிக்கது). இங்கே பெரிய இதழை விடச் சிறிய இதழ் கொண்ட பூ நன்றாகிவிடுகிறது. இதனை

'மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்'

மூதுரை

என விளக்குவார் ஔவையார்.

◈ கடலானது (சமுத்திரம்) பரந்துபட்டுப் பெரிதாக, நிறைந்த நீரைக் கொண்டுள்ளது. ஆனால் அதில் உள்ள நீர் எமது உடம்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள அழுக்கைக் கழுவுவதற்குக் கூட உதவுவதில்லை. ஆனால் அக்கடற்கரையின் பக்கத்திலே உள்ள மணற்பகுதியில் உள்ள சிறு குழியில் சுரக்கும் ஊற்று நீரானது குடிக்கத்தக்க நன்னீராக அமைந்து விடுகிறது.

'.......... கடல்பெரிது
மண்ணீருமாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகிவிடும்'

என்றார்.

எனவே இங்கு பெருங்கடல் நீரைவிட, மணற் சிறுகுழிச் சிற்றூறல் சிறந்த நீராகிவிடுவதனைக் காண்கிறோம்.

அதேபோன்று **"உடல் சிறியர் என்று மதியாது இருத்தல் வேண்டாம்"** என்பார் ஔவைப் பிராட்டியார்.

தாழம்பூ, கடல்நீர் எவ்வளவு பெரிதாக இருந்த போதும் முறையே சிறிய உருவுடைய மகிழம்பூ, சிறுமணற்குழியில் ஊறும் நீர் என்பவற்றின் சிறப்புக்கு அவை ஈடாகவில்லை. அதேபோன்று உருவத்தால் சிறியவர் என எண்ணி எவரையும் மதிக்காது விட்டுவிட வேண்டாம். அவ் உருவத்துக்கும் அறிவுக்கும் தொடர்பில்லை ஏனெனில் அவரே சிறப்புடையவராக, சிறந்தவராக விளங்குவார் என்பதை மறந்துவிடாதே என எடுத்துக் காட்டுகள் மூலம் **உருவத்தால் சிறியவரின் அறிவின் பெருமையை** எடுத்துக் காட்டுகின்றார்.

இதனையே வள்ளுவப் பெருமான் **"உருவு கண்டு எஃளாமை வேண்டும்"** என ஓரிடத்தில் கூறியிருப்பது ஈண்டு இதனுடன் நோக்கத்தக்கது.

## நல்வழி

**5. ஔவைப் பிராட்டியார் "நல்வழியில்" பசியின் கொடுமையால் பறந்து போவன எவையெனக் காட்டியுள்ளார்?**

ஒருவனுக்குத் தாங்கமுடியாத பசிக் கொடுமை ஏற்பட்டுவிட்டால் அவனிடம் இருந்த மானமும், உயர் குலப்பெருமை, கல்வி, வாய்மை, அறிவுடைமை, கொடைச்சிறப்பு, தவவலிமை, உயர்வு, தொழின் முயற்சி, தேன் பெருக்குப் போலத் தோன்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லினையுடைய மங்கையர்மேல் ஆசை வைத்தல் ஆகிய பத்தும் அவனைவிட்டுப் பறந்து ஓடி விலகிவிடும் எனக் காட்டுகின்றார்.

இங்கே ஒருவனுக்குக் கடும் பசிநோய் ஏற்பட்டுவிடின் அவன் எதனை இழந்தாயினும் பசிநோய் போக்க அவன் முன்னிற்பான். எனவே பசிக் கொடுமை பொல்லாதது என்பதை "**மானங் குலங் கல்வி....**" என்ற நல்வழிப்பாடல் மூலம் ஔவையார் எடுத்துக்காட்ட முற்படுகிறார். எனவே பசிக்கொடுமை பொல்லாது. அது ஏற்படின் அனைத்தயும் ஒருவன் இழக்க அது காரணமாகிவிடும் என்பார்.

## முதுமொழிவெண்பா

**6. "முதுமொழி வெண்பா" பாடலில் கேடு செய்வதன் பயன் எவ்விதம் அமையும் எனக் காட்டப்பட்டுள்ளது என விளக்குக.**

**(கேடு செய்யின் திரும்ப அக்கேடு அவனுக்கே ஆகிவிடுவதை "முதுமொழி வெண்பா" எவ்விதம் காட்டுகிறது?)**

மீன்போன்ற நீண்ட அழகிய கண்களை உடையவளே! யானையானது தனது தும்பிக்கையினால் மண்ணையள்ளித் தன்தலையிலே போட்டுத் தானே துன்பத்தைத் தேவையின்றி வரவழைத்துக் கொள்கிறது. இங்கே யானையின் செய்காரியம் தேவையற்றது. தரையில் கிடந்த மண்ணைத் தேவையற்றுத், தானே தன் தும்பிக்கையால் அள்ளித் தன் தலையில் போட்டுத் துன்பத்தை வரவழைத்து, ஏற்படுத்திக் கொள்கிறது.

" யானை தலைமேல் தன்கையால் மண்ணள்ளித்
தானே யெறிவதே போன்று "

என இச்செயல் பாடலில் காட்டப்படுள்ளது.

அதேபோன்று பிறருக்குக் கேடு (துன்பம்) செய்ய வேண்டும் என்பதற்காகக் குழிவெட்டி அவனை அதனுள் வீழ்த்தி, அவனுக்குத் துன்பத்தை ஏற்படுத்த வேண்டும் என ஒருவன் எண்ணுகின்றான். இங்கே துன்பத்தை விளைவிப்பவன் பிறருக்குத் துன்பத்தை ஏற்படுத்த எண்ணுகின்றான். ஆனால் அத்துன்பம் தனக்கே மீண்டும் வந்துவிடும் என்பதை உணர்வதில்லை. இவ்வாறு பிறரை வீழ்த்தவென அவனால் வெட்டப்படும் அதே குழி (திட்டத்தில்) யில் அவனே வீழ்ந்து துன்பப் படுகிறான். இதுவே நியதி என்பதை அறிந்திருந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தான் செய் குழிபின் தனக்கே யெனவறிந்தும்
ஏன்பிறர்க் காங்கேடு சூழ்கின்றான். "

என வினவுகின்றான்.

தான் பிறருக்குச் செய்யும் துன்பம் தனக்கே வினையாக வருவதை அறிந்தும் ஏன் எவ்விதம் துன்பம் விளைவிக்க எண்ணு கின்றான் என்பது விளங்கவில்லையே?என்கிறார்.

இங்கே யானை கீழே கிடந்த மண்ணைத் தேவையற்று அள்ளித் தன்தலையில் கொட்டித் துன்பப்படத் தேவையும் இல்லை அதேபோல் பிறருக்குத் தேவையற்று துன்பம் விளைவிக்க எண்ணுதல், முயலுதல் வேண்டாம் எனவும், அவ்வாறு எண்ணின் அத்துன்பக் குழியில் நீயே வீழ்ந்து வருந்துவாய், உன்னையே அது சூழும், என்பதைக் கவிஞர் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார். எனவே **'பிறருக்குத் துன்பம் விளைவிக்க எண்ணற்க'** என முதுமொழிவெண்பாவில் புலவர் பறை சாற்றுகிறார்.

## பழமொழிப் போதனை

7. **"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதைப் "பழமொழிப் போதனையில்" எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?**
**"ஒற்றுமையே பலம்" என்ற கூற்றினைப் பழமொழிப் போதனை எவ்வாறு வலியுறுத்திக் கூறுகிறது. விளக்குக.**

◈ வலிமையான அரண்களையும், வீரர்களையுமுடைய பேரரசர்கள் தம்முடைய செங்கோலாட்சியில் இருந்து தவறி கொடுங்கோலாட்சி செய்ய முற்படும்போது குடிமக்களின் வெறுப்புக்கு ஆளாகின்றனர். தாம் சேர்த்துவைத்த செல்வத்தை இழக்கின்றனர்.

இதனால் மக்களின் வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும் ஆளாகிப் பலம் குன்றி, மதிப்பிழந்து தம் பெருமையில் இருந்து இழிந்து வீணாகி விடுகின்றனர். இங்கே மக்கள் பலம் இன்றி அவன் இழிந்து விடுகிறான். மக்களுக்காக, மக்கள் நலம் காத்துச் செங்கோலாட்சி செய்ய வேண்டிய மன்னன் தனது அரசநீதியில் நின்றும் வழுவி, மக்களை நேசியாது, மதிக்காது, அவர்களுக்குத் துன்பம் விளைவித்தமையால் தனியனாகி விடுகிறான். மதிப்பிழக்கிறான். ஒற்றுமையாக அவனுடன் சேர்ந்திருப்பார் எவருமில்லை. இதனால் தன்நிலையில் இருந்து வீழ்ச்சியடைகின்றான். தாழ்வடைகின்றான்; முடிசாய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செறியு மரண்மிகு படைகளுடைய பெரியரசர்
களுஞ் சேர்ந்த தங்கள்
நெறி பிசகிற் பிரசைகளால் வெறுப்படைந்து
வலிகுன்றி நிலத்திற்றாழ்வார்... "

என அரசனின் தனிமையாகிய வீழ்ச்சியைக் காட்டுகின்றார்.

◈ ஆனால் சிறந்த ஆட்சிமூலம் மக்கள் துயர் துடைக்கும் ஆட்சியினால் பெரு மன்னரின் கீழ் ஆட்சியைச் செலுத்தும் குறுநில மன்னர்கள் தம் நாட்டில் '**மக்கள் நலமே தம் நலம்**' என ஆட்சி செய்வதால், அரச நீதியை வழுவாது கடைப்பிடிப்பதால் அவர்கள் அனைவரும் ஒற்றுமையின் பிறப்பிடமாக, ஒற்றுமையே பலமாக இருக்கின்றனர். இதனால் அவர்கள் சிறந்த மக்கள் பலம் கொண்டவர்களாக விளங்குவர் என்பது எடுத்துக் காட்டப்படுகிறது.

எனவே அனைவரும் ஒற்றுமையாக சேர்ந்து (குலவி) இருப்பதே பலத்தைக் கொடுக்கும் என்பதை வெற்றியூடாக நிலைத்திருப்பதன் வாயிலாகக் குறு நில மன்னன் செயலினூடாகக் காட்டி ஒற்றுமையின் பலம் காட்டப்படுகிறது.

"குறிய நில மன்னவரும் பிரசைகளொற்
றுமையாற் குலவி வாழ்வார். "

எனக் காட்டுகிறார்.

◈ அடம்பன் கொடி என்ற தாவரத்தின் தண்டானது தனியே எடுத்து முறித்தால் உடனே இலகுவாக முறிந்து விடும் தன்மை கொண்டது. இந்த அடம்பன் கொடி திரண்டு அதன் பல தண்டுகளுடன் சேர்ந்திருக்கும்போது அதற்கு வலிமை உண்டு. திரண்டிருக்கும் அத்தண்டுகளை ஒருங்கே இலகுவாக முறித்துவிட முடியாது. இங்கே திரண்ட (சேர்ந்த) தன்மையின் வலிமை, பலம் காட்டப்படுகிறது.

"சிறியவடம்பன் கொடியும் திரண்டிட்டால் மிடுக்
கனவே செப்புவாரே "

என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேபோன்று நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருப்பின் பலம் கொண்டவர்களாக விளங்கலாம். குறுநில மன்னன், மக்களிடம் கொண்ட அன்பால் ஆதரவால் அங்கே அனைவரும் ஒற்றுமையாகச் சேர்ந்து பலங்கொண்டு வீழ்ச்சியற்ற நீண்ட ஆட்சியை ஆளுகின்றான்.

ஆனால் வலிந்த பலம்கொண்ட பேரரசனின் கொடுங் கோலாட்சியினால் மக்கள் பலத்தை இழந்து, தனியனாக இறுதியில் செல்வத்தை இழந்து நாட்டை இழக்கின்றான். எனவே அடம்பன் கொடி திரண்டிருப்பதனால் அதற்குப்பலம் உண்டு. இதேபோல் மக்கள் பலம் கொண்ட மன்னராட்சி வலிமை கொண்டது. இங்கே "ஒற்றுமையின் பலம்" பேரரசனின் வீழ்ச்சியினால் தெளிவாகக் காட்டப்படுகிறது.

எனவே அரசன், குடிகளைக் காத்துக் கோலோச்சுபவனாக இருப்பின் மக்கள் பலம் அவனிடம் இருக்கும். அவ்வாட்சி சிறந்திருக் கும் எனப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07. நட்சத்திரக் குழந்தைகள்

1. **"நட்சத்திரக் குழந்தைகள்" என்ற சிறுகதையின் கருவாக பீ. எஸ். ராமையா எதனை முன்வைக்கின்றார் என விபரிக்குக.**

நாம் உண்மைபேச வேண்டும். ஒவ்வொரு தடவையும் நாம் உண்மைபேசுவதால் எம்மிடையே ஒவ்வொரு தடவையும் ஒளிமயமான பிரகாசம் எழுகின்றது. அதாவது '**உண்மையின் உயர்வைக்**' கதாசிரியர் தனது கதையின் கருவாகக் கொண்டுள்ளார். இக் கதையின் கருவை விளக்க நட்சத்திரங்கள் உதித்துப் பிரகாசிப்பதை கதை ஓட்டத்தில் குழந்தை ரோஹிணியின் வார்த்தைப் பிரவாகத்தால் சிறப்பித்துச் செல்கின்றார்.

2. **தந்தை என்ற பாத்திரத்தினூடாக கதாசிரியர் கூறவரும், கூறவிரும்பும் கருத்துக்களை முன்வைக்குக.**

◈ குழந்தைகளுடன் அன்புடனும், விருப்பத்துடனும் பழகவேண்டும்.

◈ குழந்தைகளின் மனத்தைக் கவரக்கூடியதாக இனிய வார்த்தைகளைப் பேசுதல் வேண்டும்.

◈ குழந்தைகள் கூறும் விடயங்களைக் கேட்டல், அதற்கு விடையளித்தல் வேண்டும்.

◈ இயற்கை நிகழ்ச்சிகள் ஊடாக **"உண்மையின் சிறப்பை"** எடுத்துக் காட்ட முனைதல் வேண்டும்.

◈ **இறைவனே உலகில் பெரியவர்** என்பதைக் குழந்தை உள்ளத்தில் நிலைநிறுத்துதல்; தெய்வம் எமக்குத் துணை நிற்கும் என்பதனைத் தெளியவைத்தல்.

◈ குழந்தையின் மனத்தைத் இன்புடன் திருப்திப்படுத்த முனைதல்.

◈ **எமது 'வாழ்க்கையில் எப்பொழுதும் உண்மை பேசுதல்' வேண்டும்.** அவ்வாறு உண்மையை நாம் பேசும் பொழுது எமது வாழ்வில் பிரகாசம் தோன்றும். உண்மையின் உயர்வு, விளைவு வெளிப்படும். என்பதை ஆதாரப்படுத்துதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ "**பொய்சொல்லக் கூடாது**" பேசினால் தீங்கு உண்டாகும் என்பதை உள்ளத்தில் நிலை நிறுத்துதல்.

◈ எப்பொழுதும் நல்லதையே எண்ணுதல், உண்மை பேசுதல், பொய் பேசுவதைத தவிர்த்தல் என்பனவற்றைக் கதையினூடாக வெளிப்படுத்த ஆசிரியர் முனைந்துள்ளார்.

**3. "நாம் சத்தியத்தையே பேசுவதால் நாம் ஒவ்வொரு தடவையும் ஓர் உண்மையைச் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது" இதனூடாக ஆசிரியர் உணர்த்த விரும்புவது என்ன?**

"**உண்மையின் உயர்வை**" நிலை நிறுத்தக் கதாசிரியர் பி. எஸ் ராமையா முன்னிற்கின்றார். நாம் உண்மையைப் பேசுவதனால் உயர்வடைகிறோம்; வெற்றி பெறுகிறோம். பிறர் புகழுக்கு ஆளாகிறோம். மனமகிழ்ச்சி அடைகின்றோம்.

எனவே நாம் எப்பொழுதும் உண்மையைப் பேசினால் உயர்வு கிடைக்கும். நாம் முன்னெடுக்கும் எக்காரியங்களிலும் பிரகாசம் மிகும் என்ற உயர்ந்த விழுமியக்கருத்தை ஒரு உண்மை கூறும்போது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது எனக் கதையூடாகக் குழந்தைக்குக் கூறிவிடுவதுபோன்று எம் அனைவருக்கும் தெளிய வைக்கிறார்.

எனவே நாம் எப்பொழுதும் உண்மை பேசினால் எமது வாழ்வில் ஒளி பிறக்கும் மென்மேலும் இப்பிரகாசம் வளர்ந்து உயர்ந்த வாழ்க்கையை அமைக்கும் என ஆசிரியர் காட்டுகின்றார். அதே வேளை ஏதோ சந்தர்ப்ப வசத்தால் பொய் கூறுவோமாயின் அது எம்மை வீழ்ச்சியடையச் செய்து, எம்மை உயர்வில் இருந்து தாழ்த்தி, புகழைக் கெடுத்து, எம்மைக் கீழ் நோக்கிச் செல்ல வைத்து விடும் என்பதை

"ஒரு விண்மீன் நிலை தவறிச் சுடர்வீசிக்
கொண்டு வானத்தினின்றும் கீழே வீழ்ந்து மறைந்தது"

என்ற கூற்றின் மூலம் தெளியவைக்கின்றார். எனவே நாம் எப்பொழுதும் சத்தியத்தைப் பின்பற்ற வேண்டும் என்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **குழந்தை ரோஹிணியின் மனத்தில் ஏற்பட்ட துக்கத்துக்குக் காரண மாகக் கதாசிரியர் எதனை முன்வைக்கின்றார்?**

**"ஒவ்வொரு தடவையும் உண்மை பேசும் போது ஒவ்வொரு நட்சத்திரம் பிறக்கிறது"** எனக் கூறினார் அப்பா.

அவ்வாறெனில் இவ்வளவு நட்சத்திரங்கள் வானத்தில் பிரகாசிப்பதற்குக் காரணம் குழந்தைகள் யாவரும் உண்மை பேசுகின்றனர் என்ற எண்ணம் ரோஹிணியின் உள்ளத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்பதாகும்.

நம்ப ஊரிலே அவ்வளவு பேரும் குழந்தைகள் எல்லாம் நிஜத்தையே பேசினா எவ்வளவு நட்சத்திரம் பிறக்கும்?

என எண்ணி மகிழ்வடையும் குழந்தை

நிறைய (இரண்டு கைகளையும் விரித்துக் காட்டி) இவ்வளவு நட்சத்திரங்கள் பிறக்கும்மோல்லியா?

"ஆமாம் அம்மா"

என குழந்தையூடாக அதற்கானபதிலையும் கூறி அப்பா அதனை ஏற்றுக் கொள்வதனையும் காட்டுவதன் மூலம் உண்மை பேசினால் ஒளிமயமான வாழ்வு கிடைக்கும் என்பதைக் குழந்தை மனத்தில் நிலை நிறுத்த இயற்கை நிகழ்வின் ஊடாக அதனைப் புலப்படுத்தக் கதாசிரியர் முனைகிறார்.

இவ்வளவு நம்பிக்கையில் இருக்கும் குழந்தை திடீரென

"அடுத்த வினாடி ஒரு விண்மீன் நிலைதவறிச்
சுடர்வீசிக் கொண்டு வானத்தினின்றும் கீழே
விழுந்து மறைந்தது."

எனக் காட்டும் ஆசிரியர் அந் நிகழ்வின் ஊடாகக் குழந்தையின் கண்ணில் கண்ணீர் பெருகுவதனையும், குழந்தையின் வேதனையையும் காட்டுகிறார்.

"அப்பா நம்ப ஊரில். யாரோ ஒருபொய்
சொல்லிட்டா அப்பா"

இதனூடே பொய் பேசுவதனால் தீங்கு ஏற்படும்; யாரோ ஒருவர் பொய் பேசியதனால்தான் நட்சத்திரம் கீழே விழுந்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குழந்தை பரிதவிக்கின்றது. துக்கமடைகிறது எனக் குழந்தை துக்கமடைவதற்கான காரணத்தைக் காட்டுவார்.

எனவே நாம் பொய் பேசக்கூடாது. பொய் பேசாதிருந்தால் நட்சத்திரம் கீழே விழாது; உண்மை பேசும் போது நட்சத்திரம் பிறக்கிறது, அது கீழே விழாது என்ற சிந்தனையின் பிரதிபலிப்பாக உண்மையின் உயர்வைக் காட்டுகிறார். உண்மை பேச வைக்க முன்னிற்கிறார்.

**5. பின்வரும் விடயங்களைக் கதாசிரியர் "நட்சத்திரக் குழந்தைகள்" என்ற கதையில் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதனைத் தெளிவு படுத்துக.**

**அ. களமும் கருவும்**

**ஆ. பாத்திரப்படைப்பு**

**இ. கதைப்போக்கு – ஆரம்பம், வளர்ச்சி, முடிவு**

**ஈ. மொழிநடை வர்ணனைச் சிறப்பு**

**உ. கதை வெளிப்படுத்தும் வாழ்வியற் சிந்தனைகள்**

அ. களமும் கருவும்

கதாசிரியர் பி. எஸ். ராமையா தனது கருவினை நகர்த்திச் செல்வதற்கான களமாக இயற்கை நிகழ்வினை உத்தியாகக் கொண்டுள்ளார். இயற்கையில் தானாகவே பிரகாசித்து ஒளிவிட்டெழும் வானத்து நட்சத்திரங்களை அதாவது இயற்கை நிகழ்வைக் களமாகக் கொண்டார். இக் களத்தில் நின்று தான் கருவாக எதனை எண்ணினாரோ அதனைக் காரணம் காட்டி தான் எண்ணயதை நிறைவேற்றினார். வெற்றிபெற்றார்.

**"உண்மையின் உயர்வு"** என்ற உயர் விழுமியக் கருத்தை வாசகர்களின் மனத்தில், இளம் சிறார்களின் மனத்தில் விதைத்து நிலை நிறுத்த அதனையே கருவாகக் கொண்டார்.

"நாம் சத்தியத்தைப் பேசுவதால். நாம் ஒவ்வொரு தடவையும் உண்மையைச் சொல்லும் பொழுது ஒவ்வொரு நட்சத்திரம் பிறக்கிறது"

எனக் கூறுமுகத்தால் ஒவ்வொரு முறையும் நாம் உண்மை பேசும் போது ஒளிமயம் எமது வாழ்வில் ஏற்படுகிறது. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து உண்மை பேசப்பேச வாழ்வே ஒளிமயமாகப் பிரகாசமாகி விடுகிறது என்ற விழுமியத்தைக் கருவாகக் கொண்டு **"உண்மை உயர்வுதரும்"** என்ற மகுட வாசகத்தையும் அதன் பயனையும், விளைவையும் ஒவ்வொரு மானிடரின் உள்ளத்திலும், குழந்தைகளின் உள்ளத்திலும் தூவி விடுகின்றார் கதாசிரியர். இக்கருவை நிலைநிறுத்த உண்மை பேசப்பேச நட்சத்திரம் பிறக்கிறது அதாவது ஒளி பிறக்கிறது இது எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வானத்தில் பிரகாசமான ஒளியை, இன்பத்தைத் தருவது போல எமது வாழ்விலும் இவ் உண்மைகள் ஒன்றித்து இன்பம் பெருகும் எனக் காட்டுவார்.

உண்மையில் இருந்து தவறின் நாம் வீழ்ச்சி காண்போம். பிரகாசத்தை இழப்போம் என்பதனை

"ஒருவிண்மீன் நிலைதவறிச் சுடர் வீசிக் கொண்டு
வானத்தில் நின்றும் கீழே விழுந்து
மறைந்தது"

எனக் கூறும் கதாசிரியர் குழந்தையூடாக

"அப்பா நம்ப ஊரிலே யாரோ ஒரு பொய் சொல்லிட்ட அப்பா"

எனக் கூறிப், பொய் பேசுவதால் ஏற்படும் வீழ்ச்சியையும் காட்டுவார் எனவே இயற்கை நிகழ்வின் ஊடாக உண்மை பேசு, அது உயர்வு தரும் என்ற உயர் விழுமியக் கருத்தைக் கருவாகக் கதாசிரியர் உள்ளத்தில் நிலை நிறுத்துகின்றார் எனலாம். இதனை இயற்கையின் வனப்பில் நட்சத்திரங்களின் செயற் களத்தில் நின்று நிறைவேற்றுவார்.

ஆ. பாத்திரப்படைப்பு

கதாசிரியர் தனது கருவை நகர்த்திச் செல்வதற்கு உகந்த மிகக் குறைந்த பாத்திரங்களை ஆக்கினார் எனலாம்.

❖ அப்பா சோமசுந்தரம், குழந்தை ரோஹிணி, குழந்தையின் அம்மா என்ற மூன்று பாத்திரங்கள் ஊடாக தனது கருவை நகர்த்துவார்.

அப்பா சோமசுந்தரத்தைக் குறிப்பிடும் போது கதாசிரியர், **குழந்தை உளவியலை** நன்கு தெரிந்தவராக ஆக்கியுள்ளமையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியமுடிகிறது. ஏனெனில் இவர் படித்தவர் என்பதையும் பி. ஏ பட்டம் பெற்றவர் என்பதையும் கூறும் கதாசிரியர் அப்பாவின் இனிய வார்த்தைகளும், குழந்தையின் வினாவுக்கு இன்முகத்துடன் இனிய பதில் வார்த்தைகளைப் பேசுவதையும், குழந்தையை அணுகும் விதத்தையும் கொண்டு அறிய முடிகிறது. அப்பா மூலமாக "**உண்மை பேசுதல் உயர்வைத் தரும்**" என்பதனை இலாவகமாகக் குழந்தையின் மனத்தில் பதிய வைப்பதனையும், வார்த்தைப் பிரயோகங்களையும் கொண்டு சிறப்பாக அமைத்துள்ளார்.

◈ குழந்தை ரோஹிணி என்ற பாத்திரத்தின் ஊடாகச் '**சத்தியத்தைப் பேணுவோம்**' கடைப்பிடிப்போம் என்ற கருவை நிலைநிறுத்தக் கதாசிரியர் முன்நிற்பதனைக் காணலாம். இதற்காகக் குழந்தையின் உள்ளத்தில் வாழ்க்கையின் இயற்கை நிகழ்வையும், நட்சத்திரங்கள் தோன்றுவதையும் வீழ்வதையும் கதையின் கருவுக்குச் சாதகமாகக் கொள்ளலைக் காணலாம்.

இங்கே குழந்தையின் பெருமையைக்கூறும்போது,

**"குழந்தை ரோஹிணிக்கு ஆறு வயசுதான் ஆகிறது. ஆனாலும் அவளுடைய வார்த்தைகள் யாவும் மணிமணியாக இருக்கும். முத்தும் பவளமும் கோத்த ஹாரம்போல இருக்கும் அவளது பேச்சு. அவளுடைய கேள்விகள் எல்லாம் தெய்வ உலகத்துக் கேள்விகள். அவளுடைய இளம் நெஞ்சில் உதிப்பவை சுவர்க்க உலகத்து எண்ணங்கள்."**

எனக் கூறுவார்.

இங்கே தனது கருவைக் கதையோட்டத்தை நகர்த்திச் செல்லக் கூடிய நுட்பமான அறிவு கொண்ட குழந்தையாக, விழுமியங்களைப் பற்றிக் கொள்ளும் தூய உள்ளம் படைத்த குழந்தைப் பாத்திரமாகக் கொண்டு, தான் எடுத்துக் கொண்ட, தனது எண்ணத்தை வாசகர்கள் உள்ளத்தில் பதியவைக்க. கடைப்பிடிக்க வைத்த குழந்தை ரோஹிணியின் செயலில் பேச்சின் ஊடாகத் தெளியவைக்கும் ஆசிரியரின் பாத்திரப்படைப்பு வியக்கத்தக்கது எனலாம். குழந்தையே ஏற்றுக்கொண்ட, பற்றிய உண்மையின் பேசுவதன் உயர்வைப் பிரகாசத்தை ஏனைய இளம் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் நாசூக்காகப் புரியவைத்து இதயத்தில் உண்மையை நிலை நிறுத்துவதில் கதாசிரியரின், குழந்தை ரோஹிணியின் பாத்திரம் போற்றத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ அம்மா என்ற பாத்திரத்தைக் கதையை வாசிக்கும் வாசகர்களை அப்பா, குழந்தை என்ற பாத்திரங்களில் இருந்து விலக்கிச் சற்றுநேரம் ஆறுதலுடன் வாழ்வியல் அம்சத்துடனும் அம்மாவின் அன்பையும், செயலையும் காட்டுவதாகக் கூறும் கதாசிரியர் மீண்டும் குழந்தையையும் அப்பாவையும் உரையாடலில் ஈடுபடுத்துவார். இங்கே அம்மா என்ற பாத்திரம் குழந்தையின் அன்புக்குப் பாத்திரமாக, குழந்தை ஆறுதலடையும் பாத்திரமாக எடுத்துக் காட்டுகிறார். ஆனால் கதையின் பாக்கினை வாசிக்கும் வாசகர்களுக்கு அப்பா, குழந்தை என்று தொடரும் பேச்சின் சலிப்புக்கு இடம் கொடுக்காது கதையின் போக்கைத் திருப்பம் செய்யும் பாத்திரமாக அம்மாவை இயங்கவைக்கின்ற கதாசிரியரின் போக்குப் பாராட்டத்தக்கது எனலாம்.

இவ்வாறு குறைந்த கதாபாத்திரங்களைக் கொண்டு முக்கியமாக அப்பா, குழந்தை என்ற கதாபாத்திரங்களின் பேச்சுக்கள் ஊடாக **"உண்மை பேசு உயர்வு அடைவாய்" "பொய் பேசினால் தாழ்வே கிடைக்கும்"** என்ற விழுமியக்கருத்துக்களை பதியவைப்பதில் கதாசிரியரின் பாத்திரங்கள் வெற்றிபெற்றன எனக் கூறிக் கொள்ளலாம்.

இ. கதைப்போக்கு – ஆரம்பம், வளர்ச்சி – முடிவு

◈ "அப்பா, நட்சத்திரங்களுக்குக் கூட அப்பா உண்டோ?"

என்று மிகவும் சுவார்சயமாகக் கதையை ஆரம்பிக்கின்றார். வாசகர்கள் இங்கே என்ன கூறப்போகிறார்? என்ற வினாவுக்கு, கதையை வாசிக்கத் தூண்டும் விதத்தில் ஆரம்பத்தில் குழந்தை ரோஹிணியும் அப்பா சோமசுந்தரமும் பேசுவதில் இன்ப உரையாடல் வார்த்தைகளைக் கதையின் ஆரம்பத்தில் காட்டுவார். குழந்தைகளுடன் எவ்விதம் பழகவேண்டும், குழந்தையின் ஒன்றுமறியாத வெள்ளை உள்ளம், பெரியவனின் இன்பம் நிறைந்த இனிய வார்த்தைகள் என்பன ஊடாக வாசகர்களை **ஆரம்பத்தில்** கதையினுள் மூழ்க வைத்துவிடுவதில் பி.எஸ்.ராமையா வெற்றி பெறுகிறார்.

இவ்வாறு குழந்தை, அப்பாவின் பேச்சுக்கள் ஊடாக,

◈ "நாம் சத்தியத்தையே பேசுவதால், நாம் ஒவ்வொரு தடவையும் ஒரு உண்மையைச் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது"

எனத் தான் எண்ணிக் கொண்ட விடயத்தை, கூறவந்த கருத்தை (கருவை) அப்பாவின் ஊடாக விதைத்துவிடுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்து கதையின் **வளர்ச்சியாகத்** தொடர்ந்து அமைவதனைக் காணலாம்.

குழந்தையின் பேச்சுக்கள் எண்ணத்தின் ஊடாக

"ஆஹா! என்ன அழகு! அங்கே அந்த வானவெளியிலே...."

எனக் காட்டும் கதாசிரியர் உலகில் நிகழும் இயற்கை நிகழ்வுகளைக் காட்டி அந்நிகழ்வுகளின் ஊடாக குழந்தையின் எண்ணத்தை ஓடவைக்கின்றார்.

".... அந்த இரண்டு வெண்மையான மேகக் கூட்டங்களின் இடையிலுள்ள நீலப்பட்டாடையிலே. திடீரென்று ஒரு சுடர் தோன்று கிறது! அடேய்பா! அது எவ்வளவு துரிதமாகத் தோன்றிவிட்டது...."

ஒரு கணத்தில் ஆயிரத்தில் ஒருபங்கு நேரத்தில் அந்த சுடர்ப் பொறி பிறந்துவிட்டது.

எனக் கூறும் குழந்தை

"அம்மா! ஸ்வாமிக்கு ஒரு நட்சத்திரக் குழந்தை பிறந்துவிட்டது...."

எனக் காட்டுவதன் ஊடாக குழந்தையின் உள்ளத்தில் மகிழ்வைக் காட்டி தனது கருத்தை **வளர்த்துச்** செல்வார். கதைப் போக்கில் அம்மா என்ற பாத்திரத்தின் ஊடாகத் **தாய்மையின்** பெருமையையும், தாய் குழந்தையின்மேல் காட்டும் பாசத்தையும் கூறிவைக்கும் ஆசிரியர், கதையில் ஒரு சிறுதிருப்பத்தை வளர்ச்சிப் போக்கில் இடம் பெறச் செய்வார். மீண்டும் கருவினை நிலைநிறுத்த மீண்டும் அப்பாவையையும் குழந்தையையும் பேச்சினை ஆரம்பிப் பதை, பேசுவதைக் காட்டுவார்.

"ரோஹிணிக்குஞ்சு! என்னம்மா பார்க்கிறாய்?
உள்ளே போகலாம் வா?"
"இரு அப்பா வானம் எவ்வளவு அழகாயிருக்கு!
அவ்வளவு குழந்தைகளுடைய சுவாமிக்கு எவ்வளவு சந்தோஷம் இருக்கும் அப்பா"

என்ற அப்பா, குழந்தை உரையாடல் மூலமாகக் கதையின் **'வளர்ச்சியின் இறுதிக் கட்டத்தைக்'** கதாசிரியர் அடைவதனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். வானத்தில் எத்தனையோ நட்சத்திரங்கள் இருக்கிறது. அப்படியெனில் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு நட்சத்திரம் பிறந்திருக்கும். அப்படியெனில் எவ்வளவு அப்பாக்கள். இவர்கள் அனைவருக்கும் சந்தோஷம் அல்லவா? எனக் குழந்தை மகிழ்வடைவதாக ஆசிரியர் காட்டிச் செல்கிறார்.

◈ கதையின் **இறுதி**யோட்டத்தில் **"அடுத்த வினாடி ஒரு விண்மீன் நிலை தவறிச் சுடர்வீசிக் கொண்டு வானத்தினின்றும் கீழே விழுந்து மறைந்தது. அதன் பிரயாணம் சில வினாடிகளே..."**

எனக் காட்டுவதன் மூலம் **இறுதியில்** கதையின் போக்கில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துவார்.

இங்கே

**"…. இந்த சின்னஞ்சிறு ஹிருதயத்தில் விவரிக்க இயலாத சுருக்கென்று தைக்கும் ஒரு வேதனை காணுகிறது; குழந்தை விம்மி விம்மி அழத்தொடங்கினாள்...."**

எனக் காட்டும் கதாசிரியர் தன் நிலையில் நின்று இழிந்த நட்சத்திரத்தின் ஊடாக இலாவகமாகப் பொய் பேசுதலின் தாழ்வை வெளிப்படுத்துவார்.

"அப்பா நம்ப ஊரிலே. யாரோ ஒரு பொய் சொல்லிட்டா அப்பா"

விக்கல்கள் விம்மல்கள், ஹீங்காரத்துடன் அழுகை எனக் காட்டுவதன் மூலம்.

**"பொய் சொல்லக்கூடாது, பொய் பேசினால் துன்பம் விளையும்"** என்பதை நட்சத்திரத்தின் வீழ்ச்சியின் ஊடாக **இறுதியில்** நிலைநிறுத்துகின்றார். குழந்தையின் கள்ளமற்ற வெள்ளை உள் ளத்தை; நாம் எதனைக் கூறுகின்றோமோ அதனை ஏற்றுக்கொள்ளும் பாங்கினைக் குழந்தை உள்ளத்தின் தெளிவை, பெரியவர்கள் கூறும் எதனையும் குழந்தை ஏற்றுக்கொள்கிறது என்பதை ஆசிரியர் காட்டுகிறார்.

◈ பொய் பேசுவதனால் ஏற்படும் துன்பம் அளவிடற்கரியது என்பதனைக் குழந்தைகளின் வார்த்தைகளால், குழந்தைபடும் துன்பத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாசிரியர் **இறுதியில்** வெளிப்படுத்துகிறார். எனவே எதனைத் தனது கருவாகக் கதாசிரியர் கொண்டாரோ அதனைத் தனது கதையின் ஆரம்பத்தில் மட்டுமல்ல கதைவளர்ச்சியிலும் கதை ஓட்டத்திலும், முடிவிலும் பாத்திரங்கள் வாயிலாக நிலைநிறுத்திய கதாசிரியர் பி. எஸ். ராமையா இறுதியில் **'யாரோ ஒரு பொய்.... சொல்லி விட்டான்னு தானே....'** எனக் கூறி

"அர்த்தம்? சுவாமியினுடைய....... மனசு இப்போ... எப்படி இருக்கும் அப்பா? ....."

எனக் குழந்தை கூறுவதன் மூலமாக உண்மைபேசினால் உயர்வும், நன்மையும் கிடைக்கும் என்பதை உள்ளாந்தமாக வெளிப்படுத்தும் ஆசிரியர் குழந்தையின் துக்கத்தின் ஊடாக பொய் பேசுவதன் இழிவையும் காட்டி கதையில் வெற்றி பெற்று விடுகிறார்.

ஈ. மொழிநடையும் வர்ணனைச் சிறப்பும்

சிறுகதை எழுத்தாளர் பி. எஸ்.ராமையா அவர்கள் தனக்கே உரித்தான மொழி நடையை இடத்திற்கும், பாத்திரத்துக்கும் ஏற்ப இயைபு பொருந்த **"நட்சத்திரக் குழந்தைகள்"** என்ற சிறுகதையில் அமைந்த பெருமைக்குரிய:வராவார்.

◈ வயதாலும் அனுபவத்தாலும் முதிர்ச்சி பெற்ற எழுத்தாளர் ராமையா, அப்பா என்ற பாத்திரத்தையும் அவரின் பேச்சுக்களையும் தேவைக் கேற்ப அமைத்துக் கொண்டவர்.

"அப்பா!"
"என்ன அம்மா"
"ஆமாம் அம்மா"
"ரோஹிணிக் குஞ்சு! என்னம்மா பார்க்கிறாய்?"
"உள்ளே போகலாம் வா"
"என்னடா கண்ணே! என்ராஜாத்தி அல்லவா!"
"என் ரோஹிணிக்குஞ்சை யார் என்ன செய்தார்கள்?"

இவ்வாறான அன்பான, அமைதியான வார்த்தைகளால் குழந்தையுள்ளத்தைத் தொட்டவர் குழந்தைகளிடம் எவ்விதம் பழக வேண்டும் பேசவேண்டும் என்பதை எழுத்தாளர் நன்கு அறிந்தவர் என்பதை அவரது குழந்தைகளுக்கு உரித்தான பேச்சுமொழியில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுபட அன்புசொரிய பேசுவது போல் குழந்தை பாத்திரம் படைத்த, பேசவைத்த கதாசிரியரின் மொழிநடை பாராட்டத்தக்கது.

"அப்பா. எனக்குத் தெரிஞ்சுபோச்சு"

"என்னடா கண்ணே. தெரிஞ்சு போச்சு?"

"ஏன் அம்மாஅப்படித் தோன்றுகிறது உனக்கு"

இவ்வாறாக குழந்தையின் சின்னச் சின்ன வினாக்களுக்குச் சின்னப் பேச்சில் பதிலளித்த எழுத்தாளர் பிள்ளைகளுக்கே உரித்தான மொழிநடையை உபயோகித்த பெருமைக்குரியவராவர். குழந்தை உளவியலை நன்கறிந்தவராவர்.

◈ குழந்தை ரோஹிணி என்ற பாத்திரத்தினூடாக ரோஹிணி முன்னின்று பேசுவதுபோல குழந்தைப் பேச்சுப் பேசும்படியாக ஆக்கி யுள்ளார். தனது சிறுகதையின் வளர்ச்சிப் போக்கில் குழந்தையின் ஒவ்வொரு உரையாடலுக்கும் குழந்தைக்கே உரித்தான மொழி நடையைக் கையாண்டுள்ளார். ஒரு பெரியவர் குழந்தை வடிவில் நின்று பேசுவது என்பது சாதாரண விடயமல்ல; வியக்கத்தக்க விடயம் என்பதை நாம் தெரிந்திருத்தல் வேண்டும். அதுமட்டுமின்றிக் குழந்தைபோல் பேசுவதுமட்டுமின்றிக் குழந்தைக்கே உரித்தான மொழி நடையைச் செல்லப் பேச்சைப் பேச வைத்தமை உண்மையிலேயே பி. எஸ். ராமையா '***குழந்தை உளவியலை***' நன்கு அறிந்தவர் என்பதற்குத் தக்க சான்றாக அமைகிறது.

"அவர் யாரப்பா?"

"ஸ்வாமியா? அப்பா அவர் கூட உன்னைப் போலத்தானே இருப்பார்?"

"ஸ்வாமிகூட உன்னைப்போல நல்லவர் தானே"

"அப்பா! நட்சத்திரம் எப்போ பிறக்கும்"

"எப்படியப்பா அது பிறக்கிறது"

◈ இவ்வாறான சின்னச்சின்ன வினாக்கள் குழந்தைமொழி இயற்றுதல் சாதாரணவிடயம் அன்று. போற்றத்தக்க விடயம் அனுபவம் வாய்ந்த வயது முதிர்ந்தவர் குழந்தையாகப் பேசுதல் குழந்தை மொழி உரையாடுதல் என்பவற்றை குழந்தை ரோஹிணிப் பாத்திரத்திற்கு இயைபுபட ஆக்கியமை எழுத்தாளனின் பாத்திரத் துக்கு ஏற்ப கதை ஆக்கும் புலமையின் வல்லமையை எடுத்துக்காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வா. கண்ணே! உள்ளே போகலாம். இருட்டிப் போய்விட்டது"
"இரு சும்மா. போகலாம் வானத்தைப்பாரு எவ்வளவு அழகாயிருக்கு..."
"வானம் இப்போ எதைப்போல இருக்கு சொல்லட்டுமா?"
"உன் முகத்தைப்போல நீ என்னை முத்தமிடுகிறாயே. அப்போ உன்முகம்
இந்த வானத்தைப் போலேயே இருக்கு"

இவ்வாறு தாய்க்குப் பதிலளிக்கும், குழந்தை ரோஹிணியின் பேச்சை உயிர்ப்புடன், குழந்தைக்கே உரித்தான பேச்சுமொழியுடன் பேசவைத்தவர் எழுத்தாளர் பி. எஸ். ராமையா எனில் மிகையாகாது.

◈ அம்மா என்ற பாத்திரத்தைக் கதைப் போக்கின் இடையே செருகி கதையின் தொடர்ச்சியில் சிறு ஆறுதலை வாசகர்களுக்குக் கொடுக்க வேறு பக்கம் ஒருமுறை கதையைத் திருப்பி, அப்பாவின தும், குழந்தையினதும் உரையாடல் நிகழ்ச்சியில் இருந்து, அம்மா வினதும் குழந்தையினதும் பேச்சுக்கு வரவழைத்து மீண்டும் அப்பா, குழந்தை பேச்சு என்ற இடத்திற்குத் தனக்கே உரித்தான செட்டான மொழிநடையைப் பாத்திரத்திற்கு ஏற்ப எழுத்தாளர் ஆக்கியுள்ளார் அம்மா பேசுகிறார்.

"வா கண்ணே! உள்ளே போகலாம் இருட்டிப் போய்விட்டது"
"ஆமாம் அழகாய்த்தான் இருக்கிறது. இருட்டிப் போய்விட்டதே. இனிமேல் இப்படி வாசலில் நிற்கக்கூடாது வா அம்மா உள்ளே"
"உள்ளே வாடா குஞ்சு"

◈ இவ்வாறு தாய்க்கே உரித்தான பாணியில் கதாசிரியர் அதற்கான மொழிநடையைச் சிறுசிறு சொற்கள் ஊடாகப் பாவித்து குழந்தை யுடன் பேசும் கலையைச் சிறுகதையில் புகுத்தி வாசகர்களை கதையைத் தொடர்ந்துபடிக்க ஆர்வத்தைத் தூண்டியவர். கதையைப் பேச உயிர்ப்புடன் பாத்திரம் படைத்தவர், பாத்திரத்திற்கு ஏற்ப இடத்துக்கிடம் மொழி நடையைப் பிரயோகித்த பெருமைக்கும், பாராட்டுக்கும் உரியவர் பி. எஸ். ராமையா எனலாம்.

◈ கதை வளர்ச்சியினைக் கதைப்போக்கில் வர்ணனைச் சிறப்புடன் கொண்டுசென்று வாசகர்களைக் கவரும் தனியாற்றல் கொண்டவர் எழுத்தாளர் பி. எஸ். ராமையா அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை ரோஹிணியின் எண்ண ஆற்றலை வெளிப் படுத்தும்போது

"...பட்டணத்தில் இருக்கும் போது குழந்தை இயந்திர தேவியின் குழந்தைகளைப் பற்றிப் புதிய புதிய கேள்விகளைக் கேட்பாள். கிராமத்துக்கு வந்தவுடன் அவளுடைய கேள்விகள் அதியாச்சரியகரமாக மாறிவிடும்" எனக் கூறும் எழுத்தாளர்.

".... அவளுடைய எண்ணங்கள் இயற்கை அன்னையுடன் இறக்கை விரித்துப் பறப்பவையாக இருக்கும்....."

என வர்ணனை பொருந்த குழந்தையின் எண்ண அலைகளின் பெருக்கத்தை வாசகர்களுக்குத் தெரியவைக்கிறார்.

◈ இவர் வாசகர்களைக் கவரும் பாணியில் வர்ணனைச் சிறப்புப் பொருந்த, சிறுசிறு செட்டான வாக்கியங்கள் ஊடாகக் கதையை வளர்த்துச் செல்லும் ஆற்றல் வாய்ந்தவர்.

".... மாலை நேரம் வந்தது. குழந்தை ரோஹிணி அப்பொழுதுதான் குளித்துவிட்டு அம்மா செய்துவிட்ட அலங்காரங்களுடன் வாசலில் வந்தாள்."

"அவர்கள் வீட்டு வாசலில் இரண்டு பக்கங்களிலும் இரண்டு வாதாமரங்கள் உண்டு. அவற்றின் நடுவில் சென்று நின்றாள். சூரியன் அஸ்தமிக்கும் சமயம். வானவீதியில் வெளியும் ஒளியும் மோனத்திலே கலந்து நகை செய்து கொண்டிருந்தன...."

என இயற்கை அழகின் சிறப்பைக் கதையூடாக வாசகர்களைக் கவரும் பாணியில் வர்ணனைச் சிறப்புடன் எழுதும் சொல்லும் ஆற்றல் படைத்தவர் எழுத்தாளர் என்பதை அறியலாம்.

◈ "ஆஹா! என்ன அழகு..."

ரோஹிணியின் முகம் மலர்ந்தது; அங்கு ஒரு புதிய ஒளி தோன்றியது. அது வானவெளியில் தோன்றிய திவ்ய ஒளியின் பிரதியல்ல குழந்தையின் ஹ்ருதய சந்திரனிலிருந்து வெளிப்பட்டு முகத்தில் வீசும் நிலவு. அவளுடைய கண்கள் சுடர் எரியும் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன்களெனப் பிரகாசித்தன. காலையிலே, அதிகாலையில் சூரியோதய காலத்தில் தாமரையொன்று மலர்வதைக் கண்டிருக்கிறீர்களா? கொஞ்சமாகத் திறந்து அது தனது காதலனைக் கண்டு இள நகையாடுவதைப் பார்த்ததுண்டா? அந்தத் தாமரையைப் போல மலர்ந்து வியப்பின் சந்தோஷத்தின் இளநகை தவழ்ந்தாட ரோஹிணி யின் சிறிய அழகிய வாய் சிறிது திறந்திருந்தது.

இவ்வாறு தனக்கே உரித்தான **வர்ணனைச் சிறப்புடன்** உரிய மொழிநடையை புகுத்திக் கதைசொல்லும் ஆசிரியர்.

◈ "சந்தியாதேவி நாணத்தினால் தலைகுனிந்து கீழ்திசை அடிவானத்தி னின்றும் மெல்ல அடிவைத்து வான வீதியில் வந்து கொண்டிருக் கிறாள். அவளுடைய வருகை ஓர் இனிய சங்கீதத்தைப் போன்றிருக் கிறது...."

அவளுடைய செளந்தர்யம் இனிமையானது. உள்ளம் கவர்வது அது நாணத்தால் ஆக்கப்பட்டது. நிமிர்ந்து பார்க்காது ஆனாலும் மகிழ்ச்சி ஊட்டுவது. அவளுடைய நிறம் ஸ்ப்த வர்ணங் களில் ஒன்றல்ல. அவற்றிற்குப் புறம்பானது அதன் பெயர் மாலை ஆதலால் மயக்கம் தருவது ....

இவ்வாறு அடுக்கடுக்காகச் சொற்களை வாரிக்கொட்டி, தனக்கே உரித்தான **வர்ணனைச் சிறப்பு சொற்பிரயோகச்சிறப்பு** கதை கூறும் வகை மொழிநடை, என்பன பொருந்த வாசகர்களைக் கவரும் ஆசிரியரின் தனித்தன்மை அவரின் கைவந்த கதை சொல்லும் கலை எனலாம்.

◈ "வானவெளியில் இருள் பரவுகிறது. இருளும் அழகாகத் தான் இருக்கிறது. அதிலும் இனிமை இருக்கிறது. மாதாவின் ஸ்நேகத்தைப் போன்ற இனிமை ஒன்றன் பின் ஒன்றாக நட்சத்திரங்கள் பிறந்து கொண்டே இருக்கின்றன..."

என்றும்

"குழந்தையின் கண்களில் கண்ணீர் பெருகிறது.
இரண்டு கண்களினின்றும் இரண்டு நீர்
வடிவான முத்துக்கள் உதிர்ந்தன..."

"இந்தச் சின்னஞ்சிறு ஹிருதயத்தில் விவரிக்க இயலாத சுருக்கென்று தைக்கும் ஒரு வேதனை காணுகிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குழந்தை விம்மி. விம்மி அழத்தொடங்கினாள் அழுகையி னிடையில் "அப்பா" என்று இரும்பை உருக்கும் குரலில் கூப்பிட்டுக் கொண்டே வீட்டினுள் சென்றாள்"

இவ்வாறு நெஞ்சையள்ளும் **மொழிநடை, வர்ணனைச் சிறப்பு, சொற்செட்டு** என்பன பொருந்த மொழிவளம் மிக்க வார்த்தைகளை அடுக்கடுக்காகக் கொட்டி வாசகர்களைக் ஈர்க்கும் வகையில் கதை கூறுவது எழுத்தாளர் பி. எஸ். ராமையாவுக்குக் கைவந்த கலையும், ஆற்றலும் எனக் கூறிக் கொள்ளல் சாலப் பொருந்தும் எனலாம்.

2. கதை வெளிப்படுத்தும் வாழ்வியற் சிந்தனைகள்

சிறப்பான சிறுகதை எழுத்தாளர் ரா. பி. ராமையா அவர்கள் தனது நட்சத்திரக் குழந்தைகள் என்ற சிறுகதையின் ஊடாக வாழ்வியற் சிந்தனைகளை விதைத்துள்ளார்.

◈ "அப்பா. நட்சத்திரங்களுக்குக் கூட அப்பா உண்டா?"
"உண்டு அம்மா!"
"அவர் யார் அப்பா?"
"ஸ்வாமி"
"சுவாமியின் அழகைப் போல வேறு யாருக்கும் அழகு இல்லை"
"சுவாமியும் உன்னைப் போல நல்லவர் தானே"
"அவர் ரொம்ப நல்லவர். நம்மையெல்லாம் விடப் பெரியவர்"

இவ்வாறு வாழ்வியல் சிந்தனைகளில் ஒன்றான **கடவுளை நம்பு; உலகில் உயர்ந்தவர் அவரே! கடவுளை மதி! வணங்கு** என்ற உயர் கருத்துக்கள் பிள்ளையின் உள்ளத்தில் பதிவைக்கப்பட்டு, வளர்த்தெடுக்கப்படுவது வாழ்க்கையின் வாழ்வியற் சிந்தனைகளாக மிளிர்வதைக் காட்டி நிற்கின்றது.

◈ "நாம் சத்தியத்தையே பேசுவதால். நாம் ஒவ்வொரு தடவையும் ஒரு உண்மையைச் சொல்லும் பொழுது ஒரு நட்சத்திரம் பிறக்கிறது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்ப ஊரிலே அவ்வளவு பேரும் குழந்தைகள் எல்லாம் நிஜத்தையே பேசினா எவ்வளவு நட்சத்திரம் பிறக்கும்?..."

இவ்வாறு சத்தியத்தின் உண்மையையும் உண்மையே பேச வேண்டும் என்பதையும் குழந்தைகளுக்குக் கூறிவைக்கும் எழுத்தாளர் பொய் பேசுவதனால் ஏற்படும் துன்பத்தையும் எடுத்துக் காட்ட விளைகிறார்.

◈ குழந்தைகளுடன் எவ்வாறு பேச வேண்டும், குழந்தை உள்ளத்தின் வெட்டவெளியான வெள்ளை உள்ளத்தையும் குழந்தை களுடன் அன்புபொதிந்த வார்த்தைகளைப் பேசவேண்டும் என்ற வாழ்வியற் சிந்தனைகளை கதையூடாக வெளிப்படுத்துகிறார். ரா. பி. ராமையா அவர்கள்.

குழந்தைகளுடன் எவ்விதம் பேசுதல் வேண்டும் என்பதைத் தனது கதையூடாக வெளிப்படுத்தும் ஆசிரியர் குழந்தை, பெற்றோருடன் எவ்விதம் அன்புசொரிய, பௌத்திரமாகப் பேசுதல் வேண்டும் என்ற எண்ணத்தையும் வெளிப்படுத்தும் ஒரு சிந்தனை யாகக் குழந்தையின் பேச்சினையும் ஆசிரியர் வெளிப்படுத்தத் தவறவில்லை.

குழந்தைகளின் அடுக்கடுக்கான கேள்விகளுக்குச் சலிக்காது பதிலளிக்கும் அப்பாவை முன்வைத்து, எவ்வாறு குழந்தைகளுடன் உறவாட வேண்டும் என்பதைத் தனது இனிய வார்த்தைப் பிரயோகங்கள் ஊடாகக் காட்டி எமது வாழ்வியல் சிந்தனைகள் இனிமையும், தூயதும் கொண்டதாக அமைய வேண்டும்; பேச்சுக்கள் மேதாவித்தனமும், ஆர்ப்பரிப்பும் அற்றதாக இருக்க வேண்டும் என்பதனை ஆசிரியர் எடுத்துக்காட்டுவார். இது எமது வாழ்வியல் அம்சங்களில் முக்கிய இடம் வகிப்பது பிறருடன் எப்படித் தயவுடன் பேசுவது பதில் அளிப்பது என்ற தளத்தை இறுக்கமாக மனத்தில் அவர் பதிய வைப்பதைக் காணலாம்.

◈ "அவள் தனது முதிரா உள்ளத்தினுள்ளே ஸ்வாமியைப் பற்றியும். அவருடைய நட்சத்திரக் குழந்தைகளின் அழகைப் பற்றியும். மனிதர் கள் சத்தியத்தையே பேசுவதைப் பற்றியும் கற்னை செய்து காண முயன்று கொண்டே வாசலுக்குச் சென்றாள்.."

இவ்வாறு கடவுள் சிந்தனை, அவரின் உயர் படைப்பு, என்பன பற்றிய வாழ்வியற் சிந்தனைகளை பாத்திரங்கள் ஊடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியத்தரும் ஆசிரியர் **"சத்தியத்தையே பேசவேண்டும்"** அவ்வாறு பேசுவதால் கிடைக்கும் நன்மைகளையும் இளம் பருவத்தில் குழந்தையின் உள்ளத்தில் விதைத்து வாழ்வியலைச் சீரியதாக மாற்ற முனையும் அதேவேளையில் கதை சொல்லும் பாங்கின் ஊடாக வாசகர்களுக்கும் உயர் விழுமியக் கருத்துக்களைக் கூறி அவற்றைத் தமது வாழ்வியலில் கைக்கொள்ளக் கதை எழுதும் பயிலுகையில் கைதேர்ந்தவர் ரா. பி. ராமையா எனக் கூறிக் கொள்வதிலும், வாழ்வியற் சிந்தனைகளைக் கதையூடாகக் கூற முடிந்தவர், கூறிவைத்தவர் கதாசிரியர் எனக் கூறுதல் பொருந்தும் எனலாம்.

◈ அப்பா அம்மா உறவு, குழந்தை பெற்றோர் உறவு, பாசம் என்பவற்றைக் கதையூடாக வெளிப்படுத்தும் ஆசிரியர் பாசங்கள், பரிவுகள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை கதையூடாகவும்;

"வானம் இப்போ எதைப்போல இருக்கு சொல்லட்டுமா?"
"சொல்லு"
"உன் முகத்தைப்போல நீ என்னை முத்தமிடுகிறாயே அப்போ உன்முகம் இந்த வானத்தைப் போலேயே இருக்கு"

இவ் வார்த்தைகள் ஊடே குழந்தையின் வெள்ளை உள்ளத்தையும், அழகை ரசிக்கும் ஆவலையும் எடுத்துக்காட்டுகிறார்.

"குழந்தையின் கண்களில் கண்ணீர் பெருகியது..."
"என்னடா கண்ணே! என் ராஜாத்தி அல்லவா! என் ரோஹிணிக் குஞ்சை யார் என்ன செய்தார்கள்;"

இவ்வாறான வார்த்தைகள் ஊடே இன்பம் கனிந்த இனிய மொழி பேசி, குழந்தை உள்ளத்தை இனிவாகப் பதப்படுத்திய, அமைதிப்படுத்திய வார்த்தைகள் ஊடாக அமைதி, தூர நோக்கு, சமய சிந்தனை, விழுமியங்களைக் கடைப்பிடித்தல், உண்மைபேசுதல், கடவுள் நம்பிக்கை போன்ற வாழ்வியற் சிந்தனைகளை அள்ளி **"நட்சத்திரக் குழந்தைகள்"** என்ற கதையூடாகத் தந்தவர் ரா. பி. ராமையா எனக் கூறிக் கொள்ளல் சாலப் பொருந்தும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **பி. எஸ். ராமையா இலட்சிய புருஷர் என்பதை "நட்சத்திரக் குழந்தைகள்" என்ற சிறுகதையைக் கொண்டு ஆதாரப்படுத்துக.**
**(பி. எஸ். ராமையா தான் கூறவிரும்பியதை நாசூக்காகக் கதை மூலம் கூறியவர் சான்றுபடுத்துக.)**

சிறுகதை எழுத்தாளர் பி. எஸ். ராமையா அவர்கள் கதைமூலம் தான் கூற எண்ணியதை (தனது இலட்சியத்தை) இலகுவாக வாசகர் மனதில் பதியவைத்தவர்.

◈ ஒரு வயதுவந்த மனிதன் குழந்தையாக நின்று, அதுவும் குழந்தையாகப் பேசமுயலுவது என்பது சாதாரண விடயமல்ல. குழந்தைப் பேச்சை ஆற்றுவது என்பது போற்றத்தக்க விடயம் அல்லவா? குழந்தையாக நின்று சமூகத்தில் வாழ்வியற் சிந்தனைகளை ஒவ்வொருவரதும் நெஞ்சங்களிலும் விதைத்தவர் எழுத்தாளர் பி. எஸ். ராமையா எனக் கூறலாம்.

"உண்மைபேசு"
"உண்மை பேசினால் உயர்வடைவாய்"
"இறை சிந்தனை"
"உலகில் பெரியவர் இறைவன்"
"இறைவன் நல்லவர்"
"நாம் நல்லன செய்ய வேண்டும்"
"பொய் பேசக்கூடாது"
"பொய் பேசினால் துன்பம் ஏற்படும்"
"பெரியோரைக் கனம் பண்ணு"
"அன்பைக் கடைப்பிடி"

என்பன போன்ற விழுமியக் கருத்துக்களைச் சமூகத்தில் குழந்தைகளின் மனத்தில் இலகுவாகப் பதியவைத்து வெற்றி கண்டவர் இவ் எழுத்தாளர் எனலாம்.

நாம் சத்தியத்தையே பேசுதல் வேண்டும். அவ்வாறு ஒவ்வொரு தடவையும் உண்மை பேசுகின்ற வழக்கத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு செய்யின் எமது வாழ்வில் ஒவ்வொரு தடவையும் ஒளிபிறக்கும்; அது எவ்வாறு என்பதை '**நட்சத்திரம் ஒவ்வொரு தடவையும் பிறக்கும்...**'என்பதைக் குழந்தையாக நின்றுபேசி வாழ்க்கைப் பிரயாணத்தில் நாம் எதனைக் கைக்கொள்ளுதல் வேண்டும் என்பதனைக் கதைமூலம் அதுவும் குழந்தை வடிவில் மழலைமொழிபேசி ஆற்றுப்படுத்தியவர் பி. எஸ். ராமையா எனக் கூறின் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ சமூகத்தில் பொய் கூறுதலை அறவே இல்லாது செய்து, ஒளிமய மான சமூகத்தை எதிர்காலத்தில் காணவிரும்பிய எழுத்தாளர் அதற் கான ஒரு காவலனாக '**நட்சத்திரக் குழந்தைகள்**' என்ற தலைப்பில் கதை ஆக்கினார் எனலாம். தனது கதை கூறுதலுக்குச் சிக்கனமாகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட பாத்திரப்படைப்பினை அமைத்து, அதுவும் குழந்தை பேசுகின்ற மொழியிலேயே பேசுகின்றார்.

◈ தான் கூறவந்த விடயத்தை உரிய களத்தில் நின்று மொழிநடைச் சிறப்பும், வர்ணனைச் சிறப்பும் பொருந்தக் கதை கூறுவது என்பது பாராட்டத்தக்க விடயமாகும். குழந்தையின் அழுகை, குழந் தையின் விருப்பு, குழந்தையின் நடத்தைகள், கள்ளங் கடமற்ற செய்கைகள் என்ற வகையில் அந்தத் தூய, தெளிந்த கபடமற்ற அக்குழந்தையின் உள்ளத்தின் எண்ண அலைகளை இன்பமாகவும், சில இடங்களில் துக்ககரமாகவும் காட்டி எவ்விதத்திலும் எவரும் **உண்மைபேசுதல் வேண்டும்** என்ற விழுமியக் கருத்தை குழந்தை களுக்கு, வாசகருக்குச் சொல்லி வைத்தவர் எழுத்தாளர் பி. எஸ். ராமையா அவர்கள்.

◈ குழந்தைகளின் செய்கைகள், அக்குழந்தை தன் செய்கைகள் ஊடாக இன்புறுதல் என்பவற்றைக் காட்டிச் செல்லும் கதாசிரியர் செய்கைகள் அனைத்திலும் சமூக விழுமியங்களை, வாழ்வியற் சிந்தனைகளைப் புகுத்தி அதன் மூலம் கதை கூறுவது என்பது இயலாத காரியம் அல்லவா? ஆனால் ராமையாவுக்கு அவை கைவந்த கலையாகும்.

"இரு அப்பா அந்த வானம் எவ்வளவு அழகாயிருக்கு! அவ்வளவு குழந்தைகளையுடைய சுவாமிக்கு எவ்வளவு சந்தோஷம் இருக்கும்" அப்பா.....

என்று ஒரு இடத்தில் குழந்தையின் இன்பத்தை விழுமியக் கருத்தோடு கூறிய கதாசிரியர்

"அப்பா நம்ப ஊரிலே. யாரோ ஒரு பொய் சொல்லிட்டா அப்பா"

என குழந்தையின் துன்பத்தையும் காட்டுவார். தான் கூறவந்ததைத் துன்பச் செய்கையிலும், இன்பச் செய்கையிலும் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதில் நிலை நிறுத்தி வாசகர்களின் உள்ளத்தில் வாழ்வியற் சிந்தனைகளை நாசூக்காகப் விடயத்தைப் பதிய வைப்பதில் எழுத்தாளர் பி. எஸ். ராமையா அவர்கள் கைதேர்ந்தவர் எனக் கூறிக் கொள்ளலாம்.

2. **எழுத்தாளர் பி. எஸ். ராமையா அவர்களின் பிறப்பும், அவரது ஆற்றல் தொடர்பாகவும் நீர் அறிந்தவற்றை நிரற்படுத்துக.**

◈ பி. எஸ். ராமையா அவர்கள் மதுரை மாவட்டத்தில் வத்தலக்குண்டில் பிறந்தவர்.

◈ 1933 இல் **ஆனந்தவிகடன்** நடத்திய சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்றுப் பரிசினைத் தட்டிக்கொண்டவர்.

◈ 1935 இல் இருந்து **"மணிக்கொடி"** பத்திரிகையைச் சிறுகதைப் பத்திரிகையாகவே மூன்று ஆண்டுகள் தொடர்ந்து நடாத்திப் புகழ்பெற்றவர்.

◈ இவர் நாடகம், சிறுகதை எழுதுவதில் கைதேர்ந்தவர் சிறந்தவர்.

◈ இவருடைய சிறுகதைத் தொகுப்பாகிய **"புதுமைக் கோயில்" "பூவும் பொன்னும்"** ஆகியவை படித்து இன்புறத்தக்க சிறுகதைகளாகும்.

◈ இவரது **'நட்சத்திரக் குழந்தைகள்'** என்ற படைப்பின் மூலம் சமூக விழுமியங்களை மக்கள் மனதில்; குழந்தைகளின் உள்ளத்தில் பதியவைத்தவர் என்ற சிறப்புப் பெற்றவர் இவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08. நந்திக் கலம்பகம்

1. **பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.**
   அ. கலம்பகம்
   ஆ. நந்திக்கலம்பகம் பாடப்பட்ட தேவை
   இ. செய்யுள் வளம்

அ. கலம்பகம்

பல்வகைப் பொருள் தொடர்பாக வெவ்வேறு செய்யுள் வகைகளைக் கொண்டு நூறு பாட்டுக்கள் கொண்டமைந்த சிற்றிலக்கிய வகை **"கலம்பகம்"** எனலாம்.

ஆ. நந்திக் கலம்பகம் பாடப்பட்ட தேவை.

நந்திவர்மன் என்ற பல்லவ அரசனைப் புகழ்ந்து வாழ்த்துவதற்காகப் பாடப்பட்ட நூறு செய்யுள்கள் கொண்டு அமைந்த நூலே **'நந்திக் கலம்பகம்'** ஆகும்.

இ. செய்யுள் வளம்

இந்நூலில் காணப்படும் செய்யுள் ஒவ்வொன்றும் கற்பனை நயம் மிக்கது; கற்கும் தோறும் சுவை நலம் பயப்பது.

2. **நந்திவர்மனின் நாட்டுச்சிறப்புக் கவிஞரால் "கோட்டை இடிதகழ் குன்றாகி" என்ற செய்யுளில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?**
   **(நந்திவர்மனின் நாட்டிலுள்ள யானையின் வீரம் எவ்விதம் காட்டப் பட்டுள்ளது)**

◈ நந்திவர்மனின் நாட்டிலுள்ள ஆண்யானைகள் பகைவர் களின் நாட்டில் பாதுகாப்புக்கான கோட்டையில் அமைந்துள்ள வலிமைமிக்க மதில்களைத் தன் கொம்புகளால் குத்தித் தகர்த்து வீழ்த்தி விடுகின்றன. இவ்வாறு வீழ்த்தப்படும் உயர்ந்த மதில்களின் மண்ணும் கல்லும் அங்கே கோட்டையின் பாதுகாப்புக்காக வெளிப்புறத்தில் கோட்டையைச் சுற்றி அமைக்கப்பட்ட தாழ்ந்த நீர் கொண்ட அகழிகளை மூடிவிடுகின்றன.

◈ இவ்விதம் தகர்த்த மண்ணையும், கற்களையும் கொண்டு வெளிப்புற அகழியில் உள்ள பள்ளத்தை மூடியது மட்டுமன்றி அவ் அகழியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைக் கொட்டி மலைபோன்ற உயரத்தில் மேடாக்கியும் விட்டன. அவற்றில் கால்வைத்து கோட்டையினுள் செல்கின்றன. இதனை

'கோட்டை இடிதகழ் குன்றாக்கி...'

என்றார்.

உயர்ந்த அம்மதில்களை இடித்து அருகே உள்ள அகழிகளை மலைபோன்று மேடாக்கியதால் மதில் கொண்டிருந்த இடங்கள் யாவும் பள்ளமாக அவை அகழியாக ஆகிவிட்டன. இவ்வாறு வீரத்தன்மை கொண்டு பகைவர் நாட்டில் முன்னோக்கிச் செல்கின்ற ஆண்யானைகளைக் கொண்டது நந்தி வர்மனுடைய நாடாகும் என்ற புகழ் பொதிந்தது அந் நாடாகும்.

இங்கே யானைகளின் வீரம்மிக்க செயல்களினூடாக அவ் யானைகளைக் கொண்டுள்ள நந்திவர்மனின் நாட்டுச் சிறப்புக் காட்டப்பட்டுள்ளது.

◈ இங்கே பகைவர்களின் நாட்டினுள் அஞ்சாது முன்சென்ற யானைகள் பகை அரசர்களுக்குரிய பாதுகாப்புப் பொருந்திய கோட்டைக்குச் செல்கிறது. பாதுகாப்புக்காக நீர் கொண்ட அகழிகளால் சூழப்பட்டு உயர்ந்த மதில்களைக் கொண்டு சூழப்பட்ட மதில்களைத் தாக்குகின்றது.

இவ்வாறு ஆண்யானைகள் தனது கொம்புகளினால் உயர்ந்த மதில்களைத் தாக்குகிறது என்பதால் நந்திவர்மனின் நாட்டிலுள்ள யானைகளின் வீரம் காட்டப்படும் அதே வேளை அந்நாட்டின் சிறப்பும் காட்டப்படுகிறது. மதிலைத் தகர்த்தது மட்டுமின்றி அம்மதிலில் பொருந்தியிருந்த மண் கற்களைக் கொண்டு தாழ்ந்த பகுதியாக மதில்களைச் சுற்றியிருந்த அகழிகளை நிரப்பிவிடும்.

ஆற்றல் மிக்க யானைகளாக அவ் யானைகள் காணப்படுகின்றன அம்மேடான அகழிகள் மேல் கால்வைத்துச் செல்கின்றன; எனக் கூறும் புலவர் அதனுடன் நின்றாரில்லை.

◈ இவ்வாறு மதில்களைத் தகர்த்து அகழிகள் யாவற்றையும் நிரப்பி அதனை மலைபோன்று உயரமான பகுதியாக ஆக்கிவிட்டன. இங்கே பாதுகாப்புக்கான அகழி மண்மேடாகிவிட்டன. இது போர் வீரர்களும், அணிகளும் இலகுவாக பகைவர்களின் கோட்டைக்குள் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக அமைந்துவிட்டது எனவும், இதனை யானைகள் செய்கின்றன என்றால் அவற்றை இயக்கிச் செல்லும் போர்வீரர்களின் போர்த்திறனையும் வேட்கையையும் உள்ளாந்தமாகப் புலவர் தெளிய வைக்கிறார்.

"கோட்டை இடிதகழ் குன்றாக்கிக்
குன்றகழ் ஆக்கித் தெவ்வர்
நாட்டை மிதிக்கும் கடாக்கள்"

அகழிகள் மலைபோன்ற மண் மேடுகளாகிவிட்டன. உயர்ந்த மதில்களைக் கொண்டு இருந்த இடம் இப்போது அகழி களாகி பள்ளமாகி விட்டன எனக் கூறும் புலவர் பகைவர் கோட் டையின் பாதுகாப்புக்கான மதில்களை தன் கொம்புகளால் அழித்து (தகர்த்தி) அகழிகளில் வீழ்த்துகிறது. அவற்றினூடே யானை தன் கால்களை வைத்து நடந்து பகைவர்களின் பாதுகாப்புக் கோட்டையி னுள் செல்கிறது என நந்திவர்மனின் நாட்டின் படைவலிமையைப் புலவர் சிறப்பாகக் காட்டுகிறார்.

"தெவ்வர் நாட்டை மிதிக்கும் கடாக்கள்"

யானை தன் செயலால் தன் நாட்டுப் படைகள் அகழி களைக் கடந்து உள்ளே செல்ல இடம் வகுக்கிறது. இவ்வித வீரம் மிக்க செயல்களைச் செய்கிறது. இதன் மூலம் தம் நாட்டுப் படைகள் பகைவர்களின் கோட்டைக்குள் புகுகின்றனர் எனக் காட்டும் புலவர் மறைமுகமாக இவ் யானைப்படைகளைக் கொண்ட வீரர்கள் எவ்வித வீரம் மிக்கவர்கள் என்பதையும் மறைமுகமாகக் காட்டியும் உள்ளார் எனக் கூறலாம். இவ்வாறு நந்திவர்மனின் நாட்டுச்சிறப்பு யானையின் செயல் மூலம் காட்டப்படுகிறது.

**3. காதலியின் நிலைகண்டு "செவிலி இரங்குதல்" பின்வரும் அடிப்படையில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது?**

**அ. நாட்டுச்சிறப்பின் ஊடாக காதலியின் வர்ணனை**

**ஆ. செவிலி இரங்கல்**

அ. நாட்டுச்சிறப்பின் ஊடாகக் காதலியின் வர்ணனை

◈ நந்திவர்மனின் வீரம்மிக்க யானைகள் பகைவர்களின் நாட்டினுட் சென்று பாதுகாப்புக்கான கோட்டை மதிற்சுவர்களை அழித்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகழிகளை மேடாக்கி, மதில்களை இடித்து அகழிகளாக்கி அவற்றில் கால் வைத்து மிதித்துக் கோட்டையினுள் புகுகின்றன. அவ்வித சிறப்புடைய மன்னனுடைய நாட்டு மகளே! இக் காதலி, என்ற நந்திவர்மன் ஆளும் சிறப்புடை நாட்டினை இவள் கொண்டவள். எனப் புகழ்கிறார் புலவர்.

"கோட்டை இடிதகழ் குன்றாக்கிக்
குன்றகழ் ஆக்கித் தெவ்வர்
நாட்டை மிதிக்கும் கடாக்கள்..."

◈ பொன்னாலாகிய காதணியையும் கடந்து தோடுகள் உள்ள காதுகளின் நடுவே சென்று, சுருண்டுள்ள கூந்தல் காடுவரை நீளும் காதலி எனக் கூறுவார். இங்கே தலைவியின் கண், கெண்டை மீனுக்கு உவமிக்கப் பட்டுள்ளது.

உவமானம் - கெண்டைமீன்
உவமேயம் - தலைவியின் கண்
பொதுத்தன்மை - நீண்ட

## ஆ. செவிலி இரங்குதல்

◈ பகைவர் கோட்டையினுள் அஞ்சாது செல்லும் சிறந்த வீரம்மிக்க யானைப்படைகளைக் கொண்டுள்ள நந்திவர்மன் என்ற மன்னன் ஆட்சிசெய்யும் நாடு தலைவியின் நாடாகும்.

◈ இங்கே தலைவி பொன்னாலாகிய காதணியையும் கடந்து; அத் தோடுகளுடைய காதுகளின் நடுவிடத்தில் சென்றேறி சுருண்ட கூந்தல் காடுவரை நீண்டு சென்றேறி மீள்கின்ற பான்மை கொண்டிருந் தாளே ஒளிய நடந்து செல்லும் தன்மை கொண்டவள் அல்ல. தலைவி **உடன்போக்குப்** போகிய நிலையினைக் கண்ட செவிலி இவ்வாறு வருந்துகிறாள். அதாவது நீண்ட காடுகள் வரை சென்று நினைவில் மீள்கின்ற தலைவியா! பாலைவனத்து வழியில் கால்வைத்துச் சென்றாள். பாலைவனத்தில் கால்வைத்து எப்படிச் சென்றாளோ? காதலி, அவள் கால்கள் அந்நிலத்தில் கால் வைக்கும் தன்மை கொண்டன அல்ல; அவை பஞ்சினும் மெல்லிய கால்கள் எவ்வாறு அவள் அந்நிலத்தில் நடந்து சென்றாள். அந்தோ! கொடுமை, இது தலைவியின் **உடன்போக்கினால்** ஏற்பட்ட போக்கு அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ இங்கே பஞ்சினையும் ஒத்த மெல்லிய கால்களைக் கொண்ட தலைவி எவ்விதம் பாலைநிலத்தில் கால்வைத்தாள் அந்தோ! கொடுமை கொடுமை இது எவ்விதம் நிகழ்ந்தது? எவ்விதம் நடந்து சென்றாள்.

◈ பாலைநிலத்தின் கால்வைத்துச் செல்லுமளவுக்குத் தலைவி இருக்கவில்லை ஆனால் அவளின் உடன்போக்கு காட்டும்வழியினில் அவள் காதலித்த ஆண்மகனோடு உடன் போகச் செய்தது எவ்வாறு? அவ்வாறு அவளைச் செய்ய வைத்துவிட்டது காதல் நோய். அந்தோ! என ஏங்குகிறாள்.

◈ எவ்வாறான நாட்டில் எச்சிறப்புடன் வாழ்ந்தவள். இவளது கால்கள் பாலைநிலத்தில் கால்வைத்து வைத்து நடக்கும் அளவுக்குத் தகுதி பெற்றனவா? எனக் கூறுமுகத்தால் பாலைவனத்தின் கொடுமையும், தலைவி பிரிந்தமை தொடர்பான செவிலித்தாயின் இரங்கலையும் புலவர் வெளிப்படுத்திக் காட்டுகின்றார். இவளது நடத்தை உடன்போக்கு என்பதைச் செவிலி அறிகிறாள். (தலைவனுடன் போகுதல்).

**4. "கயற்கண்ணியோ சுரம் கால் வைப்பதே" பாடலடியின் சிறப்பினை எழுதுக.**

◈ கயல் போன்ற நீண்டதும். அழகும் பொருந்தியதுமான கண்களைக் கொண்டவள் தலைவி. இவளால் வெம்மை பொருந்திய இப் பாலை நிலத்தில் நடந்து செல்ல முடியாது. ஏனெனில் இவளது கால்கள். பஞ்சினும் மெல்லிய கால்கள் கயற்கண்ணியாகக் காதலியை உருவகித்த புலவர் (உருவகஅணி) அவளது கால்கள் பாலைநிலத்தில் கால்வைத்து நடந்து செல்லும் தகுதி பெற்றன அல்ல என்பதைக் காட்டுகிறார். இங்கே தலைவியின் கண்ணைக் 'கயல்கண்' என்றே உருவகித்தமையால் உருவக அணியாயிற்று.

செவிலித்தாய் பாலைவனத்தின் கொடுமையை அரற்றி, அதனூடாக காதலி இவள் எவ்விதம் இக் கொடிய பாலைநிலத்தில் கால்வைத்துச் சென்றாள் என்பதற்கு உடன்போக்கினை அறிந்து இரங்குவதாகவும் காட்டுகின்றார். (தலைவனுடன் சென்றமை)

◈ இவ்விதம் பாலைவனத்தில் பஞ்சு போன்ற கால்களை வைத்து வெம்மைக் கொடுமையைப் பொருட்படுத்தாது நடந்து செல்லக் காதலிக்கு விளைந்த தேவை என்ன? அதுதான் காதல், அதனால் ஏற்பட்ட உடன் போக்கே இதுவெனவும் கூறி வைக்கின்றார் புலவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதம் தலைவியின் வர்ணனைச் சிறப்பு, பாலைவனத்தின் கொடுமை, செவிலியின் இரங்கல் காதலியின் போக்கின் தேவை, உடன்போக்கு என்பனவற்றை ஓரடியில் மிகச்சிறப்பாகப் புலவர் வர்ணனையுடன் ஆக்கியுள்ளார்.

2. **"மேகவிடுதூது" – ஓடுகின்ற மேகங்காள்! என்ற பாடலை அடிப்படையாக வைத்துக்கீழ்வருவனவற்றிற்கு விடை தருக.**

**அ. தலைவியைக் காணத் துடிக்கும் தலைவனின் அவலநிலை**

**ஆ. "ஓடாத தேரில் வெறும் கூடு வருகுதென்று கூறுங்கள்" என்பதன் பொருள்**

அ. தலைவியைக் காணத்துடிக்கும் தலைவன் தனக்கு மேலே நில்லாது விரைந்து ஓடிச் சென்று கொண்டிருக்கின்ற மேகங்களை நோக்கு கின்றான். இங்கே தலைவியிடம் மேகத்தைத் தூது விடுதல், தேரைக் கடந்து நந்தி வர்மனின் நாட்டில் தலைவி இருக்கும் திசை நோக்கிச் செல்லும் மேகங்களே! எனது அவல நிலையைப் பாருங்கள். இவ்வாறு நீங்கள் செல்லும்போது நந்தி மன்னனாகிய ஸ்ரீராமனது சிறப்புமிக்க கச்சி (காஞ்சிபுர நகரம்) நரகத்திற்கும் செல்வீர்கள். அங்கே நீங்கள் செல்லும் வழியில் அழகிய நெற்றியையுடைய எனது காதலியை (தலைவியை) நீங்கள் நேரில் காணும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் நான் கூறுவதை அவளிடம் தெரிவித்துவிடுங்கள் என்றான்.

"ஓடுகின்ற மேகங்கள் ஓடாத தேரில் வெறும்
கூடுவருகுதென்று கூறுங்கள்.."

இவ்வாறு உன்னைக் காணாது அவலத்துக்குள்ளாகி உன்னைக் காண்பதற்காக தன் நிலையிழந்து, உள்ளே எதுவும் அற்ற வெற்று உடம்பு (கூடு) ஒன்று (மேகத்தைப்போல்) விரைந்து செல்லாத தேரினில் உன்னைத் தேடி வந்துகொண்டிருக்கிறது எனச் சொல்லுங் கள். எனத் தலைவனின் கூறுகையையும் தலைவியைக் காணத் துடிக்கும் தலைவனின் அவலநிலையையும் காட்டும் புலவர், தலைவன் தனது நிலையையும், பிரிவு நிலை ஆற்றாது மேகங்களிடம் தூதாகச் செல்லுமாறு கூறுமளவுக்கு காதல் வேட்கைமிகுந்து, காதலியைக் காணத்துடிக்கிறான் என்பதையும் காட்டுவார்.

ஆ. "ஓடாத தேரில் வெறும் கூடு வருகுதென்று கூறுங்கள்"

விரைவாக தேரினைச் செலுத்துகின்ற சக்தியை இழந்தவனாகத் தலைவன் புலவரால் காட்டப்படுகின்றான். இங்கே விரைவாகத் தேரினைச் செலுத்தும் வீரத்தன்மையை இழந்தவனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலியின் பிரிவால் வருந்துபவனாக எதுவுமற்றவனமாகப் புலம்புபவனாகத் தலைவன் புலவரால் காட்டப்படுகின்றார்.

- காதலியை நினைந்து, நினைந்து காண விரைந்து, விரைந்து செல்கின்ற தலைவன் தன் காதலியை எப்போது காணப் போகிறேன் என ஏங்குகிறான். அப்போது வானத்தில் விரைந்து செல்லும் மேகக்கூட்டங்களைக் காண்கின்றான். காதலியின் பிரிவால் மேகங்களை விட, விரைவு அற்றுச் செல்கின்ற அதாவது ஓடாத தேரில் வரும் தன்னை (தலைவனை) விட, மேகங்கள் நந்தி மன்னனாகிய ஸ்ரீராமனது சிறப்புமிக்க கச்சி (காஞ்சிபுர) நகருக்குள் முதலில் சென்று விடும் என எண்ணுகின்றான்.

- எனவேதான் தனக்கு முன் செல்லும் மேகக் கூட்டங்களைத் தூதாகவிடத் தலைவன் எண்ணுகின்றான். **(இது ஆண் பால் தூது வகையினது)** தனது காதல் வேட்கையை, தன் வரவைக் காதலியிடம் கூறுமாறு இயற்கையாகவே ஓடிக்கொண்டிருக்கும் மேகங்களிடம் தன் அவலத்தைப் பிரதாபிக்கின்றான். உன்னை விரும்பி அனைத்தையும் இழந்த ஒரு கூடாகக் காதலன் வருகிறான் எனக் கூறும்படி தலைவன் கூறுகின்றமையைக் காணலாம்.

- இங்கே தலைவன், தலைவியை அடையும் எண்ணத்தை விட எதைப்பற்றியும் எண்ணவில்லை. இதனால் அனைத்தையும் இழந்த வெற்றுடம்பாகி விட்டேன். வெறும் கூடாகி விட்டேன். இவ்வெற்றுடம்பாகிய கூடு உன் அன்பை வேண்டி உன்னை அடைய மெல்ல மெல்ல வந்து கொண்டிருக்கிறது எனத் தலைவியிடம் கூறுமாறு கூறுகிறான். எனக் காதல் வேட்கையால் தன்நிலையிழந்து தேரூர்ந்து செல்லும் காதலனின் பிரிவும், அடைய விரும்பும் காதலியின் விருப்பும், காதல் நோயும் , அவலமும் புலவரால் காட்டப்படுகிறது.

**3. "மண்ணெல்லாம் உய்ய மழை...." என்ற நந்திக்கலம்பகம் நிலவைப் பழித்தல் செய்யுளை ஆதாரமாக வைத்துப் பின்வருவன வற்றை விளக்குக.**

**அ. நந்திவர்மனின் கொடைச்சிறப்பு**

**ஆ. நந்திவர்மன் மன்னனின் நாட்டுச்சிறப்பு**

அ. நந்திவர்மனின் கொடைச்சிறப்பு

இந்த உலகிலே உள்ள அனைவரும் இன்பமாக நன்கு வாழ விரும்பிப் பொருள் வழங்குபவன் நந்திவர்ம மன்னன் ஆவான். அவனது ஆட்சியில் மக்களுக்குக் குறைவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ தனது ஆட்சியில் குடிமக்கள் நன்கு மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்பதற்காக அவன் கொடை வழங்குகின்றான். இவ்வுலகில் உள்ள மக்கள் அனைவரும் நன்கு இன்பமுடன் வாழ எந்தவேறுபாடும் இன்றி மழை பொழிகின்றது. அதற்கு வரையறையே இல்லை; அளவு இல்லை; விரும்பிச் சொரிகின்றது அதேபோன்று நந்திவர்மனின் கொடை வழங்குகின்ற அவனது கொடுக்கின்ற கைகள் மழைபோல் வரையாது வாரிவழங்குகின்றன; அதற்கு அளவும் கட்டுப்பாடும் இல்லை. இதனை

"மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்கு கரம்"
என்றார்.

நாட்டுமக்கள் நல்லாக வாழவேண்டும் என்பதற்காக வாரி வழங்குகிறான். இதனை விருப்புடன் இயற்றுகின்றான். இங்கே புலவர் மன்னனின் கொடைச்சிறப்பைப் போற்ற மேகத்தைப் போல மக்கள் நலன் விரும்பிக் கொடுக்கின்ற கொடையை அது; அது வரையாது வழங்கும் தன்மை கொண்டது நந்திவர்மனின் கொடுக்கின்ற கைகள் என உவமைப்படுத்திக் கொடையைச் சிறப்பித்துள்ளார்.

**உவமானம்** - மேகம்

**உவமேயம்** - நந்திவர்மனின் கைகள்

**பொதுத்தன்மை** - வரையாது வழங்கல்

ஆ. ◈ உலக மக்கள் யாவரும் நன்கு வாழ மேகத்தைப் போல, வேறு பாடின்றி வரையாது பொழியும் மழையைப் போல நந்திவர்மனின் கைகள் குடிமக்களுக்குக் கொடையை வழங்குகின்றன; இக்கொடை எந்தவேறுபாடுமின்றி வரையறையற்று வாரிவழங்கப்படுகிறது. நாட்டு மக்கள் மகிழ்வுடன் இருக்க வேண்டும் என்பதே நந்திவர்மனின் விருப்பம். எனவே அவனது கைகள் மேகத்தை ஒத்தன. மேகங்கள் எவ்வாறு வரைவின்றி மழையைச் சொரிகிறது; மக்கள் நலமுடன் வாழ மழையைச் சொரிகிறது. இதேபோல் மக்கள் நன்கு வாழ நந்திவர்மனின் கைகள் பொருட்களை வாரி வழங்குகின்றது என மன்னன் சிறப்பு முதலில் காட்டப்படுகிறது. இதனை

"மண்ணெல்லாம் உய்ய மழைபோல் வழங்கு கரம்..."

◈ எனப் புலவர் சிறப்பிக்கின்றார். நந்திவர்மனின் நாட்டில் இன்பம் எங்கும் உலவுகின்றது. மக்களுக்கு எவ்வித குறையும் இல்லை. எனவே குளிர்மை பொருந்திய இன்பமானது எல்லாவிடத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாவித்திரிகிறது என நாட்டின் இன்பப் பெருக்கைப் புலவர் "**தண்உலா**" எனக் காட்டுகிறார்.

மேலும் "**தண்உலா மாலை**" என்ற பகுதியினால் இன்பம் எங்கும் செறிந்து உலவித் திரிகின்ற இயற்கைப் பண்பு கொண்டது நந்திவர்மன் நாடு எனவும் கூறுகின்றார்.

◈ "தமிழ் நந்தி நல் நாட்டில்"

எனக் கூறுமுகத்தால் நந்திவர்மன் தமிழ் மொழிக் குரியவர், தமிழ்மொழி பேசுபவன் தமிழ்மொழியின் சிறப்பறிந்தவன். எனவே தமிழ் மன்னன் ஆட்சியே அந்நாட்டில் திகழ்கிறது என பெருமிதத்துடன் புலவர் தமிழ் மொழி பேசுகின்ற மன்னன் ஆட்சியை அவ் இன்பம் பொருந்திய நல்லாட்சி எனவும் தமிழ்மொழியைப் போற்றி, தமிழ் நல்லாட்சி நடக்கின்றது நந்திவர்மன் பயனுள்ள நாட்டின் கண்ணே ஆட்சி செலுத்துகிறான் என ஆட்சிச் சிறப்பையும் புலவர் போற்றுகின்றார். இவ்வாறு நந்திவர்மனின் கொடைச் சிறப்புப் போற்றப்படுகிறது.

**4. காதலனின் பிரிவால் வருந்தும் தலைவி நிலவைப் பழித்தமையை எவ்வாறு புலவர் காட்டுகின்றார்?**

பாவகை - தரவு கொச்சகக் கலிப்பா
கூற்று - தலைவி
பொருள் - தலைவி நிலவு கண்டு இரங்குதல்.

◈ இங்கே தலைவி, தலைவனைக் காணாது துன்பப்படுகின்றாள். அவளது ஒரே வேட்கையும், நோக்கும் தலைவனைச் சென்று அடைவதேயாகும். இங்கே பிரிவால் வாடும் தலைவி தன்துயரம் கூறுவதாக இப்பாடல் அமைகிறது. இவ்வாறு காதல் பிரிவால் அவதியுறும் தலைவி இயற்கையாக ஒளிர்கின்ற நிலவைப் பார்க்கின்றாள். அதன் நிலவொளி காண்கிறான். அதன் இன்பத்தை அறிகிறாள். அவ் இன்பத்தைச் சகிக்க, பொறுக்க, இன்புற அவளால் முடியவில்லை. எனவே அந்நிலவில் தான் இன்பம் அடைய வில்லையே என ஏங்குகிறாள். இதனால் நிலவைப் பார்த்துப் பழிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ காதலனைக் காணாத துன்பத்தை விட இந் நிலவின் இன்பம் மேலானதா? இல்லை இந்நிலவொளியும் துன்பம் பயப்பதே என எண்ணுகின்றாள். தனது துன்பமேலீட்டால் நிலவைப் பழிக்கின்றாள். தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி நிலவின் தன்மை கண்டு காதலர் இன்பம் துய்க்கும் இந்நிலவில், துயரம் கொண்டு அதனைப் பழிக்கலானாள்.

◈ பெண்களின் பிறப்பே இல்லாத நகரத்தில் பிறந்தவர்கள் எவ்விதம் வருந்துவார்கள்; அவர்களுக்கு ஆதரவு உண்டா? இன்பம் உண்டா? இன்பமான வாழ்வு உண்டா? இவர்களின் வாழ்வு பற்றி இரங்குவார் யாரும் உளரா? இல்லை. இவ்வாறு இரக்கமில்லாது தோற்றமளிக்கும் வெண்ணிலாவே!

◈ அதேபோன்று துன்பத்தால் காதலனின் பிரிவையாற்றாது தலைவி வாடுகின்றாள். இவ்வேளையில் வெண்நிலவைப் பொழிந்து என்னைக் காதல் வேதனைக்குள் ஆட்படுத்து கின்றாயே! நான் தலைவனைப் பிரிந்து காதல் வேட்கையால் தன்நிலை திரிந்து வருந்தி உள்ளேன். இவ்வேளையில் நிலவைப் பொழிந்து வருத்துகின்றாயே! உனக்கு இரக்கமே இல்லையா? எனக் காதலி கூறுவதாகப் புலவர் நிலவைப் பழிக்கும் பான்மை பாராட்டத்தக்கது.

இங்கே இயற்கையாக எழும் நிலவு எப்பொழுதும் காதலர்க்கு காதற் சேர்க்கையில் தம் காதல் உணர்வுகளை வெளிப்படுத்த, அவற்றைச் சமன்செய்ய உதவும் இன்பமயமான பொழுது என்பதை உள்ளார்ந்தமாகக் காட்டும் புலவர்; தலைவன் பிரிவுதாங்காது வருந்தும் காதலி இந்நிலை கண்டு, பிரிவாற்றாது வருந்துகிறாள். காதலனைக் காணத் துடிக்கிறான்; காதல் வேட்கையால் நிலைதடுமாறி, காதல் நோயால் அவதியுறுகிறாள். எனவே தான் என் நிலையில் உனக்கு இன்ப நிலவைப் பொழிய மனம் எழுந்ததா? உனக்கு இரக்கமே இல்லையா? எனத்தலைவி நிலவைப் பழிப்பதாகப் புலவர் காட்டுதல் சிறப்புடையது.

5. **காதலனின் பிரிவினால் வருந்தும் தலைவி (காதலி) கார்காலத்தின் கொடுமையை விபரிக்கும் பான்மையை விபரிக்குக.**
**(கார்காலத்தில் தலைவிபடும் துயரம் எவ்வாறு எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.)**

◈ தலைவி காதற் பிரிவால் தலைவனைக் காணாது வருந்துகின்றாள். கார்காலம் வந்துவிடுவேன் எனக்கூறி வேற்றூர் சென்ற தலைவன் இன்னும் வந்து சேரவில்லை. காதல் நோயைப் பெருக்கச் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனை ஏற்படுத்தும் காலம் இப்பொழுதாகும். கார்காலம் (இளவேனிற் காலம்) வருவேன் என்று கூறிப் போன தலைவன் எம்மை மறந்திருக் கும் காலமாகத் தலைவி எண்ணும் காலம் கார்காலம் ஆகும். தலைவியால் இக் கார்காலத்தில் தனித்திருக்க முடியவில்லை. இதனால் அவள் வருந்துகின்றாள். காதலன் இன்னும் வரவில்லையே என ஏங்கும் தலைவி கார்காலப் பொழுதின் நிலையைத் தனக்கு ஆதரவாக உள்ள தோழியிடம் உரைக்கின்றாள். கார்காலம் வந்துவிட்டது. காதலனைப் பிரிந்து என்னால் வாழமுடியாது அவன் எப்போது வருவான் என ஏங்குகிறாள்.

◈ இக்காலக் கொடுமையை எவ்விதம் கூறுவேன். கேள்!

(என் அன்புடைய தோழி!)

காதலனைப் பிரிந்து பிரிவாற்றாது வருந்துகின்ற மங்கையர் களின் கண்களினின்று கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறபடி செய்யும் மழைபொழியும் காலம் இக்கார்காலமாகும். (இளவேனிற்காலம்) இதனை

"மங்கையர் கண் புனல்பொழிய மழை பொழியும் காலம்..."

எனப் புலவர் காதலியின் கூற்றாகக் கூறுகின்றார்.

◈ மன்மதனானவன் தன் கருப்புவில்லை வளைத்து ஐவகை மலரம்பைத் தொடுக்க, காதல் நோயைப் பெருக்கும் காலம் இக்காலமாகும். காதல் வேட்கையால் பெண் மயில்களை இன்பமுடன் சென்றடையும் ஆண்மயில்கள் தோகைவிரித்து ஆடுவதும் இக்காலம் என்பதை அறிவாயாக. இங்கே ஆண்மயில்கள் இன்பம் பெருக்க பெண் மயில்களைச் சென்றடையும் இம் மழைகாலம் இக்காலம் ஆகும். இங்கே நான் தலைவன் இன்றி இன்பம் துய்க்கவழி இன்றி தலைவன் பிரிவால் அளவின்றி வருந்துகிறேன் என உள்ளார்ந்தமாகக் இதனைக் காட்டுவார்.

"மாரவேள் சிலைகுனிக்க மயில் குனிக்கும் காலம்"

எனப் புலவர் காட்டுகிறார்.

◈ மங்கையரது தனங்களும், கொன்றை மரங்களும் செழித்து, பொலிந்து முறையே பொன்போன்ற மலர்களையும், தேமலும் பொலிவும் மிகுதியாக உருவாகும் காலமும் இதுவே. இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறு முகத்தால் கார்காலப் பொழுதைக் காட்டுவது மட்டுமின்றித் தன் நிலையையும் ஊடே காட்டுகின்றார். இதனைக்

"கொங்கைகளும் கொன்றைகளும் பொன்பொழியும் காலம்."

எனச் சித்திரித்துக் காட்டுகின்றார்.

இவ்வாறு கார்காலப் பொழுதினைக் காட்டும் புலவர்.

◈ **"கோகனக நகைமுல்லை முகை நகைக்கும் காலம்"**

என்ற பாடலடியின் மூலம் தாவரங்கள் மகிழ்வுடன் பூ இதழ்களை விரித்துச் சந்தோஷத்துடன் இதமாக மலர்கின்றன என்பதைக் காட்டுகிறார். தாமரைகளிலும், முல்லைச் செடிகளிலும் அழகிய அரும்புகளுண்டாகி மொட்டுகள் மலர்ந்து சிரிக்கும் அதாவது தமது இதழ் விரித்து மலர்கின்ற காலமும் இக்குளிர் காலமாகிய கார்காலமாகும். இங்கே **"நகைக்கும்காலம்"** என சிரிக்கின்ற எனக் காட்டுவதன் மூலம் பூக்கள் மகிழ்வுடன் விரிந்து மலர்கின்றன. என்பதை **"நகைக்கும்"** சிரிக்கின்றன (மகிழ்வு) எனச் சிறப்பாகக் காட்டுகிறார்.

◈ முகில் போன்று கைமாறு கருதாது வேறுபாடின்றி இவ்வுலகில் உள்ளோர் அனைவரும் மகிழ்வுடன் நலமுடன் வாழ மழையைச் சொரிகின்ற மேகத்தைப் போன்று, கொடை கொடுத்துக் கொடுத்து, வரையாது வழங்க நந்திவர்மனின் கைகளே சிவந்து விட்டன. இவ்வாறு கைமாறு கருதாது இரவலர்களுக்குச் சிறந்த செல்வத்தைப் பொன்னை பொழிந்தருளுகின்ற ஒப்பற்ற பண்புத் தன்மைகள் நிறைந்துள்ள தன்னலம் துறந்து பொதுநலம் பேணும் தியாகி நந்திவர்மன் மன்னனது அருட்பார்வை, அன்பு அவனது அன்பு மங்கையற்குக் கிடைக்காததும், இங்கே தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி அவன் அன்பு கிட்டாது வருந்துவதும் கார்காலத்தில் அடைய வேண்டியதை இழந்து கிடைக்காது வருந்தும் காலமும் இக்காலமாகும். எனக் காட்டுமுகத்தால் தலைவனைப் பிரிந்து காதல் நோயால் பிரிவாற்றாது அவதியுறும் காதலியின் அவஸ்த்தை காட்டப்படுகிறது.

◈ நந்திவர்மன் உலாவரும் போது அவனைக் கண்டு, அவனை அடையவேண்டும் எனக் காதல் வேட்கையால் அவதியுறுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர்கள் இக்காலத்தில் அவன் அருட் பார்வையைக் காணாது அடையாது வருந்துவர். ஏனெனில் நந்திவர்மன் மன்னன் இக்காலத்தில் உலா வராது பிரிந்து சென்று விட்டான். ஆனால் நான் (தலைவி) தலைவனின்றித் தனியே வருந்துகிறேன் எனத் தலைவியும் தன் காதற் பிரிவை வெளிப்படுத்துகிறார். இதனை

"...செங்கைமுகில் அனைய கொடைச் செம்பொன் பெய் மேகத்
தியாகியெனும் நந்தியருள் சேராத காலம்..."

எனப் புலவர் கார்காலம் பற்றித் தலைவி கூற்றாகக் கூறும் தன்மை, சிறப்புப் பாராட்டத்தக்கது.

எனவே உயிரினங்கள் எல்லாம், இன்பம் துய்க்கும் இக்காலத்தில் நான் (தலைவி) மட்டும் தனியாகத் தலைவன் இன்றி காதல் தொடர்பான உடல் நோயால் வருந்துகிறேன் எனப் புலவர் காட்டுவார்.

- எனது தலைவன் என்னைப் பிரிந்து தொலை நாட்டினிடத்தே வாழ்கின்றான். அவனிடத்தே என் உயிர்சென்றுவிட்டது. இங்கே என் உடல் மட்டுமே இருக்கிறது. இவ்வாறு இங்கே தலைவனை எண்ணி நான் வருந்த, தலைவியைப் பிரிந்த பிரிவாற்றாது தலைவன் அங்கே வாடுகின்றான். கணவர் இருக்கும் இடத்தில் என் உயிர் உள்ளது. இங்கே என் வெற்றுடம்பு உள்ளது. இவ்வாறு ஒருவரை யொருவர் சேர்ந்து கொள்ள முடியாது செய்த கொடுங்காலமே இக் கார்காலம் எனத் தலைவி கணவனை அடைதல் வேண்டி அரற்றுகிறாள்.

தலைவனையடைந்து இக்கார்காலத்தில் ஒன்று சேர்ந்து எம் காதல் நோயைத் தீர்ப்பதற்கு உரிய காலம் இக்கார்காலம், ஆனால் அவர் தன்னந்தனியாகவும்; நான் தனியாகவும் இருக்க இக் கார்காலம் செய்து விட்டதே. தலைவன் கார்காலம் திரும்பி வருவேன் எனக் கூறிச் சென்றவன் இன்னும் வரவில்லையே? எனவே இக்கார்காலம் கொடுமைமிக்கது அல்லவா?

இவ்வாறு எனது தலைவனையும் என்னையும் வேறாக்கி இருவரையும் காதல் நோய்க்கு உட்படுத்திய இக்கார்காலம் எம் காதல் நோயை நீக்க வழிசெய்யவில்லை. என்காதல் நோயைத் தவிர்ப்பதற்கு உதவ வேண்டிய கார்காலம் தனியாக என்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்து வருந்த வைத்துவிட்டதே. எனவே இக் கார்காலம் கொடியதே! எனத் தலைவி கார்காலம் தனக்குக் கொடுமை விளைவித்துவிட்டதே என ஏங்கினாள். எனவே கார்காலம் கொடியது என்கிறாள். அக்கொடுமையை

◈ "அங்குயிரும் இங்குடலும் ஆன மழைக்காலம்
அவரொருவர் நாமொருவர் ஆன கொடுங்காலம்..."

எனத் தலைவனின் பிரிவாற்றாமையால் வாடும் தலைவி, கார்காலம் கண்டு தன் நிலைபற்றித் தனியாக வாடும் நிலைபற்றித் துன்புற்று கார்காலம் கொடுமை மிக்கது எனக் கூறுவதைப் புலவர் இங்கு காட்டுவார்.

5. **தலைவனின் பிரிவே "கார்காலத்தைக் கொடியது" எனத் தலைவி சாடியதற்குக் காரணம் நியாயப்படுத்துக.**
(கார்காலம் எவ்விதம் சிறப்புமிக்கதாக விளங்குகின்றது என்பதைத் தலைவி எவ்வாறு வெளிப்படுத்துகிறாள்?)

◈ போருக்குச் சென்ற தலைவன் வெற்றிவாகைசூடி கார் காலத்தில் வருவேன் எனத் தலைவியிடம் உறுதிமொழி கூறிப்புறப் பட்டுச் செல்கையானது தமிழர்தம் வழிவழியாக வந்த மரபே. இங்கே கொடையிற் சிறப்புடைய நந்திவர்மன் நாட்டிலே தன்னந்தனி யளாகத்தன் தலைவனின் வரவை எதிர்பார்த்து நீண்டகாலம் காத்திருக்கும் தலைவி கார்கால (இளவேனிற்காலம்) வரவு கண்டு தலைவன் வரும்காலம் வந்துவிட்டது என மகிழ்வடைகின்றாள்.

◈ கார்காலத்துக்குரிய குணங்குறிகள் யாவும் பிறந்து விட்டது. கார்காலம் தொடங்கிவிட்டது. கார்காலம் வருவதாகக்கூறி வேற்றூர் போர் மேற் சென்ற தலைவன் இன்னும் வரவில்லை. காதலனின் நீண்ட பிரிவால் அதுவும் கார்காலத்தில் தலைவனின்றித் தன் காதல் நோயைத் தீர்க்க முடியாதவளாகத் தலைவி வருந்துகிறாள். இதன் வெளிப்பாடே **"கார்காலம் கொடியது"** எனத் தலைவி கூறக்காரணம் எனலாம்.

◈ கணவனின் பிரிவைத் தாங்கமுடியாத மங்கையர்களின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்நீர் ஏன் ஓடுகிறது. அவர்களின் துக்கமேலீட்டால் ஏற்பட்டதே. மேகங்கள் மழையைப் பொழிகின்ற காலம் இக்காலம். மன்மதன் தன் கரும்புவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைத்து (ஐவகை அம்புகளையும் செலுத்தி) காதல் நோயைப் பெருக்கடையச் செய்யும் காலம் இக்காலம். ஆண் மயில்கள் இன்பம் மிகுதியினால் தோகை விரித்து ஆடுகின்ற காலமும் இம் மழைக்காலமாகும்.

"மாரவேள் சிலைகுனிக்க மயில் குனிக்கும் காலம்"

இக்காலமாகும். குளிர்காலததில் மங்கையர்களின் தனங் களும், கொன்றைமரங்களும் முறையே பொன்போன்ற தேமலுடனும், பூக்களுடனும் மிகுதியாக மலர்கின்ற காலமாகும். இவ்வாறான காலத்தில் தாமரைகளும், முல்லைகளும் செழித்து மலரும் காலம் ஆகும். இதனைப் புலவர் கீழ்வருமாறு கூறுகிறார்.

"கொங்கைகளும் கொன்றைகளும்
பொன் சொரியும் காலம்"

◈ இக்காலம் கொடைச்சிறப்புடைய நந்திவர்மனின் காதல் அருள் கிடைக்காது வருந்துகின்ற காலம் இக் கார்காலமாகும். ஏனெனில் தலைவன் போர் மேற்சென்று பகைவரை அழிக்க வேற்றூர் சென்றுவிட்டான் பிரிந்து, எனவே அவன் காதல் கிடைக்காது தலைவி வருந்தும் காலம் இக் காலமாகும், கார்காலம் ஆகும். மன்னன் உலாவரும் போது அதனைக் கண்டு காதல் நோயால் மங்கையர் வருந்தும் காலம் இக் காலமாகும்.

"தியாகியெனும் நந்தியருள் கிடைக்காதகாலம்"

◈ இவ்வாறான கார்காலத்தில் தலைமகளும் தம் காதல் உணர்வு களைப் பரிமாறிக் கொள்ள முடியாது பிரிந்து சென்ற தலைவன் இன்னும் வரவில்லை; பிரிவுநோய் என்னை வருத்துகின்றது. காதல் நோயால் அவதிப்படுகிறேன். கார்காலம் பல வகையாலும் பிற உயிர்கள், மரம் செடி கொடிகளுக்கு இன்பம் பயந்தும்; தலைவி யாகிய நான் இன்பம் பெறாது வருந்துகின்றேனே. தலைவனை வேறொரு இடத்திலும், என்னை இங்கேயும் தனியாக ஆக்கிவிட்டதே இக்கார்காலம். என எண்ணி வருந்துகிறாள்.

எனவே இவ்வாறு தலைவன், தலைவியர் ஒன்றுகூடித்தன் இன்பம் அனுபவித்தற்குரிய சந்தர்ப்பத்தைக் கார்காலத்தில் இழந்து தவிக்கிறேன். எனவே இக்கார்காலம் என்னை வஞ்சித்துவிட்டது. எனவேதான் இக்கார்காலம் கொடியது எனத் தலைவி கூறுகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனின் பிரிவுக்குக் காரணமான ஏனைய உயிர்களுக்கு இன்பத்தைக் கொடுக்கும் கார்காலத்தை இவ்வாறு கொடியது எனக் கூறக் காரண மாகும்.

6. **"அங்குயிரும் இங்குடலும் ஆன மழைக்காலம் அவரொருவர் நாமொரு வர் ஆன கொடுங்காலம்..." எனத் தலைவி கூறுவதன் சிறப்பு யாது?**

இங்கே கார்காலத்தில் வருவதாகச் சொல்லிச் சென்ற தலைவன் இன்னும் வரவில்லை. இதனால் தலைவனின் வரவை எதிர்பார்த்து எனது உயிர் என் ஊர்விட்டு தலைவனைத் தேடி வேற்றூர் சென்றுவிட்டது எனவும்; உடல் மட்டும் இங்கே தனியாக வெற்றுக் கூடாக நிற்கின்றது.

இவ்வாறு என்னைத் தலைவனின்றி தனியனாக் கியது மட்டுமின்றி, ஏனைய உயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும் இன்பத்தை அள்ளித்தரும் கார்காலம் எனக்கு மட்டும் ஏன் தலைவ னைப் பிரிந்து வாழச்செய்து தனியனாக காதல் நோயைத் தீர்க்கத் தலைவனின்றி வருத்தியது?

இவ் அவஸ்த்தைக்குக் காரணம் இக்கார்காலமல்லவா? எனவேதான் இம் மழை காலத்தில் இவ்வாறு தனியனாக வருந்தும் நிலையைத் தந்தது எது? கார்காலமல்லவா. இதனால் இக்காலம் கொடியது கொடியது. எனத் தலைவி கூறக் காரணமாயிற்று.

7. **நந்திவர்மன் மன்னனின் போர்த்திறனும், வெற்றியும் எவ்விதம் மன்னன் தூதனுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்துக.**

**பா** : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**கலம்பக உறுப்பு** : மறம்

**உறுப்பு விளக்கம்** : பெண் கேட்டு வந்த தூதுவனின் நாட்டு மன்னனை இகழ்ந்து, தன்நாட்டுப் பெருமை கூறல்.

**பொருள்** : நந்திவர்மனின், வீரமறவன் ஒருவனிடம் பெண் கேட்டுவந்த பகை நாட்டு மன்னனின் தூதுவனிடம், தன் நாட்டுப் பெருமை கூறி இழித்துரைத்தல்.

அழகிய முத்துக்களாலான மாளிகைகளையுடைய தள்ளாற்று நகரில் நிகழ்ந்த போரிலே நந்திவர்ம மன்னனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிபணியாத பகை வேந்தர்களின் படைகள் யாவும் அழிக்கப்பட்டன. அவ்வாறு அழிக்கப்பட்ட பகைவர்களின் யானைப்படைகளின் கொம்புகள் அல்லவா நமது இச் சிறிய குடிசையில் சிறியதூண்களா கவும், நீண்ட வளைச்சட்டங்களாகவும் உள்ளன. வேண்டுமாயின் இச்சிறுகுடிசையை நீயே குனிந்து ஐயத்தைத் தீர்த்துக் கொள் பார்த்து என வீரமறவன் கூறுகிறான்.

"…. தெள்ளாற்றில் நந்திபதம்
சேரார் ஆனைக்
கொம்பன்றோ நம்குடிலில்
குறுங்காலும் நெடுவளையும்
குனிந்து பாரே "

இவ்வாறு பகைவர்களின் யானைப்படைகளையே சுக்கு நூறாக்கி அவ்வாறு இறந்த யானைகளின் தந்தங்களைக் கொண்டு குடிசைகள் ஆக்கியது நந்திவர்மனின் படைப்பலம் என்பதை இங்கே நந்திவர்ம மன்னனின் வீரமறவன் (போர்வீரன்) கூறுகிறான். அத்தோடு பெண்கேட்டு வந்த நாட்டு மன்னனை இதன் மூலம் இகழ்கிறான். இவ் வீரமறவனிடம் பெண்கேட்டு வந்த பகை நாட்டு மன்னனின் தூதுவனிடம் இவ்வாறு தன்நாட்டுப் பெருமை கூறுகின்றான். இவ்வாறு நந்திவர்மனின் தன் நாட்டுப் பெருமை, வீரமறவனால் பகையரசனின் தூதுவனுக்கு எடுத்துக் கூறப்படுகின்றது.

**7. நந்திவர்மனின் ஆற்றலும், குலப்பெருமையும் எவ்விதம் தூதுவனுக்கு வீரமறவனால் எடுத்துரைக்கப்படுகின்றது?**

அரசர் தூதனாக அனுப்பிய தூதுவனே! அம்பினை ஏற்றுக் கொள்ளும் என் வில்லானது ஒடிந்துள்ளது (முறிந்துள்ளது) அதன் பூட்டுக் கயிறும் தேய்ந்து அறுந்து காணப்படுகிறது. நானோ வயதால் மூப்படைந்துள்ளேன். அசைந்து தளர்ந்து போயிருக்கிறேன் என்று உன் அரசர் எண்ணியுள்ளாரா? இதனை இச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நறுமணம் நிறைந்து பொருந்திய கூந்தலையுடைய எனது மகளை திருமணம் பேசி வர உன்னை உனது மன்னன் அனுப்பியுள்ளார். இது பொருத்தமானதா?

"அம்பொன்று வில்லொடிதல் நாண் அறுதல் நான் கிழவன்
அசைந்தேன் என்றோ
வம்பொன்று குழலாளை மணம்பேசி விரவிடுத்தார்
மன்னர் தூதர்… "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குலப்பெருமை பற்றி அரசர் அறியாரா? கூறுகிறேன் கேள், நந்திவர்மனின் போர்ப் படைகள் பகையரசர்களின் நாடுகளைச் சிறைப்படுத்தி; நந்திவர்மனைப் பணியாத பகையரசர்களின் தொகையான யானைப் படைகளைக் கொன்று குவித்துள்ளன. இவ்வாறு கொன்ற யானைகளின் பெருந்தொகைத் தந்தங்களை இச் சிறுகுடிசைகளில் சிறுதூண்களாகவும், நீண்ட வளைச் சட்டங்களாகவும் பயன்படுத்தியுள்ளனர். இதனை நீ ஐயமின்றி அறிய வேண்டின் குனிந்து பார் என்று கூறும் வகையால் நந்திவர்ம மன்னனின் குலப்பெருமையும், போர்த்திறமையும் பாராட்டப்பட்டுள்ளது. இக்குலப்பெருமையும், திறமையையும் உன் அரசர் அறியாரோ? என நந்திவர்மனின் வீரமறவன் கூற்றால் கூறுமுகத்தால் தெளிவுபடுத் தப்பட்டுள்ளது.

"நந்திபதம் சேரார் ஆனைக்
கொம்பன்றோ நம்குடிலில்
குறுங்காலும் நெடுவளையும்
குனிந்து பாரே"

எனப் புலவர் காட்டுவார்.

8. **"நந்தி பதம் சேரார் ஆனைக் கொம்பன்றோ நம் குடிலில் குறுங்காலும் நெடுவளையும் குனிந்து பாரே" என்ற பாடலடியின் சிறப்பினைத் தருக.**

மறம் கடிந்து, அறம் போற்றிய நந்திவர்மனின் போர்த் திறனின் பெருமையும், குலப்பெருமையும் இப்பாடலடியில் காட்டப் படுகின்றது. நந்திவர்மனின் திருவடியினைப் பணியாத பகையரசர் களின் படைகள் அழிக்கப்பட்டு நாடுகள் கைப்பற்றப்பட்டன. பகை யரசர்களின் போர்த்திறம் மிக்க யானைப் படைகள் பெருங்கொண்ட தொகையின; இவையாவும் ஒன்றுமின்றி அழிக்கப்பட்டு, அவ்யானை களின் தந்தங்கள் அகற்றப்பட்டு அவ் யானைத்தந்தங்கள் கொண்டு இச் சிறு குடிசைகளின் சிறுதூண்களாகவும், நீண்ட வளைச் சட்டங்களாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டுள்ளது.

இங்கே பகைவர்களின் படைகளை அழித்து நாட்டைத் தம்அடியின் கீழ் பணிய வைத்த நந்திவர்மனின் படைச்சிறப்பின் பெருமிதம் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

◈ அங்கே அழிக்கப்பட்ட யானைகளின் தந்தங்களைக் கொண்டு சிறுகுடிசையை அமைத்துள்ளமை என்று கூறுமுகத்தால் படைச் சிறப்பும், வெற்றி வாகையும் சிறப்பிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ மேலும் பகைவர்களின் யானைப் படையின் தந்தங்களைக் கொண்டு சிறுகுடிசை அமைத்துள்ளமை பகையரசர்களின் ஆற்றாமையையும் தோல்வியையும், நகைப்புக் கிடமாக எடுத்துக்காட்டும் சிறப்பு வாய்ந்த னவாகும்.

◈ இதனோடு மட்டும் நின்றுவிடாது தூதனாக வந்தவனைக் கொண்டு சிறுகுடிசையைக் குனிந்துபார்த்து உன் ஐயத்தைத் தீர்த்துக் கொள் எனக் கூறுவதனால் நந்திவர்மனின் படைத்திறனையும், போர் வலிமையையும், தம் அடிபணிவித்த பகையரசர்களின் எண்ணிக்கை யையும்

"நந்திபதம் சேரார் ஆனைக் கொம்பன்றோ நம்குடிலில்
குறுங்காலும் நெடுவளையும் குனிந்துபாரே"

எனக் கூறுமுகத்தால் யானைகளின் கொம்பினைக் கொண்டு நந்திவர்மனின் போர்த்திறனை அறிந்துகொள், எம் குலப் பெருமையை அறிந்து கொள் எனச் சிறப்பாகப் புலவர் கூறியுள்ளமை மட்டுமின்றி அதனை நீ நிச்சயப்படுத்திக் கொள் என்ற சிறப்பும் காட்டப்பட்டுள்ளது.

இங்கே குனிந்துபார் எனக் கூறுவதன் மூலம் நந்திவர்மன் மன்னனின் போர்த்திறனையும் அடிபணியவைத்த பகையரசர்களை நகைப்புக்கிடமாகக் கூறப்படுவதன் சிறப்பினையும் காணலாம்.

இதனை
".........செம் பொன்செய் மணிமாடத் தெள்ளாற்றில்
நந்தி பதம் சேரார் ஆனைக் கொம்பன்றோ நங்குடிலில் குறுங்காலும்
நெடுவளையும் குனிந்து பாரே"

என மறவனால் கூறப்படுகிறது.

1. **"நந்திக் கலம்பகம்" பற்றி நீர் அறிந்தவற்றைத் தொகுத்துச் சுருக்கமாக விபரிக்குக.**

தமிழ் இலக்கியக் களமானது பரந்து விரிந்தது. தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்புமிக்க இலக்கிய வகைகள் காலம் தோறும் தோன்றி வளர்ந்தே உள்ளது. கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டளவில் தோன்றிய இலக்கியம் '**நந்திக்கலம்பகம்**' எனலாம். கலம்பக நூல்களுள் தலைமை சான்றது இந்நூலாகும். தொண்டை மண்டலத்தைச் சிறப்புடன் ஆண்ட நந்திவர்மனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் கண் உள்ள செய்யுள்கள் கற்பனை நயம் மிக்கவை. கற்கும் தோறும் சுவைபயப்பன. பல்வகைப் பொருள் பற்றி வெவ்வேறு செய்யுள் வகைகளைக் கொண்டு நூறு பாட்டுக்களில் அமைந்த சிற்றிலக்கிய வகை '**கலம்பகம்**' எனப்படும் நந்திவர்மன் என்னும் பல்லவ அரசனைப் புகழ்ந்து பாடியமையால் '**நந்திக் கலம்பகம்**' எனப் பெயர் பெற்றது. சிற்றிலக்கிய காலம் நாயக்கர் காலம் எனப் போற்றப்பட்டாலும் அதற்கு முன்னரே இச் சிற்றிலக்கிய வகை தோற்றம் பெற்றமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

நந்திக்கலம்பகத்தால் நந்திவர்மனது ஆட்சி, புகழ் கொடை வீரம், கல்வி, காதல் முதலியவற்றை அறியமுடிகிறது.

'**நந்திவர்மன் இறந்தான்; அறம் வைத்துப் பாடப்பட்டு இறந்தான்; அதற்கு அறம்பாடிய புலவன் தமிழைக் கருவியாகக் கொண்டான்..**' என நினைக்கும்போது அது எப்படி என அறியும் ஆசை இயல்பாக ஏற்பட்டு விடுகிறது. வசைச் சொற்கள் எதுவும் நேரடியாக வெளிப்பட்டு விடாமல், விழுமிய நோக்கில் 'நந்திக்கலம் பகம்' ஆசிரியர் இவ்விலக்கியத்தைப் படைத்தார். இப்படைப்பு தமிழுக்குத் தன்னிகரற்ற படைப்பு எனலாம். ஆனால் இதை எழுதிய ஆசிரியர் யார்? என்பது பற்றி அறியமுடியாமை ஒரு பெருங்குறையே ஆகும்.

தெள்ளாற்றில் நடைபெற்ற போரில் பகைவர்களை வென்று வாகைசூடிய மூன்றாம் நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இந்நூல் பாடப்பட்டது. எனினும் தமிழின் சிறப்பை எடுத்துக்கூறும் பல இலக்கியங்களுக்கு இவ்வாறாக ஆசிரியர் பெயர் தெரியாது போவது நாம் செய்த பாவம்? என்றே கூறவேண்டும்.

இந்த நந்திக்கலம்பகத்தில் பதினேழு கலம்பக உறுப்புக்கள் பயின்று வருகின்றன. '**பல்வேறு கலம்பக உறுப்புக்களும், பாவனைகளும் கலந்துவர யாக்கப்படுவது கலம்பகமாகும்.**' இக்கலம்பக நூலில் தமிழ் அக இலக்கியத் திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்களும் அதன் துறைகள் மற்றும் வெட்சி, கரந்தை, வாகை, நொச்சி, பொதுவியல், கைக்கிளை, முதலிய புறததிணைத் துறைகளும் பயின்று இன்பம் தருகின்றது.

நந்திவர்மன் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பல்லவ நாட்டை ஆட்சிசெய்தவன். அவனது தந்தை பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திவர்மன் தந்திவர்மனுக்குப் பல்வேறு மனைவியர்களுக்குப் பிறந்த புதல்வர்கள் நால்வர் இருந்தனர். இவர்கள் நந்திவர்மனைப் போரில் வென்று தாங்கள் ஆட்சிக்கு வரவேண்டுமென அவர்கள் பெருமுயற்சி செய்கின்றனர். அவர்களது முயற்சிகள் யாவும் நந்திவர்மனின் வீரத்தின்முன் தவிடுபொடியாயின. இவர்கள் நந்திவர்மனை நேரடியாகக் கொல்ல இயலாமை தெரிந்து சூழ்ச்சியால் கொல்லத் திட்டமிடுகின்றனர். இதன் விளைவாகப் பிறந்ததே **நந்திக்கலம்பகம்** ஆகும். தலைவன், தலைவி கூற்றாக இலக்கியம் அமைவதால் இச்சூழ்ச்சிகளை உணர இயலவில்லை.

கலம்பக இலக்கியங்கள் பாடிய நந்தியின் சகோதரன் சமணத்துறவியாவான். கலம்பகம் பாடிய பின்பு நிலையாமையை உணர்ந்து, தான் பாடிய பாடல்களைப் பாடியவாறு காஞ்சிபுரத் தெருக்களில் பிச்சை எடுத்துத் திரிகிறான். இவன் பாடும் பாடலில் **நந்திவர்மன் மன்னன்** இறப்பதுபோல் அதில் குறிப்புத் தோன்றுவதை கணிகை, காவலர்கள் அறிகின்றனர். இதனை மன்னனுக்குத் தெரிவிக்கின்றனர். இப்பாடலில் **ஒன்றே வானுறுமதியை அடைந்துன் வதனம்** என்பதாகும்.

ஒருநாள் சமணத்துறவி சிவனடியார் வடிவில் வேடம்பூண்டு அரண்மனையை அடைகிறான். இவ்வேடத்தில் வந்த முனிவனை நந்திவர்மன் பாடல்களைப் பாடும்படி வேண்டினான். எனினும் சகோதரன் என்ற பாசம் முனிவனைத் தடுத்தது. ஆனால் விதி மன்னன் பக்கம் வலிமையாக இருந்ததால் பாடும்படி மன்னன் வற்புறுத்தினான் சரிபாடுவதாக ஒப்புக் கொண்ட புலவன் கீழ்வருமாறு செய்ய வேண்டுமெனக் கூறினான்.

பச்சை ஓலைகளால் நூறு பந்தல்கள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு பந்தலிலும் அலங்காரத்தோடு நீ அமர்ந்து பாடல்களைக் கேட்க வேண்டும். ஒரு பாடல் முடிந்ததும் பந்தல் எரிந்துவிடும் நீ அடுத்த பந்தலுக்குச் செல்ல வேண்டும். இறுதிப் பாடலில் நீ இறுதிச் சடங்குக்கானவற்றைப் புனைந்து பிணம்போலப் படுக்கவேண்டும். இறுதிப் பாடலின்போது விறகில் தீ பற்றும், நீ எரிந்து போவாய்; இதற்குச் சம்மதமா? என முனிவன் கேட்டான். நந்திவர்மன் அதனை ஏற்றுக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொண்டான். பந்தல்கள் அமைக்கப்பட்டன. சிவனடியார் வேடத்தில் வந்திருந்த தம்பி பாடினான். அவன் கூறியபடி பாடப்பாடப் பந்தல்கள் எரிந்து சாம்பராயின.

இறுதியாக, "ஈமச் சடங்குகள் செய்த பந்தலில் பிணம்போல் மன்னன் படுத்தான். பாடல் பாடி முடிந்தது, மன்னனது உடல் நெருப்பில் வெந்து சாம்பலானது." நந்திக் கலம்பகத்தால் நந்திவர்மன் மாண்டான் இக்கருத்தை,

'நந்திக் கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்'

என சோமேசர் முதுமொழி வெண்பா கூறுகிறது. நந்திவர்மன் சிறந்த சிவபக்தன் என்பதை இவ் இலக்கியத்தால் உணரப்படுகிறது. இவ் இலக்கியத்தில் நாராயணன், கங்கைநாடன், கங்கை மணாளன், சந்திரகுலப் பிரகாசன் போன்ற பலபெயர்கள் நந்திவர்மனுக்கு வழங்குகின்றன.

இவ்வாறு சூழ்ச்சி செய்து நந்திவர்மனை இறக்கச் செய்தமை தமிழ் கூறும் நல்லுலகுக்கு ஒரு கறை படிந்த செங்கோலாட்சி வீழ்த்தப்பட்ட காலம் எனலாம். இவ்வகை நந்திக் கலம்பகத்தை தமிழறிந்த நாமனைவரும் கற்றுப் பயன் பெறவேண்டும்.

இவ்வாறு சூழ்ச்சி செய்து நந்திவர்மனை இறக்கச் செய்தமை பற்றி தமிழ்கூறும் நல்லுலகு நன்கு அறியும். இக்காலம் செங்கோலாட்சியில் கறைபடிந்த காலமாகும். இவ்வகை நந்திக்கலம் பகத்தைத் தமிழறிந்த நாமனைவரும் கற்றுப் பயன் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 · பாரதி கவிநயம்

1. **பாரதியார் உலகில் சிறந்த கவிவாணர்களுள் ஒருவராக மதிக்கப் படக் காரணமென்ன எனப் "பாரதி கவிநயம்" என்ற கட்டுரை கூறுகின்றது?**

◈ இவரது பாடல்கள் அனைத்தும் நயம் நிறைந்த பயன் மிக்கவை யாகும்.

◈ இவர் வாணியின் அநுக்கிரகத்தைப் பெற்றவராக விளங்கினார். இதனால் இவரது பாடல்கள் விழுமியப் பொருளும், ஒழுகிய ஓசையும் கொண்டவை.

◈ இனிய தமிழ்ப் பாடல்கள் பலவற்றை உலகுக்கு அளித்திருந்தமை; பெருமைக்குரியவர்.

◈ இனிமையும், எழிலும் ததும்பி மிளிரும் கவிச்சுவை கொண்டவை இவரது பாடல்களாகும். எனவே மக்கள் விரும்பினர்.

◈ துன்பத்திலே படிந்து வாழ்க்கையில் வெறுப்புற்றோருக்கு ஆதரவு தந்துதவும் மருந்து போன்றன இவரது பாடல்களாகும்.

◈ தேசிய உணர்ச்சியை உண்டு பண்ணும் நோக்கமுடைய பாடல் களைப் பாடியமை.

இவர் பாடாத பகுதியே இல்லை. பண்டிதர், குழந்தைகள் தொடக்கம் பாமரர் வரை பாடி அறிந்து மகிழும் பாடல்கள் இவரது பாடல்களாகும். எனவேதான் உலகில் சிறந்த கவிவாணர்களுள் ஒருவராக இவர் போற்றப்படுகிறார்.

2. **பாரதியார் பாடல்களைப் பாட எவ்விதம் அவருக்கு அருள் கிடைத் தது எனக் கூறப்பட்டுள்ளது.**

◈ இவர் கலைமகளினுடைய அருளினைப் பெற்ற உண்மைக் கவிஞர் ஆவார்.

◈ இவர் வாணியின் அநுக்கிரகத்தைப் பெற்றவராய் இருந்தமையால்தான் விழுமியம் மிக்க ஒழுகிய ஓசைகொண்ட பாடல்களைப் பாடமுடிந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. பாரதியாரின் கவிச்சுவை, மானிடர்க்கு இன்பத்தை விளைக்குங் காலவெல்லை வரையும் இனிமையும் எழிலும் ததும்பி விளங்கும் எனக் கட்டுரை ஆசிரியர் கூறக் காரணம் என்ன?**

◈ இவரது பாடல்கள் அனைத்தும் நலம்மிக்க நீர்மை (ஒழுக்கம்) பயப்பன.

◈ விழுமியப் பொருளும் ஒழுகிய ஓசையும் கொண்ட இன்றமிழ் (இனிய தமிழ்) பாடல்களாகும்.

◈ பாடலின் கவிச்சுவை மானிடர்க்கு இன்பத்தை விளைவிப்பன.

◈ துன்பத்திலே படிந்து வாழ்க்கையில் வெறுப்புற்றோருக்கு ஆதரவு அளித்து அரவணைப்பன இவரது பாடல்களாகும்.

◈ சுவையும், இனிமையும் கொண்ட இனிய தமிழ் செய்யுள்களாக எவரும் படித்துச் சுவைக்கக் கூடிய இலகு நடையில் ஆக்கப்பட்டவை யாக இப்பாடல்கள் அமைந்துள்ளன.

◈ எனவேதான் மானிடர் இன்பம் பயக்கும் காலம் வரைக்கும் பாரதியார் கவிதைகள் நிலைத்து விளங்கும் எனலாம்.

**4. பாரதியாரின் பாடல்களை நாம் எவ்விதம் அணுகிப் போற்றுதல் வேண்டும்?**

◈ பாரதியார் தம்முடைய தேசத்தாருக்குத் தேசிய உணர்ச்சியை உண்டுபண்ணும் நோக்கமாக **"வீரமுரசம்"** போன்ற தேசியப் பாடல்களை மாத்திரமே பாடியுள்ளார் என அனேகர் கருதுகின்றனர். அவ்வாறு நாம் பார்க்காது அதன் உண்மைத் தன்மையைத் தேடி உணருதல் வேண்டும்.

◈ பாரதியார் எழுதிய தேசியப் பாடல்கள் மொத்தச் செய்யுட் தொகையில் ஏழிலொன்று மட்டுமே. அத்தொகையினை மட்டும் வைத்துக் கொண்டு அவரது தனித்தன்மையை ஆராய முற்படக்கூடாது.

◈ அவர் எழுதிய கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு, காட்சி, வேதாந்தப் பாடல்கள், பாஞ்சாலிசபதம் என்ற இவற்றைப் படித்துச் சுவைப்பதன் மூலம் அவரது பாடல்களின் சிறப்பை உணர்ந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ தமிழ்மொழியறியாத மானிடர்க்காகப் பிறமொழியில் இன்னிசைப் பாடல்களைப் பிறமொழியில் பெயர்த்தெழுத வேண்டும். எட்டுத்திக் கென்றும் அதன் மணங்கமழ நாம் போற்றுதல் வேண்டும்.

◈ தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியாரின் கனவை நாம் நனவாக்க வேண்டும்.

இவ்விதமே நாம் பாரதியாரின் பாடல்களின் பெருமையைப் பரவி அணுகுதல் வேண்டும் எனலாம்.

**5. பாரதியின் கவிநயத்தினை சிறு வியாசத்தினுள்ளே அடக்கிவிடுதல் முடியாது என்பதனை எவ்விதம் நியாயப்படுத்தலாம்?**
**"ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது வந்த செல்வம்" போலப் பாரதியாரெனும் மலரை அளித்தது எனக் கூறக் காரணம் என்ன?**

◈ பாரதியார் தனது கவிவளத்தைப் பல்வேறு வகைகளினூடாக எமக்களித்திருக்கிறார் எனக் கூறின் மிகையாகாது.

◈ இயற்கையின் அழகையையும், பசுமையையும், இனிமையையும் ஒன்றுதிரட்டிப் பாடலாக்கித் தந்துள்ளார்.

◈ காணிநிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும். எனப் பாடும் பாரதியார் முத்துச்சுடர் போன்ற வெண்ணிலவும், பத்துப் பன்னிரண்டு தென்னைமரமும், கீற்றும் இளநீரும், காதில் விழுங் குயிலோசையும், பாட்டுக் கலந்திட ஒருபத்தினிப்பெண்ணும் வேண்டும் எனக் கூறும் பாரதியார், பராசக்தியின் அருட்பாவையும், காவலும் வேண்டும். இவ்வித நிலை ஏற்படின்

"பாட்டுத்திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திட வேண்டும்...."

என இவ்வாறு வையகத்தை இன்பமுடன் தன்வசமாக்கிக் கொள்ளக் **காணிநிலம் வேண்டும்** எனப் பாட்டிசைத்தவன் பாரதியார் எனலாம்.

◈ மன நிறைவு என்பது எது? என்பது பாரதியின் **காணிநிலம் வேண்டும்** என்ற பாடலிலேயே விளைகின்றது. நிறைந்துள்ளது எனலாம். பிறமொழியாளரால் எழுதப்பட்ட மனநிறைவு என்ற பாடல் கள் கூடப் பாரதியின் பாடலுக்குக் கீழ்ப்பட்டதே எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ இயற்கையை வர்ணிப்பதில், பிற உயிர்களிடம் அன்பாகப் பழகுவதில், பறவைகள், பூஞ்சோலைகள், வேங்கைகள் நிறைந்த காடுகளை வர்ணிப்பதில் கூடக் கவிஞர் கைதேர்ந்தவராக விளங் கினார். இவ்விதக் கவிதைக்குச் சான்றாக **கண்ணன் என் காதலன்** எனக் கருதும்பாட்டில் நாம் இவ்வியல்பினைக் காணலாம்.

"மிக்க நலமுடைய மரங்கள்
விந்தைச் சுவையுடைய கனிகள்
பக்கத்தையும் மறைக்கும் வரைகள் - அங்கு
பாடி நகர்ந்து வரும் நதிகள்.."

(வரைகள் - மலைகள்)

எனக் கூறி இன்புறுகிறார். இவரது பாடல்கள் படிப்பறி வில்லாதோரும் பாடி இன்புறத்தக்கவை. பொருளறிந்து புகழத்தக்க சிறப்புக் கொண்டவை. இவ்விதமாக இப்பாடலிலே மிக இன்பமயமாகப் பாடி ரசித்து மகிழ்கிறார்.

◆ இவரது பாடல்களைப் படிக்கும் போது அவர் வர்ணித்த வனப்புக்கள் யாவும் கண்முன் தோன்றிக் காட்சி தருமாறு விந்தை மிக்க பாடல்களை ஆக்கினார்.

"ஆசைபெற விழிக்கும் மான்கள் - உள்ளம்
அஞ்சக் குரல் பழகும் புலிகள் - நல்ல
நேசக் கவிதை சொல்லும் பறவை - அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு."

எனச் சிறந்த மொழிவளம் பொருந்த இன்றமிழ் பொதிந்த பாடல்களைப் பாடும் வல்லமை வாணியின் அருளால் பாரதிக்குக் கிடைத்த பேறே எனக் கூறிவிடலாம்.

◆ வள்ளிக்கும் முருகனுக்கும் கிளியைத் தூதாக விடுவதைப் பொருளாகக் கொண்டு பாடல் பாடி

"அல்லிக் குளத்தருகே - ஒருநாள்
-------------------------
சொல்ல வல்லாயோ கிளியே............"

எனப் பாடி காதலர்களின் மனோபாவங்களை தெளிய வைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ காதலன், காதலி பிரிவும், அதனால் ஏற்பட்ட வருந்துகையும் காட்டிப்பாடிய பாரதியார் பிரிந்தவர்கள் மீண்டும் கூடும்போது ஏற்படும் இன்பத்தை அள்ளி அழகாகச் சொரிந்து பாடியுள்ளமை பெருமைக் குரியது.

"மேனி கொதிக்குதடி - தலை சுற்றியே
---------------------
இந்தவையகம் மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும் - பிரிவென்ப தோர்
நரகத் துழலுவதோ"

எனக் காதலர் பிரிவு என்பதை நரகத்தில் அலைந்து திரிகின்ற இழிந்த நிலையுடன் அவதிப்படுகிறேன் என அப்பட்டமாகக் கூறும் ஆற்றல் பொதிந்தவர் இவராவார்.

◈ காதற்கதைகளுக்கெல்லாம் கருவாக அமைந்தது அவரது குயிற்பாட்டு எனலாம்.

"------------------------
கூடல் கூடல் கூடல்
கூடிப் பின்னே குமரன் போயில் வாடல் வாடல்"

என்ற பாடலடி மூலம் தனது காதல் வெளிப்பாட்டினை மட்டுமன்றி வேதாந்தக் கருத்துக்களையும் உள்ளார்த்தமாக வெளிப்படுத்தியவர் பாரதி எனலாம்.

◈ காதல் வாழ்க்கை ஓட்டத்தில் காதல் குன்றி விடுவதனால் காதலி வேதனைப்படுவதனையும் ஆற்றாது அவர் அடையும் வேதனையையும் சோதனையையும் கண்ணனைக் காதலனாகக் கருதும் பாடலில் சிறப்பித்துக் காட்டுவார்.

"பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் - மிகப்
பிழையிருக்குதடீ தங்கமே தங்கம்...."

எனக் கூறிய பாரதி

"பண்ணொன்று வேய்குழலில் ஊதிவந்துவிட்டான்
அதைப்பற்றி மறக்குதில்லைப் பஞ்சையுள்ளமே.."

என தலைவனை மறக்க முடியாது காதல் பெருக்கை வேண்டி நிற்கும் தலைவியின் வாஞ்சையை அப்பட்டமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தும் ஆற்றல் பாரதிக்குக் கைவந்த கலை எனக் கூறிவிடலாம்.

◈ பாரதியின் குழந்தைப் பாடல்களும், குழந்தையின் செய்கைகளும் குறும்புகளும் பற்றிக்கூறும் பாரதி அத்தோடு குழந்தைகள் பெற்றோருக்கு ஊட்டும் மகிழ்ச்சியையும் காட்டத் தவறவில்லை.

"கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி...."

என்ப் பாடிய பாரதி

"சொல்லு மழலையிலே - கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே - எனது
மூர்க்கம் தவிர்த்திடுவாய் ... "

எனப்பாடி குழந்தைகள், பெற்றோருக்கு மழலைச் சொல்லாலும், முல்லைச் சிரிப்பாலும், செய்கையாலும் மகிழ்வூட்டுவது மட்டுமன்றி எமக்கு ஏற்படும் மூர்க்கத்தனமான கோபத்தையும் இல்லாது செய்து விடுகின்றன இக்குழந்தைகள் எனப் பௌத்திரமான சொற்களால் பாடியிருப்பது அவர் ஒரு உண்மைக்கவிஞன் என்பதை நிரூபணமாக்குகிறது எனலாம்.

◈ உண்மைப் பொருளான தெய்வம் எங்கும் நிறைந்துள்ளான், எனப் பாரதி நம்பினான். அவன் பராசக்தியைப் போற்றி

'காட்டு வழிகளிலே - மலைக்
காட்சியிலே புனல் வீழ்ச்சியிலே பல...'

எனக் கூறும் புலவன்

'வேட்டுவர் சார்பினிலே - சில
வீரரிடத்திலும். வேந்தரிடத்திலும்
மீட்டுமவள் வருவாள்....'

எனப் பராசக்தி நிறைந்துள்ளமையைப் பெருமையாக அருளுணர்வுடன் பாடுகிறார் பாரதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வல்லமை தந்திடுவாள் - பராசக்தி
வாழியன்றே துதிப்போம்.......... "

எனக் கூறும் பாரதி வல்லமை தருவாள் பராசக்தி என நம்புகின்றார். அவரது நம்பிக்கை வீண்போகவில்லை. பாரதிக்குப் பாட்டுப்பாட வல்லமையை பராசக்தி கொடுத்தாள் எனலாம். அவளைத் துதித்து வணங்குவோம் எனப் பாடினார்.

◈ பாரதியார் வேதங்களை நன்கு உணர்ந்த பின்பே **காட்சிப் பாடல்களைப்** பாடினார் எனக் கூறலாம்.

'ஞாயிறே. இருளை என்ன
செய்துவிட்டாய்?
ஓட்டினாயா? கொன்றாயா?
விழுங்கிவிட்டாயா? '

எனப் பாடும் பாரதி வேதத்தின் தெளிவும், ஞானமும், பொருந்த உயர்தரக் கவிச்சுவை நிரம்ப உள்ளார்ந்த பொருளுடன் பாடியுள்ளார்.

◈ **பாஞ்சாலி சபதம்** என்ற பகுதியிலே பாரதி தனது அனைத்து ஆற்றல்களையும் பிரயோகித்துப் பாடல்கள் சமைத்தார் என்பதைக் கீழ்வரும் பாடலடிகள் விளக்கி நிற்கின்றன.

◈ பாரதியார் சுதந்திர வேட்கை கொண்டு உணர்ச்சிமிகு கவிதைகளை அள்ளிப் பாடியவர், கேட்பவர் அனைவரும் பாரதியின் பாட்டுக்கு மயங்கினர்.

" கண்ணபிரானருளால் - தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணி புதிதாய்
வண்ணப் பொற் சேலைகளாம் - அவை
வளர்ந்தன. வளர்ந்தன. வளர்ந்தனவே "

எனப் பாஞ்சாலி சபதத்தின் ஊடாகச் சுதந்திரமற்று அடிமைகளாக வாழும் எம் சமூகத்தில் சுதந்திர ஒளி வீச வேண்டும் நாம் அனைவரும் நம் தமிழ்மொழியில் பேச நம் தேசத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை வேண்டும் என்ற கருத்து உள்ளார்ந்தமாக பொதிந்ததாகக் கவிதையை ஆக்கிச் சுதந்திர உணர்ச்சியை பாரதமக்கள் மனத்தில் மட்டுமல்ல அடிமைப்பட்ட நாடுகள் அனைத்திலும் விதைத்து வெற்றிகண்ட போக்கும், பெருமையும் பாரதிக்கு உண்டு எனலாம்.

எனவே பாரதி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, பண்டிதர் தொடக்கம் பாமரர் வரைப் பாடிப் பரவக்கூடிய வகையில் இலகு நடையின் இன்பம் பயக்கும் பாடல்களைப் பாடினார். பாரதியால் பாடல் இயற்றாத பகுதியோ, பொருளோ இல்லை எனக் கூறிவிடலாம். இவ்வாறு இன்பத்தமிழ் பாடல்களை எல்லா வகையுள்ளும் பாடி, '**தன் பாட்டுத்திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்தவர்**' பாரதி எனக் கூறலாம்.

7. **பாரதியார், இயற்கையை விரும்பிப் பாடுவதில் வல்லவர் இதனைப் "பாரதியார் கவிநயம்" என்ற பாடற்பகுதியை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.**

பாரதியார் இயற்கையின் விந்தைகளை ரசிப்பதில் விருப்பமுடையவர். இயற்கையை இனிய சொற்களால் வர்ணிப்பதில் சிறந்து விளங்கியவர். இதனை அவரது பாடல்களில் காணலாம். இயற்கையின் அழகையும், பசுமையையும் இனிமையையும் ஒருங்கு திரட்டிப் பாடியவர். மரமும், கனியும், வரையும், (மலையும்) நிதியும், மானும், புலியும், பறவையும், பாம்பும் பற்றிப் பாட்டுப்பாடியவர்.

◈ 'மிக்க நலமுடைய மரங்கள் - பல
விந்தைச் சுவையுடைய கனிகள் .....!'

எனப் மரங்களைப் பாடும் பாரதியார் மீண்டும்.

"ஆசைபெற விழிக்கும் மான்கள் - உள்ளம்
அஞ்சக்குரல் பழகும் புலிகள் - நல்ல
நேசக் கவிதை சொல்லும் பறவை - அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு"

எனக்கூறி இயற்கையையும், இயற்கையில் வாழும் மரங்கள், உயிரினங்களையும் வர்ணித்துப் பாடினார்.

◈ சிறுகுழந்தை, பெற்றோருக்குத் தரும் மகிழ்வை இவ்வளவு தூரம் எக்கவிஞரும் விபரித்தது கிடையாது. ஆனால் பாரதியார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி ....!
சொல்லு மழலையிலே - கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே - எனது
மூர்க்கம் தவிர்த்திடுவாய் "

என்று பாடிய பாரதி முல்லைப் பூப்போன்ற குழந்தையின் ஒளிபொருந்திய சிரிப்பால் எனது மூர்க்கத்தன்மை (முரட்டுச் சுவாபம்) கூட இல்லாது போய்விடுகிறது எனக் கூறுவான்.

◈ பராசக்தியின் மேன்மையைப் பாடும் இடத்தில்கூட இயற்கையை இவ்வாறு பாரதி வர்ணிப்பார்.

'காட்டு வழிகளிலே - மலைக்
காட்சியிலே புனல் வீழ்ச்சியிலே பல
நாட்டுப் புறங்களிலே .....'

இவ்வாறு இயற்கையையும், குழந்தையையும், பிற அனைத்தையும் பற்றி வர்ணித்துப் பாடியவர் பாரதியாவான்; சுதந்திர விடுதலை பற்றி ஆவேசமாகப் பாடியவனும் இவனே.

**8. பாரதியார் தனது பாடல்களில் பராசக்திதேவிக்கு முன்னுரிமை கொடுத்தார். இதனை மதிப்பிடுக.**

"காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்கு
தூணில் அழகியதாய் - நன் மாடங்கள்
---------------------
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித்தர வேண்டும்.."

எனவேண்டும் பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லுக் கடங்காவே - பராசக்தி
சூரத் தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாள் - பராசக்தி
வாழியென்றே துதிப்போம் "

எனப் பாடும் பாரதியால் தமக்கு வல்லமையைத் தர வேண்டும் என இறைஞ்சுகிறார். நாட்டு மக்களுக்காகப் பராசக்தியை வேண்டிய பாரதி.

"நாட்டு மக்கள் நலமுடன் வாழவும்
நானிலத்தவர் மேனிலை யெய்தவும்
பாட்டினிலே தனியின்பத்தை நாட்டவும்
-----------------------------------
பாட்டுப்பாடி பராசக்தியைத்
துதித்தவன் பாரதி எனக்கூறின் மிகையாது."

எனப் பாடல்களில் பராசக்தியை முன்நிலைப்படுத்தி னான் பாரதி .

9. **காதலருடைய மனோபாவங்களை அறிந்து பாடல்களை ஆக்கியவன் பாரதி மதிப்பீடுக.**

◈ பாட்டுக்கொரு புலவன் பாரதியடா கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா அவன் பாட்டைப் பண்ணோடு பாடினானடா எனக் கூறுமளவுக்கு பரந்த அளவில் எல்லாவற்றினிடையேயும் புகுந்து பாடல் ஆக்கியவன் பாரதி இவன் அணுகாத, புகாத இடமேயில்லை. பாரதி. காதலர்களுடைய இயல்பையும், போக்கையும் மனோபாவத்தை யும் நன்கறிந்தவன்.

◈ காதலன் வராமைகண்டு காதலி தன் பிரிவாற்றாமையினால் வருந்துவதும்; காதலி வராமை கண்டு காதலன் காதல் நோயால் பீடிக்கப்படுவதனையும் சிறப்பாக எடுத்துப் பாடும் பாரதி அவர்கள் இன்னல்கள் தீர்ந்து கூடும்போது அவர்களடைகின்ற மகிழ்ச்சியையும் கண்ணன் பாடல்களில் நன்கு காட்டியுள்ளார்.

கண்ணனைக் காதலியாகக் கருதிப் பாடும் பாடலில் காதலி வராமையினால் காதலனடையும் வருத்தத்தை '**கண்ணம்மா என்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலி' என்ற பகுதியில் உணர்ச்சி ததும்பப் பாடியுள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

"சுட்டும் விழிச்சுடர்தான் - கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக் கரியவிழி கண்ணம்மா!
வானக் கருமை கொல்லோ? "

எனப் பாடிய பாரதி;

"தீர்த்தக் கரையினிலே - தெற்கு மூலையில்
செண்பகத் தோட்டத்திலே
பார்த்திருந்தால் வருவேன் - வெண்ணிலாவே
பாங்கியோ டென்று சொன்னாய்
வார்த்தை தவறிவிட்டாய் - அடி கண்ணம்மா!
- - - - - - - - - - - - - - - - - - - - - - - -
மேனி கொதிக்குதடீ! தலை சுற்றியே
வேதனை செய்குதடீ!
வானிலிடத்தையெல்லாம் - இந்த வெண்ணிலா
வந்து கழுவுது பார்!
மோனத் திருக்குதடீ! இந்த வையகம்
மூழ்கித் துயிலினிலே
நானொருவன் மட்டிலும் - பிரிவென்பதோர்
நரகத்துழலுவதோ... "

இவ்வாறு இயற்கையை முதன்மைப்படுத்தி வெண்ணிலா எவ்வாறெல்லாம் நிலாவை எறிக்கிறது. இவ்வேளையிலே உலகமே படுத்து உறங்கும் வேளையில் காதலியே! உன்னைக் காணாது நான்மட்டும் விழித்திருந்து நரகத்தில் அலைகின்றேன் எனக் காதலியின் பிரிவையாற்றாது காதலனாக நின்று அவதியுறுதலை அவர் பாடலில் உணர்ச்சி பொங்கக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூடிப் பிரியாமலே - ஓரிரவெலாம்
கொஞ்சிக் குலவி யங்கே
ஆடி விளையாடிய - உன்றன் மேனியை
ஆயிரங் கோடி முறை
நாடித் தழுவி மனக் - குறை தீர்த்து நான்
நல்ல களி யெய்தியே
பாடிப் பரவசமாய் - நிற்கவே தவம்
பண்ணியதில்லை யடி"

◈ எனத் தனது மனக்குறையையும், பிரிவற்று நாம் கூடல் காண வேண்டும். இவ்வாறு உன்னை நாடித் (அருகே வந்து) தழுவி என் மனக் குறை தீர்ப்பேன் என மிகவும் காதலனுக்குரிய குறைகள் யாவும், விருப்புகள் யாவும் தீர்ப்பேன் என அவதியுறும் காதலனை எம்முன் நிறுத்தியவன் பாரதியார் அவர்கள்.

'**குயில் பாட்டின்**' மூலமாக உள்ளார்த்தமாக வேதாந்தக் கருத்துக்களையும், வெளிப்படையில் காதற்கதைகளையும் எடுத்து வெளிப்படுத்தும் பாரதி,

".........காதலோ காதலினிடைக் காதல் கிடைத்திலதேல்
சாதலோ சாதல் எனச் சாற்றுமொரு பல்லவி ........."

எனக் காதல் கிடைக்காவிடின் சாதல் சாதல், எனப் பரிதவிக்கும் பாரதி,

"காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்'

எனக் காதல் கிடைக்காவிடின் சாதல் என சாற்றும் பாரதி பின்பு இவ்வாறு பாடுகின்றான்.

'உறுதி உறுதி உறுதி
உறுதிக்கேயோர் உடைவுண்டாயின்
இறுதி இறுதி இறுதி'

எனவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கூடல் கூடல் கூடல்
கூடிப்பின்னே குமரன் போயின்
வாடல் வாடல் வாடல்'

என்ற வரிகளினூடாகக் காதலுக்கெல்லாம் முடிவு என்ன **'வாடல் வாடல்'** தான் உலகக் காதற் கதைகளுக்கெல்லாம் முடிவு இது தான் முடிவு என வருத்தத்தோடு குயிற்பாட்டில் கூறுவார்.

காதலி, காதலன் பிரிவால் வருந்துவதை இவ்வாறு உணர்ச்சியோடு பாடும் பாரதி,

◈ "தூண்டிற் புழுவினைப் போல் - வெளியே
சுடர் விளக்கினைப் போல்
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சம் துடித்ததடீ!
பாலுங் கசந்ததடீ! சகியே
படுக்கை நொந்ததடீ..."

என்றும்.

"ஆற்றங் கரையதனில் முன்னமொரு நாள் - எனை
அழைத்துத் தனியிடத்தில் பேசிய தெல்லாம்
தூற்றி நகர்முரசு சாற்றுவ னென்றே
சொல்லி வருவையடி தங்கமே தங்கம்."

என இயற்கையைத் தன் காதல் உறவுக்கு இணையாக சேர்த்துப் பாடிய பாரதி

'பற்றி மறக்குதில்லை பஞ்சையுள்ளமே
நேரமுழுதிலுமப் பாவி தன்னையே - உள்ளம்
நினைத்து மறுகுதடீ தங்கமே தங்கம்'

எனக் கண்ணன் என் காதலன் என்ற பாடலில் காதலி மனநிலையையும், வருத்தத்தையும் வெளிப்படுத்தும் பாட்டுகளாக இவை காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசைமுக மறந்து போச்சே - இதை
ஆரிடம் சொல் வேனடி தோழி?
நேசம் மறக்கவில்லை நெஞ்சம் - எனில்
நினைவு முக மறக்கலாமோ? "

எனக் காதலனின் பிரிவாற்றாமையால் காதலி புலம்பலைக் '**கண்ணன் என் காதலன்**' என்ற பகுதியில் பாரதி காட்டுகிறார். இவ்வாறு காதலன், காதலி தம் காதல் நிகழ்வினை நடாத்திச் செல்லும் அனைத்தையும் பாடலில் உயிரோட்டமாகப் பாடியவன் பாரதி என உலகத்தோரால் மதிக்கப்பட்டான்.

இவ்வாறு சிறுகுழந்தைகள், பண்டிதர் தொடக்கம் பாமரர் ஈறாகத் தம்பாடலை படித்தும், கேட்டும் இன்புறவைத்தார் பாரதியார். ஆயிர வருடத்திற்கு ஒருமுறை தமிழென்னும் கற்பக விருட்சத்தில் அரும்பி மலருகின்ற புஷ்பத்தைப் போல, இவ்வுலகில்

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா
அவன் பாட்டைப் பண்ணோடு பாடினானடா
கேட்டுக்கிறுகிறுத்துப் போனேனடா..."

எனக் கூறுமளவிக்குக் கவிவாணன் பாரதி அவதார புருஷராக அவதரித்தார் எனக் கூறிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியும் இலக்கியமும்
# தரம் 11

## பரீட்சை வினாவிடை முன்னோடி



வெளியீடு : இனிய தென்றல் பப்ளிகேஷன், கொழும்பு - 6

தொலைபேசி: 011 - 2360239, 5765331

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN:955-8621-14-5